ASTA COLLEGE
ESOL Skills For Life with Citizenship
CITIZENSHIP TEST
ILR and Nationality Citizenship applications
சனி மற்றும் ஞாயிறுகளிலும் Esol வகுப்புகள் உண்டு.
Esol Citizenshipக்குத் தேவையான தகுதிகள் கற்றுத் தரப்படும்.
Knowledge of Language and Life in UK
Nationality citizenship, ILR(PR)
Accredited College Home Office Approved
ASTA : Trident Business Centre,
89 Bickersteth Road, Tooting, London, SW17 9SH
Tel : 020 8355 3453 Mob : 07958 178321

BILINGUAL FORTNIGHTLY

ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 09 ♦ ISSUE - 188 ♦ FRIDAY 22 FEBRUARY 2013

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
- Personal injury (Neck,Back & Shoulder Pain)
- Replacement Vehicle (Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM

Krishna Fancy & Video
- இந்தியன் பேன்ஸி ஜீவல்லரி
- பார்ட்டி டெக்கரேசன்
- மணப்பெண் அலங்காரம்
- தென் இந்திய மலர்கள்
- டெய்லரிங், போன்கார்ட்
- பேக்ஸ் – ஜெராக்ஸ்
- விமான டிக்கெட்டு
- ஆடியோ – வீடியோ
- (தமிழ் – மலையாளம்)
- செய்தித்தாள்கள் (தமிழ்–மலையாளம்)

Tel: 0208 684 9835
307, London Road, Croydon, CR0 3PA
Fax: 0208 683 0852 | Mob: 07725869630

உலகின் எப்பாகத்திற்கும் நியாயமான விலையில் விமானச்சீட்டுகளை உடன் பெற்றிட நம்பிக்கையான தமிழ் நிறுவனம்
BRITISH AIRWAYS Preferred Partner
www.flyplaces.co.uk
Flyplaces
Worldwide Travel & Tours
COLOMBO FROM £169 +TAXES
CHENNAI FROM £189 +TAXES
TORONTO FROM £199 +TAXES
EXPRESS VISA SERVICES
இலங்கை,இந்தியா மேலும் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்றுவர விசா எடுத்துத்தரப்படும்.
NEW VISA
மேலதிக தகவல்களுக்கு எமது CROYDON அல்லது HAYES கிளைகளை நாடுங்கள்
IATA VISA MasterCard Maestro DELTA
We accept all major debit & credit cards
Note: All fares mention above are low season, excluding taxes/ terms & conditions apply.
இன்றே தொடர்புகொள்ளுங்கள்
020 8866 3311

On Time Tours
- Wales Temple £35 (pp)
- Balaji Temple £30 (pp)
- Walsingnham Church £30 (pp)

European Tours
- France Lourdes

திருமண வைபவங்களுக்கும் வாகன ஒழுங்குகள் செய்து தரப்படும். Coaches Available
www.ontimeairports.co.uk
info@ontimeairports.co.uk
Tel - 020 8573 7258
Mob - 07899 925 958 (24 Hrs)

குழந்தைப் பாக்கியம் கிடைக்காதோர் வாழ்க்கைக்கு ஒளியூட்டுங்கள்!
நீங்கள் 35 வயதுக்குள் இருந்தால் கருமுட்டை தானம் செய்து அதற்கீடாக '£750' ஐ அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளுங்கள்
குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HARLEY STREET FERTILITY CLINIC
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
43 Devonshire Street, London, W1G 7AL
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

சென்னையிலிருந்து UK விசா
- தொழிலாளர் விசா
- தங்கியிருக்கும் விசா
- மாணவர் விசா
- சுற்றுலா விசா

UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
- இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
- எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.

Paul John & Co. Solicitors
115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk

SHOP FOR SALE
Supermarket / Off Licence Shop
Turn over per week : £6500
Rent : £12,000 |
Rate: £5,000
Price value : 55,000 + Stock
Location : N52 LL
Shop Opening Time : 8 AM to 11 PM
For More Details Please Contact :
Ali 020 7226 9148 / 07787135565

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

United College முதன்மை குடியுரிமை பெறும் பரீட்சைகள்

C1, B1 & B2 Test

Our services:

- ESOL with citizenship
- Point Base Test
- Spouse Visa Test
- Multilingual Staff

You Pay Only Once,
We Train You until You Pass

பிரித்தானியா பற்றிய விடயங்களை ESOL பயிற்சி மூலமும் குடியுரிமை வகுப்புக்கள் மூலமும் அதியுச்ச பயிற்சி வழங்குகின்றோம்.

சனி மற்றும் ஞாயிறுகளிலும் வகுப்புக்கள் உண்டு.

நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்- மேலதிக கட்டணம் இல்லை

உங்கள் பரீட்சைக்கு தயார் படுத்தும் வகுப்புகளுக்கு	£ 150 .00 மட்டுமே * Including Everything	Certificate only in six days	இங்கே சனி 10.00 மணிக்கு ESOL வகுப்புக்கள் உண்டு

Head Office - Croydon
14 Lombard Business Park, 2 Purley Way,
Croydon CR0 3JP.
Tel: 0208 1509 953 | 0753 8933 261

West London
38A, The Broadway, Southall, UB1 21PT
Tel: 0207 998 4867
Mob: 0741 5882 072

REFRIGERATION - AIR CONDITION - SHOP FITTING

UK COOL
AND SHOPFITTING Ltd.

168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk

---

ESOL with Citizenship Test

- ஆங்கில எழுத்து, வாசிப்பு அறிவு அவசியம் இல்லை
- Certificates within 6 days / சான்றிதழ்
- for British Citizenship / பிரித்தானியா பிராஜாவுரிமை
- for Permanent Residency / நிரந்தர வதிவிடவுரிமை

Personal Licence £ 235 *

- (மதுபானம் விற்பதற்கான) ID எடுத்துத் தரப்படும்

Tuition classes for 11+, GCSE & A' Level

தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
* Croydon * Barking

Tel: 020 3239 2187
0740 287 1921

SURREY PAWNBROKERS

(அடைவு கடை)

உங்கள் நகை அடைவில் உள்ளதா ?

அதி கூடிய வட்டியா ?

கவலை வேண்டாம்!

நாம் நேரில் வந்து உங்கள் நகைகளை மீட்டு
குறைந்த வட்டியில் மீள் அடைவு செய்து தரப்படும்.

- நகை அடையவும் மீள் அடைவும் - FOR £1000 MONTHLY £30
- பழைய புதிய நகைகள் வாங்குதல் - HIGHEST PRICED PAID
- நாணய மாற்று சேவை - EURO, USD, CAD BEST RATE GURANTEED
- காசோலை மாற்றுதல் - CHEQUE CASHING

உங்கள் நகைகளுக்கு
பிரித்தானியாவில் அங்கீகாரமும், உத்தரவாதமும் பெற்ற
ஒரே தமிழ் நிறுவனம் SURREY PAWNBROKERS

தொடர்புகளுக்கு: **Surrey Pawnbrokers**

94, TOLWORTH BROADWAY, TOLWORTH,SURREY, KT6 7HT

T: 0208 399 9176 M: 07947 579 682

தன்னார்வலர்கள் தேவை

ஜோதி
நலமான உள்ளம் மகிழ்வான வாழ்வு

AHILAN FOUNDATION

Volunteers Needed

அகிலன் அறக்கட்டளையினரின் "ஜோதி" ஆலோசனை
மையம் நடத்தும் உதவி தொலைபேசி
(Help-line) இல் இணைந்து செயற்பட
தன்னார்வலர்கள் தேவைப்படுகிறார்கள்

ஆற்றுப்படுத்தல் சேவை (counselling) பராமரிப்பாளர்
சேவை போன்றவற்றில் சேவை அனுபவம் உள்ளவர்கள்
அல்லது தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

உங்கள் விபரங்களை 31-03-13க்கு முன் அனுப்பி வையுங்கள்

உங்கள் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி

Mrs. Yoga Perinpanathan, 75 Lennard Road, London, SE20 7LY

இவ் விளம்பரம் தொடர்பான மேலதிக
உடன் விபரங்களுக்கு அழையுங்கள்

07903 943 560

காலம் கழிந்தவை

கடைகளிலை பொருட்கள் வாங்கு கிறபோது, best before date ஐ பார்த்து வாங்குகிறோம். மனிதர்கள் விடயத் தில் கற்றவர்கள் அறிஞர்கள் விடயத் தில் அவர்கள் வாழும் போதும், சாவடைந்த பின்னரும் மக்களுக்கு நன்மை செய்பவர்களாகவே இருப்பர். ஆனால் போலி அறிஞர்கள் விசயத் தில் expiry date இருக்கிறது என்றே நம் புகிறேன். இப்படித்தான் மு.நித்தி யானந்தன் என்ற காலம்கழிந்த நபர் ஒருவர் ஈஸ்ட்ஹாம் இல் நடைபெற்ற 'காலம்' சஞ்சிகையின் விழாவின் போது *ஒரு பேப்பர்* ரை பற்றி புறணி சொல்லியது. ஒரு வேளை அறளை பெயர்ந்து விட்டதோ?

- அழகானந்தன்

பேசும்பொருள்

ஜீரிவி தொலைக்காட்சியில் இளைய தம்பி தயானந்தா over build up உடன் நடாத்துகிற நிகழ்ச்சியின் பெயர் பேசாப்பொருள். ஆவனவன் ஒரு கான் பியரை அடிச்சிட்டும், அடியாம லும் வழமையாய்பேசுகிற விடயங்கள் தான் இதில் பேசப்படுகிறது. இந்த நிகழ்ச்சிக்கு விருந்தினராக வாறவை, நெல்சன் மண்டேலா அகதிமுகாமிலை இருக்கேக்கை ஆமி வந்து பிடிச்சது எண்டு அரிய தகவல்களை (பச்சை பொய்) மக்களுக்கு சொல்ல, இலக்கிய வாதி தயானந்தா கவிதை வடிவிலை ஆமா போடுகிறார். பேசாப்பொருட் களுக்கு தலைப்புத் தேவையென்றால் தரலாம். 'பெண்களுக்கு எதிரான வன் முறை', 'ஒரு பால் தொடர்புகள்', 'சமூகத்தில் குடிப்பழக்கம், போதை வஸ்து பாவனை'. இப்பிடி அடுக்கிக் கொண்டு போகலாம்.

- இணுவை ரங்கன்

ஷரியா சரியா?

ஷரியா சரியா பிழையா என்ற விவாதங்கள் எல்லாம் எதுக்கு நடாத் திறியள் எண்டு தெரியேல்லை. இந்தச் சட்டத்திற்கும் தமிழர்களுக்கும் என்ன சம்பந்தம் என்று எனக்கு விளங்க வில்லை. சவுதி அரேபியாவிலை இருக் கிறவை உங்களை மாதிரி வேலை மினக்கெட்டு 'தேசவழமைச் சட்டம்' சரியா பிழையா என்று விவாதம் நடாத்திக் கொண்டிருக்கிறார்களா?

- பிரவீணா

கூழ் பானைக்குள் விழுந்ததுகள்

ஒரு பேப்பர் காரர் என்ன என்ன சம யத்தை சேர்ந்தவர்கள் என்று ஆராய்ச்சி நடாத்தி முடிவுகளை ஒரு சிங்கள (ஆங்கில) இணையதளத் திலை வெளியிட்டிருக்கிறார் ஒரு மெத்தப் படிச்ச ஆள். பெரியடாக்குத்தர் பட்டம் பெற்றவர். இப்பிடியா அறப்படிச்சதுக ளுக்கு வேறை வேலை இல்லையோ? தமிழ்நாட்டிலை இருக்கிற உமர் என்ற இளம் வழக்கறிஞர், இலங்கைத் தமிழர் விசயத்தில் ஐ.நா. பொறுப் பில்லாமல் நடந்தது பற்றி ஆய்வு செய்து கட்டுரை வெளியிடுகிறார். இவர் என்னென்டால் பூனையை பிடிச்சு சிரைச்சுக் கொண்டிருக்கிறார்.

- கணேந்திரன்

கொழும்பிலை எலெக்சனிலை நிக்கலாமோ?

ஐ.நா. மனிதவுரிமைச் சபை கொண்டுவரவிருக்கிற தீர்மானம் சிறி லங்காவுக்கு எதிரானது இல்லை. சிறிலங்காவின்ரை நன்மைக்குதான் தீர்மானம் கொண்டு வரியினம். சிறி லங்காவில அன்பு இருக்கிறாக்கள் கட்டாயம் இதை ஆதரிக்கோணும் எண்டு மூண்டு மொழியிலையும் கேட்டிருக்கிறார் கூட்டமைப்பின் தேசியப்பட்டியலில் வந்த சுமந்திரன். ஐயா உங்கடை சிறிலங்கா பற்று புல் லரிக்குது. ஆனால் இதை அடுத்த முறை தேர்தலில் போட்டியிட்டு சிங்கள வாக்குகளையும் பெற்று வெற்றி பெற்றிட்டு கதைக்கோணும். வடக்கு - கிழக்கு தமிழ்மக்களின் வாக்குகளால் இடைக்கிளாலை வந்திட்டு இப்பிடி கதைக்கக் கூடாது.

- ஆறுமுகம்

பிலிம் காட்ட வேண்டாம்.

இங்கத்தைய கட்டமைப்பு பொட் டம்மான் போன்றோர்களால் சொல் லப்படுவதை கேட்டு நடந்ததால் தான் சீரழிவுகள் வந்தது என்கிறார் சுகந்த குமார் (GTF) தனம் (TCC) இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள். ஏன் என்றால் ஒரு காலம் ஒன்றாக வேலை செய்தவர்கள் பொட்டம்மான் வந்த பின்பு தான் தெரியும் என்ன சீரழிவு என்று அதுவரை காத்தி ருப்போம்.

இந்த சுகந்தனுக்கு புலிக்கொடியும் பிடிக்காதாம் என்று சொல்கிறார். பின்பு எப்படி போராளிகளையும் புலி தலைவர்களையும் பிடிக்கும்?

எல்லாம் அரசியல் வியாபாரம் விடு தலைப் போராட்ட வரலாறும் தெரி யாது. பொது அறிவும் இல்லை. கோட் டும் சூட்டும் போட்டதும் வெள்ளைக் கார துரை என்று நினைப்போ? TV இல் வந்து பிலிம் காட்ட வேண்டாம்.

- கரிகாலன் (நம்பிக்கெட்ட தமிழன்)

சரவணகுமாரின் கைது

ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுத்து போராட்டங்களை முன் னெடுத்துவரும் சேவ் தமிழ் இயக்கத் தின் அமைப்பாளர்களில் ஒருவரான சரவணக்குமார் தமிழ் நாட்டு பொலி சாரால் கைது செய்யப்பட்டுள்ளார். முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரை சிறையில் சந்திக்க சென்ற இடத்தில், அவர்களுக்கு வழங்கிய உணவுப்பொதியுடன் தற் செயலாக அவரது மொபைல் தொலை பேசியின் பற்றறியும் அதன் சார்ஜரும் இருந்ததை காரணம் காட்டி அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் விரைவில் விடுதலை செய்யப்பட வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

- ரமணன்

போஸ்ட்மான் சங்கரி

ஐநா தீர்மானம் சம்பந்தமாக மகிந் தவும் கடிதம் எழுதியிருக்கிறார் என்று இணையதளங்களிலை போட்டிருக் கிறார்கள். சிலதுகள் உயிரோடை இருக்கிறதே இப்பிடி கடிதம் எழுதி னால் மக்களுக்கு தெரியவருகிறது. சங்கரி இப்பவும் பேனை எடுத்து லெற்றர் கெட் இல எழுதிறவரோ அல் லது ரைப் பண்ணி மின்னஞ்சலாய் அனுப்பிறவரோ எண்டு எனக்கு அறிய ஆவலாய் இருக்கு. மின்னஞ்சல் என்றால் அவருக்கு ஒரு ஐபாட் வாங் கிக் கொடுக்கோணும், கழிப்பறை யிலை இருந்தே கடிதம் எழுதிறது வசதியாய் இருக்கும்.

- கயல்விழி

அம்மா என்றால் சும்மாவோ!

தலைவரின்ரை மகன் பாலச்சந் திரன் படுகொலை செய்யப்பட்ட விட யத்தை காரணம் காட்டி சிறிலங்கா விளையாட்டு வீரரை தமிழ்நாட்டுக் குள் கால்பதிக்க விடமாட்டேன் என உறுதியாக நிற்கிறார் அன்னை ஜெய லலிதா. அவருக்கு எங்களது வாழ்த்து களை தெரிவிக்கோணும். இப்பிடியான ஒருவர் தமிழ்நாட்டுக்குமுதலமைச்சராக இருப்பது தமிழருக்கு பெருமை.

- துரை மகேந்திரன்

தமிழீழ சுதந்திர சாசனம்

நாடுகடந்த அரசாங்கம் ஒரு சுதந்திர சாசனத்தை வெளியிடவிருப்பதாக அறிகிறேன். நல்லது. நாடுகடந்த அர சாங்கம் உருவாக்கினதுக்கு செய்த ஒரே ஒரு நல்லகாரியம் என்றால் இதா கத்தான் இருக்கும் வரவேற்போம்.

- செல்வமலர்

கருத்துக்களுக்கு : Tel : 020 7043 4314

எங்களது கடைசி எதிரி தான் மகிந்த

கொஞ்சப் பேர் ரணில் விக்கிரமசிங்கவை தற்போது கூட்டிக்கொண்டு திரியினம். தமிழர்களுக்கு தீர்வை தரப்போறாராம் என்று.. வரலாறு முக்கியம் நண்பர்களே..

2001 இலிருந்து மேற்குலகத்துடன் குறிப்பாக அமெரிக்காவுடன் சேர்ந்து தமி ழர்களை அழித்தொழிக்கும் திட்டத்தை வரைந்தவர் ரணில். அதெல்லாம் இங்கு எழுத பக்கங்கள் காணாது. தாம் நுட்பமாக வளைக்கப்பட்டுவிட்டதை உணர்ந்து - எப்படியும் அழிக்கப்படப்போகிறோம் என்பதை உணர்ந்து தலைவர் தூர நோக்கில் சிந்தித்து ரணிலை வீழ்த்தி மகிந்தரை ஜனாதிபதியாக்க முனைந்த தெல்லாம் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ரணில் ஜனாபதியாக இருந்திருந்தால் நாம் தற்போதுள்ளது போல் அழிக்கப் பட்டிருப்போம். ஆனால் போர்க்குற்றம், இனப்படுகொலை என்ற 'முள்ளிவாய்க் கால்' துருப்பு சீட்டை இழந்திருப்போம். நுட்பமாக படிப்படியாக அந்த அழிவு இருந்திருக்கும். தலைவர் தூரநோக்கில் இன வெறியனான மகிந்தவை தேர்ந் தெடுத்து எல்லோரையும் அம்பலப்படுத்தி முள்ளிவாய்க்கால் வரை இழுத்து சென்றார். இதை எல்லாம் உணர நீண்டகாலம் பிடிக்கும். எனவே மகிந்தரை விட மோசமான எதிரி ரணில். எனவே ஆட்சி மாற்ற கதைவிட்டு எங்களை பேய்க் காட்டுறதை நிறுத்திக்கொண்டால் நல்லது. எமது கடைசி எதிரி மகிந்ததான். முதலுடன் வட்டியும் சேர்த்து நாம் தீர்க்க வேண்டிய கணக்கு மகிந்தவுடன்தான். ஏனென்றால் அது தலைவர் தீர்மானித்தது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

மகாசனங்களே சிரியுங்கள்?

மஹிந்த ராஜபக்ஷ பிறப்பித்த 'ஒரு சிவிலியன் கூட கொல்லப்படக்கூடாது' என்ற உத்தரவை இலங்கை ராணுவம் எல்லாக் கட்டங்களிலும் ஏற்றுக் கொண்டு செயல்பட்டது. விடுதலைப் புலிகள், துப்பாக்கிச் சூடற்ற பகுதி களாக அறிவிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து சுட்ட போதும் கூட, இலங்கைப் படையினர், திரும்ப அந்தப் பகுதிகளுக்குள் குண்டு வீசவில்லை. சர்வதேச மனித நேய சட்டங்களையும், போர்ச் சட்டங்களையும் , போரின் எல்லா கட்டங் களிலும் அனுசரித்த ஒரு கட்டுப்பாடான ராணுவமாகவே இலங்கை ராணுவம் இருந்திருக்கிறது சிவிலியன் உயிரிழப்புகள் எல்லாம், விடுதலைப்புலிகளின் சட்டவிரோதச் செயல்களாலேயே நிகழ்ந்தது : இன அழிப்பு அரசின் இராணுவ நீதிமன்றம்

இப்படி ஒரு நகைச்சுவை துணுக்கு மனித குல வரலாற்றில் முன்பும் இருந்த தில்லை. இனியும் இருக்கப்போவதில்லை. வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப்போகும் என்பார்கள் எனவே மகாஜனங்களே சிரியுங்கள்..

(பின்குறிப்பு : குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள் தங்களைத் தாங்களே விசாரித்துக்கொண்டு தங்களை நிரபராதிகளாக அறிவித்துக்கொள்ளும் வர லாறு இங்கே இருக்கிறது. இதில் ஒன்றும் ஆச்சரியம் ஏதும் இல்லை: கேலம் மக்ரே - சானல் 4)

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

வரலாறு தொடரும்

'பல்கலைக்கழக மாணவர்களை வெருட்டித் தான் விடுதலை செய்திருப் பார்கள். இனி அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது' இது பலரது கவலை யாக இருக்கிறது. இது மாணவர்கள் குறித்து குறிப்பாக எமது போராட்டம் குறித்த தெளிவான பார்வை இல்லாததன் விளைவு.

எமது போராட்ட வரலாற்றில் அறவழியில் போராடிய யாழ் பல்கலை மாணவர் களின் பங்கு குறித்து பார்ப்பதென்றால் தேசியத்தலைவர் பிரபாகரனின் துணை வியார் மதிவதனியுடன் தொடங்க வேண்டும். பிற்பாடு கஜேந்திரன், திவ்வியன், தவபாலன் என்று நிறைய பேரை நாம் காணலாம். தற்போது இந்த நால்வரில் வந்து நிற்கிறது. இது ஒரு தொடர் சுழற்சி சக்தி.

கடந்த நவம்பர் 27 அனைத்துலகத்திற்கு தமிழர் விடுதலை தொடர்பாக மாணவர் சக்தி என்ற அடையாளத்துடன் ஒரு தெளிவான வரலாற்று செய்தியை சொன்னார்கள். அத்துடன் அவர்கள் பணி முடிந்துவிட்டது. இனி தொடரப் போவது புதிதாய் வந்திருக்கும் - வர இருக்கும் மாணவர்கள்தான்.

அவர்களும் தமது சமூகப்பாத்திரத்தை உணர்ந்து ஒரு வரலாற்றை எழுதுவார்கள். எந்த அச்சுறுத்தலும் அவர்களை அடிபணிய வைக்காது..

- கிருஸ்ணா

TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400
Head Office: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow TW4 6JQ
0207 099 2400
➡ESOL with Citizenship
▪ British Passport/ Naturalisation
▪ Indefinite Leave to Remain
➡International ESOL Diploma (A1,A2,B1,B2,C1,C2)
▪ Student Visa / Extension Test
▪ Spouse Visa / Extension Test
▪ Work Permit / Extension Test
▪ Courses from £200
▪ Successfully trained over 35,000 students
▪ Certificates within 20 days
▪ Multilingual staff
▪ City & Guilds approved centre
National Centres
BIRMINGHAM 7 Washington Street Birmingham B1 1JR 01216339919
SHEFFIELD Sorby House 42 Spital Hill, Sheffield S4 7LG 01143034303
LEICESTER Imperial House St Nicholas Circle, Leicester LE1 4LF 01163260248
LUTON 169 A, Dunstable Road Luton. Beds – LU1 1BW 01582723123
SLOUGH 18-24 Stoke Road Slough, Berkshire SL2 5AG 01753722056
NEWCASTLE 51-52 Victoria Avenue Whitley Bay,Tyne & Wear Newcastle Upon Tyne – NE26 2BA 01912525265
FREE INITIAL ASSESMENT
London Centres: Hounslow, Wembley, Kenton, Whitechapel, Camden, Holloway.

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, FEBRUARY 22, 2013, ISSUE 188

இனப்படுகொலையின் அங்கமே பாலகனின் படுகொலை

தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களது பன்னிரண்டு வயது மகன் பாலச் சந்திரன் சிறிலங்கா இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு சில மணித்தியாலங்களின் பின்னர் கொல்லப்பட்டமை பற்றிய ஆதாரங்களாக அமைந்திருக்கும் ஒளிப்படங் களை சனல்4 ஐ சேர்ந்த Callum Macrae வெளியிட்டுள்ளார். போரின்போது மக்கள் குடியிருப்புகள் மீது எறிகணைத்தாக்குதல் மூலமும், உணவு மருந்துத் தடை மூலமும் பல்லாயிரக்கணக்கான சிறுவர்களைக் கொன்ற சிறிலங்கா அரசு, தம்மிடம் சரணடைந்த சிறுவர்களையும் படுகொலை செய்துள்ளமை இப்போது நிரூபணமாகியுள்ளது.

புலம்பெயர்ந்து வாழும் ஊடகவியலாளர்களினது 'சனநாயகத்திற்கான ஊடக வியலாளர் 'அமைப்பு இப்படங்களை சனல்4 இடம் சேர்த்திருந்தது. இதிலிருந்து, சிறிலங்கா அரசாங்கத்தின் மானிடத்திற்கு எதிரான குற்றங்கள் பற்றிய விசாரணை சர்வதேச அனுசரணையுடன் சுயாதீனமான முறையில் நடாத்தப்படவேண்டும் என் பதில் அவர்களுக்குரிய அக்கறை வெளிப்பட்டுள்ளது. போர்க்குற்றங்கள் தொடர் பான ஆவணங்களை வெளிக்கொணர்வதில் இவ்வமைப்பினரினது, குறிப்பாக இவ் வமைப்பைச் சேர்ந்த சிங்கள ஊடகவியலாளர்களரின் பங்கு அளப்பரியது.

இது தொடர்பாக பிரித்தானிய, இந்திய அரசாங்கங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே மேற்படி ஒளிப்படங்கள் ஏறகாலத்தில் பிரித்தானியாவிலும், இந்தியாவிலும் வெளியிடப்பட்டன. தமிழ்நாட்டில் இவ் ஒளிப்படங்கள் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதனை அங்குள்ள அரசியல் தலைவர்கள் வெளியிட்டுவரும் கருத்துகளிலிருந்து அறிய முடிகிறது. இதுபோன்ற படுகொலைகள்இனப்படுகொலை என பொருத்தமான தருணத்தில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் தெரிவித்திருப்பது அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தது. ஏற்கனவே சிறிலங்கா மீது பொருளாதாரத்தடையினைப்கொண்டுவருமாறு நடுவன் அரசை வலியுறுத்திவரும் அவர் சிறிலங்கா வீரர்கள் கலந்துகொள்வதனை தடுப்பதற்காக தமிழ்நாட்டில் நடை பெறவிருந்த ஆசிய தடகளப் போட்டியை நிறுத்தி, தனது நிலைப்பாட்டின் உறுதித்தன்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

மேற்படி ஆதாரங்களை பொய்யென வாதிடுவதைத் தவிர,சிறிலங்கா அரசாங்கத் திடமிருந்து வேறெந்த செயற்பாட்டினையும் எதிர்பார்க்க முடியாது. ஆனால் சிறிலங்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தத்தயாராகிக் கொண்டிருக் கும் சில தமிழ் அமைப்புகள், இவ்விடயத்தின் பொறுப்புடன் செயற்படுவது அவசிய மாகிறது. இவர்களது நடவடிக்கைகள், சர்வதேச அளவில் ஒதுக்கப்படும் நிலைக்கு சென்று கொண்டிருக்கும் சிறிலங்கா அரசாங்கத்தினை காப்பாற்றுவதாக அமைந்து விடக்கூடாது.

ஒரு பேப்பர்

வணக்கம்!

***ஒரு பேப்பர்** க்கு ஆக்கங்களை அனுப்பிற ஆட்களுக்கு சில விதிமுறையளை நாங்கள் சொல்லிக்கொண்டு வாறம். அதை இன்னொருக் கால் சொல்ல வேண்டியிருக்கு. கொஞ்சம் கவனமாய் வாசியுங்கோ.*

*ஆக்கங்களை அனுப்பிறவை எந்த விசயத்தை பற்றியும் எழுதலாம் அவை தோதான விசயம் எண்டால் எங்கடை பெடி பெட்டையள் (அதானுங்கோ **ஒரு பேப்பர்** காரன்கள் காரிகள்) பிரசரிக்கிறதுக்கு எடுப்பினம். உங்கடை ஆக்கம் 600 சொற்களுக்குள் இருக்க வேண்டியது அவசியம். எப்பன் கூடினால் அங்கை இங்கை வெட்டி சமாளிச்சிடுவினம். நீங்கள் ஒரு 1000 சொற்களிலை எழுதி அனுப்பினால் எப்பிடி வெட்டிக் கொத்துறது எண்டு தெரியாமல் முளிசிக்கொண்டு இருந்திட்டு அருளாமல் குப்பை பெட்டிக்கிள்ளை போட்டிடுவினம். தாங்கள் ஏன் போடேல்லை எண்டதையும் ஒருதருக்கும் சொல்லமாட்டினம்.*

*சரி நீங்கள் அறுநூறு சொல்லுக்குள் எழுதி அனுப்பியிருந்தாலும் அதிலை கருத்திலை பிசகு வராமல் மாற்றம் செய்யிற உரிமை அவைக்கு இருக்கு. சில சொல்லாடலுகளை திருத்திறதற்கும், தலையங்கத்தை மாத்திறதிற்கும் அவைக்கு உரிமை இருக்கு. இதுகளை நீங்கள் ஏற்றுக்கொள்ளாட்டி தயவு செய்து எங்களுக்கு அனுப்பாதீங்கோ. இப்ப நீங்கள் கேட்கலாம், நாங்கள் கஸ்ரப்பட்டு எழுதி அனுப்ப நீங்கள் ஏன் வெட்டிக் கொத்திறியள் எண்டு. பொதுவா நாங்கள் ஒண்டையும் மாத்திறதில்லை. ஆனால் சிலசமயம் சில சொற்கள் பேப்பருக்கு ஏற்றதாய் இருக்காது. எங்கடை வாசகர்களை புண்படுத்துகிறதாய் இருக்கும் அதுகளை நாங்கள் பிரசுரிக்கேலாது. இன்னொண்டையும் சொல்லோணும், உங்கடை ஆக்கம் ஏற்கனவே வேறை ஒரு ஊடகத்திலை பிரசுரிக்கப்பட்டுள்ளது அல்லது பிசிசி (blind carbon copy) இல் உலகத்திலை இருக்கிற அத்தினை ஊடகத்திற்கும் அனுப்பிறிங்கள் எண்டால் தயவு செய்து சொல்லுங்கோ. இல்லாட்டி நீங்கள் அனுப்பின உடனை அப்பிடியே வெட்டி ஒட்டுற இணையதளகாரர், **ஒரு பேப்பர்** எங்கடை ஆக்கத்தை களவெடுத்துப் போடுது, போடுறதுதான் போட்டாங்கள் நன்றி என்றாவது போட்டிருக்கலாம் எண்டு சண்டைக்கு வந்திடுவாங்கள்.*

*இன்னொண்டு, **ஒரு பேப்பர்** ல வாற விசயங்கள் பற்றி சிலருக்கு விமர்சனங்கள் இருக்கும், அதை எங்களுக்கு அனுப்பினால் அவற்றை தவறாமல் பிரசுரிப்பம் (600 சொல்லு கணக்கை கவனிக்கோணும்). தேவையெண்டால் எங்கடை விளக்கத்தையும் தருவம். ஒரு சிலர் வேறை ஊடகங்களிலை ஒரு பேப்பரை பற்றி விமர்சிக்கினம். அது அவையின்ரை சுதந்திரம், ஆனால் அதுகளுக்கெல்லாம நாங்கள் விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்க எங்களுக்கு நேரமில்லை.*

*உப்பிடித்தான் ஒரு இணையதளத்திலை **ஒரு பேப்பர்** காரர் 'இந்து அடிப்படைவாதிகள்' எண்டு ஒருதர் பதிஞ்சிருக்கிறார். வழி தெருவிலை எங்களைக் கண்டாலே முறைச்சுக் கொண்டு போகிற லண்டன் சைவ முன்னேற்றக் கழகக்காரர்கள்தான் இதுக்கு பதில் சொல்லோணும்.*

அடுத்த பேப்பரிலை சந்திப்பம்...

***ஒரு பேப்பர்** காரன்கள் + காரிகள்*

More time and space is more of the same

Editorial Tamil Guardian

The report by the United Nations High Commissioner's Office, released last week on Sri Lanka, is another welcome voice to the chorus of heavy-weights slamming the state's crimes against the Tamil people in 2009 and its on-going failure to account for them – but it must be more. The atrocities of 2009 are now well-established, unavoidable truths, however, still there has been no hard action. Instead, acquiescing to Sri Lanka's hollow rhetoric, the state is granted time and space to sort itself out. A year after the UN Human Rights Council adopted a resolution on Sri Lanka calling for the most basic of measures, Navi Pillay's report makes clear that it has not. Four years of the international community, albeit begrudgingly, sitting on its hands in wishful waiting has not led to peace, reconciliation, accountability or justice. Instead Sri Lanka has continued its attack on the Tamil identity, people and homeland off the battlefield. The more time and more space Sri Lanka is granted, the more it will consolidate its Sinhala Buddhist hegemony on the island, and the more brazen and audacious it becomes.

Justice and accountability will only be achieved through an internationally orchestrated inquiry. There is no historic precedent to a domestic inquiry achieving this in Sri Lanka. The state has a long and tortuous history of failed commissions, succinctly dubbed by Amnesty International, as '20 years of make-believe' - that was four years ago. During this time, there has only been an increase in the country's dogged evasive behaviour. As the High Commissioner's report highlights, the state's judicial system and law enforcement agencies do not have the credibility to assure justice or accountability.

> Time and space will not alter this mindset, it will only give the state the opportunity to further entrench it into state structures.

All that has emanated from Sri Lanka is a prolonged and repetitive series of obfuscations and outright denial. The very notion of an investigation into abuses continues to provoke an unanimous backlash amongst the Sinhala nation. Spurred on by the masses, Sri Lanka has become increasingly hostile to actors that call for accountability, churning out the 'terrorist' label to slur not only Tamils, but non-Tamil critics of the state. This venomous invocation, accompanied by cries of usurping the country's sovereignty, will continue to be deployed as a deterrent for any international measures towards accountability. Sri Lanka's wolf-cries of imperialism cannot be an excuse for inaction.

A negotiated political solution that addresses legitimate Tamil grievances has only become more elusive. The government continues to stall talks with Tamil parties, employing a misleading bombast of negotiation via the 'South African Initiative', which has been slammed by Tamil parties, notably the Tamil National Alliance and the Global Tamil Forum as disingenuous engagement. Over a year later, the initiative has not yielded any tangible results, and it will not. There is no imminent solution to be found in South Africa. There can be no meaningful engagement when the Sri Lankan state's starting point is the complete negation of a Tamil nation, and the abject refusal to acknowledge the notion of Tamil autonomy, let alone the nation's right to self-determination.

Tamils are not viewed as equal citizens in the Sri Lankan state, but a minority, which if it knows its place, may be bestowed tolerance. Any state act, be it reconstructing a war-torn road or releasing Tamil students held under the notorious Prevention of Terrorism Act, is seen as a boon, with the Tamils expected to revere it as such. As the High Commissioner's report illustrates, this is not just the view of the Rajapaksa family, even civil servants reportedly saw the rebuilding infrastructure in the North-East, as an act of benevolence by the state, rather than a fulfilment of its obligations towards its citizens. Time and space will not alter this mindset, it will only give the state the opportunity to further entrench it into state structures.

> Justice and accountability will only be achieved through an internationally orchestrated inquiry. There is no historic precedent to a domestic inquiry achieving this in Sri Lanka.

The fourth anniversary of the end of armed conflict is dawning. The international community now possesses an impressive arsenal of reports, video footage and eye-witness testimony, and the High Commissioner's report is yet another welcome addition. The international community must now deploy it towards ensuring concrete and tangible action. Anything less than resolute will be rewarding Sri Lanka and granting them further reprieve - a concession that will not go unnoticed by other unruly states. More time spells more unrestrained Sinhala Buddhist chauvinism, and more space allows for uncontrollable impunity. Sri Lanka's macabre excesses and unruly defiances need to be reined in, swiftly and uncompromisingly.

லண்டனில் உலகத்தமிழர் பேரவையின் மாநாடு: சர்வதேசத் தலைவர்கள், பிரமுகர்கள் கலந்து கொள்கிறார்கள்

உலகத்தமிழர் பேரவை உருவாக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் பூர்த்தியடைகிற நிலையில், இலங்கைத்தீவின் தற்போதைய நிலையை சர்வ தேசத்திற்கு விளக்கும் வகையில் மாநாடு ஒன்றினை பேரவை நடாத்தவுள்ளது. பெப்ரவரி 27ம் திகதி புதன்கிழமை பிரித்தானிய பாராளு மன்றக் கட்டிடத்தில் முழுநாள் நிகழ்ச்சியாக நடை பெறவிருக்கும் இம்மாநாட்டில் சர்வதேச அளவில் அறியப்பட்ட அரசியல், மற்றும் மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள், பிரித்தானிய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

◆ துணைப்பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், கொன்சவேர்ட்டிவ் தலைவி

துணைப்பிரதமரும் லிபரல் டிமொகிரட் கட்சி யின் தலைவருமான நிக் க்ளெக், தொழிற்கட்சித் தலைவரும் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவ ருமான எட்வேர்ட் மிலிபான்ட கொன்சவேற்றிவ் கட்சியின் தலைவி Baroness Warsi சூழல்த்துறை அமைச்சர் எட்வர்ட் டேவி, நிழல் வெளிவிவகார அமைச்சர் டக்ளஸ் அலெக்சான்டர் உட்பட பல பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களும் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றவுள் ளதாகத் தெரியவருகிறது.

◆ மனிதவுரிமைத் துறைசார் வல்லுனர்கள்

சிறிலங்கா தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப் பதற்கு ஐநா செயலாளர் நாயகம் நியமித்த நிபு ணர்களில் ஒருவரான யஸ்மின் சூக்கா, மி டில்செக்ஸ் பல்கலைக்கழகத்தில் மனிதவரிமைச் சட்டத்துறைபேராசிரியர்களாகப்பணிபுரியும் Joshua Castellino, Elvira Dominguez Redondo, சென்னை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முனைவர் மணிவண்ணன் ஆகிய மனிதவுரிமை செயற் பாட்டாளர்கள் இலங்கைத்தீவின் மனிதவுரிமை பிரச்சனைகள் தொடர்பில் உரையாற்றவுள்ளனர்.

◆ தாயகத்திலிருந்து கூட்டமைப்பினர்

உலகத்தமிழர் பேரவையுடன் நெருக்கமாகச் செயற்பட்டுவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் சம்பந்தன், நியமன உறுப்பினர் சுமந்திரன் ஆகியோர் இம்மாநாட்டில் உரையாற்ற வுள்ளனர். சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், மாவை சேனாதிராசா ஆகி யோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது ஆன ால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு அழைப்பு வழங்கப்படவில்லை. மன்னார் மாவட்ட ஆயர் அருட்தந்தை இராயப்பு யோசப் அடிகளாருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளபோதிலும், அவர் வருகை தரமாட்டார் எனத் தெரியவருகிறது.

◆ நிமல்கா, சந்தியா

மனிதவுரிமைச் செயற்பாட்டாளர் நிமல்கா பெர் னான்டோ, சிறிலங்கா படையினரால் கடத்தப்பட்டு காணமல் போயிருக்கும் ஊடகவியலாளர் பிரதீப் எக்னாலியகொடவின் மனைவிசந்தியா எக்னாலிய கொட ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப் பட்டுள்ளபோதிலும், அவர்களது வருகை இச் செய்தி எழுதப்படும் வரையிலும் உறுதிப்படுத் தபடவில்லை.

◆ தோல்வியின் நாயகன் சூல்ஹெய்ம்

பேரழிவில் முடிவுற்ற விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சு வார்த்தைகளில் அனுசரணையாளக் கடமை யாற்றிய நோர்வேயின் பிரதிநிதி எரிக் சூல்ஹெய்ம் கலந்து கொள்கிறார். ஐநா மனிதவுரிமைச் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பிரதிநிதி களும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

◆ No Fire Zone பிரத்தியேகக் காட்சி

இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்ற மீறல் களை ஆவணப்படுத்தும் சானல் 4 தொலைக்காட் சியின் புதிய விவரணப்படமான No Fire Zone இம்மாநாட்டில் முதற் தடவையாக திரையிடப் படவிருக்கிறது. 'SriLanka Killing Fields' விவர ணத்தை தயாரித்த Callum Macrae இதனையும் தயாரித்துள்ளதுடன், நேரடியாக கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார். இவ்விவரணத்தில் உள்ள டக்கப்பட்ட காட்சிகள் தொடர்பில் பெரும் அதிர் வலைகள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. முத லாவது விவரணத்தில் தோன்றி சட்டரீதியான விளக்கங்களைத் வழங்கும் மனிதவுரிமை சட்ட வல்லுனரான பேராசிரியர் William Schabas மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் பெணகள்படும் அவலங்கள் தொடர்பாக எம்.சி.எம். இக்பால் தயாரித்துள்ள விவரணமும் இங்கு காண்பிக்கப் படவுள்ளது.

◆ அறிக்கைகள்

மேற்படி மாநாட்டை ஒட்டி மனிதவுரிமை காப் பகம், சர்வதேச முரண்பாடுகளுக்கான குழு என்பன சிறிலங்கா தொடர்பான தமது அறிக்கை களை வெளியிடவுள்ளன.

மனிதவுரிமை காப்பகத்தால் வெளியிடப்பட விருக்கும் "We Will Teach you a Lesson" Sexual Violence against Tamils by Sri Lankan Security Forces. என்ற தலைப்பிலான அறிக்கையில் சிறிலங்காப் படைக ளால் தமிழ் பெண்களுக்கு எதிராக நடாத்தப்படும் வன்முறைகள் தொடர்பான பாதிக்கப்பட்டவர்க ளின் சாட்சியங்கள் பதிவாகியுள்ளன எனத் தெரியவருகிறது.

High Time that Tamil Diaspora Did a Spring Cleaning!

By: Nadarajah Balasubramaniam (PFLT-UK)
People's Front of Liberation Tigers

"I am not saying that the political aspiration for Eelam is illegitimate, any more than I would argue that the Scottish National Party's goal for an independent Scotland is illegitimate. Similarly, I see nothing illegitimate in some crackpot demanding that Yorkshire or some other English county should become an independent state . What is crucial, however, is what methods are used by the SNP or the LTTE to achieve the goals. And the LTTE's methods are simply unacceptable". This is what Dominic Chilcot, the then British High Commissioner in Sri Lanka said in his the Dudley Senanayake Memorial Lecture on "the new diplomacy for the new century," at the BMICH on 11th December 2007.

This diplomat in one of his concluding statements dared to say, " The British government would continue to take steps against the LTTE in the UK, to prevent public demonstrations of support for the LTTE and to disrupt fund raising." This is typical of each and every British diplomat and most politicians. The arrogant Briton will never learn!

Killings of Tamils though shocking to civil humanity is only one aspect of the Lankan genocide. It also involves other brutal forms of cruelty under Lanka's official 'winner takes all' policy; it rapaciously snatches away from Tamils their homeland, assets, homes, land, livelihood and even human dignity (including the modesty of women) under the Sinhala supremacist's military occupation.

"Why is the government so reluctant to allow any external inquiry, instead of providing a rallying point for PRO-LTTE activists worldwide?". This is the preasent concern of the perpetrators of the genocide of Tamils.

The paradox about the Sri Lankan situation is that it is universally agreed that the war against the LTTE was a necessary evil war. The LTTE was given several chances to negotiate and when the government decided that it could no longer allow terrorism to continue, the world concurred with this. But now, there is unreasonable pressure being exerted without any real basis for allowing such an inquiry, is the Sri Lanka's governments standard position.

The present Indian establishment by the bias and short-sightedness of RAW defied all public opinion and dragged the entire region of southern South Asia into turmoil. The Sonia Congress gov. should have known that the war was not going to be confined to the island of Sri Lanka, but will be fought involving Tamil Nadu too. They lost their sight in their enthusiasm to kill the Eelam Tamils only because they supported the great LTTE.

The Co-chair countries must have at the appropriate time neutralized the disastrous Indian adventure that is even today totally bereft of public support, by stopping the war. UK government has to take full responsibility for the nasty act of the EU. The UK wanted to please India at any cost only because of its future economic dependence.

The audacity of this argument is clear from David Cameron's recent visit to India, . It makes good sense for the UK government to put India high on its priority list, after all they are the main perpetrators of the Tamils genocide, "After all, we are significant investors in each other's economies" are the nice words David Cameron could come out with in the open. We Tamils, and the LTTE know all these games and we enjoy the thought, "how weak are these two great countries" soaked in Tamil blood. They both know very well that the LTTE needs no arms or armed struggle any more. Prabhakaran is simply watching the march towards the great nation, Eelam.

The few among the Eelam Tamils and the Diaspora Tamils who are prepared to denounce Eelam either because they are disillusioned of the struggle or just because they harbour bias and vindictiveness for the action of the LTTE should realize that the national course of Eelam Tamils is larger and a righteous issue.

Already a space is emerging and if not it has to be negotiated for the Eelam Tamils and its diaspora of all shades, to creatively and freely engage itself in the building of the nation, without compromising on Eelam and without sabotaging the struggle.

The firm demand and support of the people of Tamil Nadu, not settling down for anything less than the creation of an independent and sovereign nation state for Eelam Tamils, is the strongest check against the folly of the present Indian Establishment.

Killings of Tamils though shocking to civil humanity is only one aspect of the Lankan genocide. It also involves other brutal forms of cruelty under Lanka's official 'winner takes all' policy; it rapaciously snatches away from Tamils their homeland, assets, homes, land, livelihood and even human dignity (including the modesty of women) under the Sinhala supremacist's military occupation.

The World Tamilar Protection Conference (WTPC) in its second session conducted in Kuala Lumpur in Malaysia on Friday, the 9th of November 2012, declared that it recognises the need to understand the question of Eezham Tamils in terms of their claim for Historical Sovereignty, Earned Sovereignty and Remedial Sovereignty in their territory.

"The emancipation comes when you realise that rights cannot be won by the mercy of others. Independence is achieved through uprising of people and their resolve. The unity of Tamil Nadu, Eelam Tamils and the diaspora holds the key. The next phase is to evolve joint action based on mass struggle from the three dimensions. I am convinced about big changes taking place in Tamil Nadu. Mu'l'livaaykkaal has brought a historic task on to World Tamils."

Mr. C. Mahendran of the Communist Party of India (CPI), in Oslo on Palaka'ni on 19th may 12.

(Ref.Tamilnet.com)

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon..... 020 8150 9950

Meera Arnold & Co
Southgate..... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER**
Bank: **HSBC**
A/C: **61429035**
S/C: **40-33-09**

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
அ.இரவி - மணி - அகிலன் மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

சுவிஸ்
சயந்தன்

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
சுகன்யா

விளம்பரம்
சோபனா - அஜந்தா

அச்சு
தர்சினி (கனடா) - சுகன்யா

வடிவமைப்பு
மயூ - யுகன்

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா - சாரங்கன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
சோபனா

வழங்கல்
உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com

'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

தமிழர் அமைப்புக்களும், தென் கூடானும்,பொறுப்புக் கூறல் கோட்பாடும்

மௌலி

(ஒரு பேப்பருக்காக)

ஜெனீவா ஜுரம் பிடித்து ஆடிக் கொண்டிருக்கும் எமக்கு, முன்பு ஒருமுறை பிடித்த தென் சூடான் ஜுரம் பற்றி நினைவு படுத்த விரும்புகின்றேன். 2011 ஜூலையில் தென் சூடான் சுதந்திர நாடாக பிரகடனப்படுத்தப்பட்ட பொழுது எமது ஊடகங் கள் அத்தனையும் தாம் கிணதோம். தீங்கிண தோம் தாம் தீம் எனக் கூத்தாடின. எம்மில் பலரும் ஆனந்தக் கூத்தாடினோம். ஆனால் அங்கு என்ன நடந்தது என்ன நடக்கின்றது என்பதில் அக்கறை அற்றவர்களாக நாம் இருந்தோம் இருக்கின் றோம். சுதந்திரத்துக்காக போராடும் இனத்துக் குரிய பண்பு அல்ல இது

அங்கு நடப்பதை பார்க்கமுன் எமது நிலை மையைப் பார்ப்போம்.தென் சூடான் சுதந்திரம் அடைந்த பொழுது நாடு கடந்த அரசு பிரதிநிதியை அனுப்புகின்றோம், தூதரகம் திறக்கின்றோம் என அறிவித்தது. அங்கு தூதரகம் கட்ட என அவுஸ் திரேலியாவில் நிதி சேகரிக்கப்பட்டதாகவும் சில தகவல்கள் உண்டு. இந்த விடயங்கள் தொடர்பாக பொறுப்புக் கூறல் விடயங்களில் இருந்து நாடு கடந்த அரசாங்கம் முழுமையாக தவறியுள்ளது .

இதே போல் உலகத் தமிழர் பேரவையை எடுத்துக் கொண்டால் அதில் எந்த அமைப்புக்கள் அங்கம் வகிக்கின்றன எனக் கேட்டால் பலருக்கு தெரியாது. எந்த அமைப்புகளுக்கு உறுப்புரிமை உண்டு எனக் கேட்டால் அதுவும் எவருக்கும் தெரி யாது அல்லது அதில் எவருக்கும் அக்கறை இல்லை. உலகத் தமிழர் பேரவையில் உறுப்புரிமை பெற என்ன நிபந்தனை எனக் கேட்டால் எவருக்கும் தெரியாது.

நீங்கள் எவராவது உலகத் தமிழர் பேரவையில் உறுப்பினராக முயற்சித்துப் பாருங்கள் உங்க ளுக்கு உண்மை புரியும். அவர்களிடமிருந்து கிடைக்கும் பதில்? "இது அமைப்புக்களை ஒரு கொடியின் கீழ் கொண்டுவரும் அமைப்பு. நீங்கள் இணைய முடியாது" என்பார்கள். நீங்கள் ஏதாவது ஒரு அமைப்பில் இணைந்து கொள்ளுங்கள் என் பார்கள். சரி பிரித்தானியாவில் உள்ள எந்த அமைப்பு உலகத் தமிழர் பேரவையில் உறுப் புரிமை பெற்றிருக்கின்றது எனக் கேட்டுப் பாருங் கள். பதில் வராது. ஒருவேளை பிரித்தானியத் தமிழர் பேரவை எனக் கூறினார்கள் என்றால் உடனடியாக பிரித்தானிய தமிழர் பேரவைக்கு செல்லுங்கள் உலகத் தமிழர் பேரவை தம்முடன் ஆலோசித்து எதுவும் செய்வதில்லை என அவர் கள் சொல்வார்கள்.

நாடு கடந்த அரசின் இணக்கப்பாட்டுடன் எல் லாம் நடைபெறுகின்றது என உலகத் தமிழர் பேரவை சொல்லுகின்றது நாடுகடந்த அரசினரோ, இல்லை எம்முடன் ஆலோசித்து முடிவுகள் எடுக் கப்படவில்லை என்கிறார்கள் உலகத் தமிழர் பேரவை தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவுடன் எந்த தொடர்பினையும் கொண்டிருப்பதாகத் தெரிய வரவில்லை.

ஆக மொத்தம் பிரித்தானியாவை மையம் கொண்டு இயங்கும் உலகத் தமிழர் பேரவை பிரித்தானியாவில் இயங்கும் எந்த ஒரு அமைப்பு டனும் கலந்தாலோசிக்காது தனித்து ஒரு சிலரே முடிவுகளை எடுக்கும் அதிகார தன்மையுடன் செயல்படுவதாக அறியமுடிகின்றது .

இனி தென்சூடான் விவகாரத்துக்கு வருவோம். சூடான் நாட்டிடம் இருந்த அதிகாரம் தென் சூடானில் உள்ள ஒரு சிலரின் கைக்கு மாறியது உண்மை தான், ஆனால் அந்த மக்கள் மீது (வட) சூடான் அரசு செய்த அடக்குமுறைகளை விட கொடிய அடக்குமுறையாளர்களாக சுதந்திர தென் சூடான் ஆட்சியாளர்கள் மாறியுள்ளார்கள் . தென் சூடானில் இருந்து வட சூடானுக்கு அகதிகளாக தென் சூடானிய மக்கள் ஓடும் நிலை உருவாகி வருகின்றது. தென் சூடானில் இராணுவ ஆட்சி பிரகடனப்படுத்தப்படலாம் என எதிர் பார்க்கப் படுகின்றது. இந்தத் திசையில் தான் தமிழ் அமைப் புகளும் எங்களை வழிநடாத்த முனைகின்றன.

தென் சூடானில் என்ன நடக்கின்றது என்பதை நாம் கவனித்தால் மேலே சொன்ன விடயங்க ளின் அபாயம் எமக்கு புரியும். மனித உரிமை கண் காணிப்பக 2013 அறிக்கையில் இருந்து பெறப் பட்ட தகவல்கள் சிலவற்றை இங்கு தருகிறேன்.

- பத்திரிகை சுதந்திரத்தில் தென் சூடான் 12 இடங்கள் பின் தள்ளப்பட்டுள்ளது. Isaiah Abraham என்ற எழுத்தாளர் காவல் துறையால் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்.இந்த கொலை அச்சுறுத்தல் ஆட்சியாளர் மீதான விமர்சனக் கதவுகளை மூடியுள்ளது.
- தொண்டு நிறுவன அதிகாரிகள் மீது தாக் குதல் நடாத்தப்பட்டு, அவர்களது உடைமை கள், விநியோகப் பொருட்கள் திருடப்பட்டு அச்சுறுத்தப்பட்டிருக்கின்றார்கள். கடந்த வருடம் 61 தொண்டு நிறுவன ஊழியர்கள் மீது தாக்குதல் நடாத்தப்பட்டிருக்கின்றது. தொண்டு நிறுவன ஊழியர்கள் 78 பேர் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள், தொண்டுநிறுவனங்களுக்கு சொந்தமான 79 வாகனங்களும் உடைமைகளும் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றது.
- நீதிமன்ற உத்தரவின்றி கைது செய்யப்பட்ட வர்கள் சட்டத்தரணிகளை நியமிக்க அனு மதிக்கப்படாமல் அடைத்து வைக்கப்பட்டுள் ளார்கள். சுதந்திரம் பெற்ற நாள்முதல் அந்த நாட்டில் சட்டத்தின் ஆட்சி இல்லை என சர் வதேச மன்னிப்புச்சபை குற்றம்சாட்டி உள்ளது.
- அங்கு சராசரியாக உயிர்வாழும் வயது 42. நினைக்கவே அச்சமாக இருக்கின்றது. புதிய ஆட்சியாளர்கள் இந்த விடயத்தில் கொஞ்சம் கூட அக்கறை அற்றவர்களாக பணம் பண்ணு வதிலேயே மும்முரமாக இருக்கின்றார்கள்.

இப்படியான சுதந்திரத்தை தான் தென் சூடான் பெற்றிருக்கின்றது. இதற்குகாரணம் அங்கு ஆட்சி ஏற்றவர்கள. வட சூடானில் இருந்து அதிகாரப் பகிர்வை கோரினார்கள். அதைப் பெற்றார்கள். ஆனால் வட சூடான் செய்த அத்தனை அநியாயங் களையும் தாம் செய்ய கூடிய அதிகாரத்தை மட்டும் தான் அவர்கள் கோரியிருக்கிறார்கள் என்பது வெளி யாகி வருகின்றது. இதனால் அங்கு இன்னொரு போர் ஆரம்பமாவது தவிர்க்க முடியாததாகி வருகின்றது. இத்தகைய போக்கே ஏறக் குறைய எல்லா தமிழ் அமைப்புக்களிடமும் காணப்படுகின்றது. உலகத்தமிழர் பேரவை போன்ற தலைமறைவு செயல்பாடுகள் இல்லாத ஜனநாயக அமைப்புக்கள் அனைத்து மக்களுக் கும் பொறுப்புக் கூரலுக்கும் வெளிப்படைத் தன் மைக்கும் கட்டுப்பட்டவர்களாக இருக்கவேண்டும். அவ்வாறு நடக்காதவர்கள் கைகளில் அதிகாரம் சென்றடையாமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு மக்கள் கையில் தான் உண்டு.

வாழ்ந்து படிக்கும் பாடங்கள்!

உங்களைத் தோலைத்து விடாதீர்கள்!

ஒரு மனிதனின் குழந்தைப் பருவத்தில் இருந்தே அவனை மற்றவர்கள் போல் மாற்றும் முயற்சி ஆரம் பிக்கிறது. "அந்தப் பாப்பாவப் பாரு எப்படி சமத்தா இருக்கு". குழந்தையில் இருந்தே மற்றவர் சிந்த னைகளையும், நம்பிக்கைகளையும் அவன் திணிக் கப் பெறுகிறான். "அவனைப் போல் இரு. இவனைப் போல ஆகு....." என்ற கட்டளைகள் வார்த்தை களாகவும், சூட்சுமமாகவும் அவன் மனதில் ஏற்றப் படுகின்றன. இது தான் சிறந்தது, இது பிரயோஜன மில்லாதது என்பதை மற்றவர்கள் அவனுக்காக தீர்மானித்து விடுகிறார்கள். மற்றவர் வகுத்த பாதை யில் பயணம் நடக்கிற வரையில் அவன் விமரிசனங் களை சந்திக்க வேண்டியதில்லை.

தனித்துவம் என்பதை பொதுவாக சமூகம் சகித் துக் கொள்வதில்லை. தப்பித் தவறி ஒருவன் தன் தனித்துவத்தில் சாதனை புரிந்து வெற்றி பெற்ற பின் அவனை ஓஹோ என்று போற்றுகிற சமூகம் அவனுடைய ஆரம்பகாலக் கட்டங்களில் அவ னுக்கு உதவும் விதமாக இருப்பதில்லை என்பது கசப்பான உண்மை. எத்தனையோ துறைகளில் தங்கள் தனித்திறமையால் முத்திரை பதித்தவர்கள் வாழ்க்கை சரிதத்தைப் படிக்கையில் நாம் இதை உணர முடியும்.

ஆனால் கடவுள் படைப்பில் எதுவுமே இன் னொன்றின் நகலாக இருப்பதில்லை என்பதே மகத்தான உண்மை. ஒரு பெற்றோருக்கு இலட்சக் கணக்கில் குழந்தைகள் பிறக்க முடிந்தால் கூட எதுவும் இன்னொன்றின் நகலாக இருக்க முடியாது என்று விஞ்ஞானம் சொல்கிறது. இறைவன் அவ் வளவு நுணுக்கமாக வேறுபடுத்திப் படைக்கும் மனி தனை ஒரே மாடலில் வார்த்து மாற்றி விட சமூகம் விடாமல் முயற்சி செய்வது ஆச்சரியமே அல்லவா? ஆனால் சோகம் என்ன என்றால் இந்த சமூகத் தின் முயற்சி பெரும்பாலானவர்கள் விஷயத்தில் வெற்றி பெற்று விடுவதுதான். ஒவ்வொரு மனிதனும் ஒரு தனித் திறமையோடு தான் படைக்கப்படுகிறான். அதை விருத்தி செய்து சாதிக்கவே அவன் இயல்பு அவனைத் தூண்டும். ஆனால் எத்தனை பேரால் தங்கள் அந்தராத்மாவின் குரலைக் கேட்க முடி கிறது? அதன்படி நடக்க முடிகிறது? சமூகம் தன் இரைச்சலால் அந்த சின்னக் குரலை மூழ்கடித்தல் லவா விடுகிறது. நீங்கள் நீங்களாக இருக்கும் வரை நிறைவைக் காண்பீர்கள். மற்றவர்களின் நகல்க ளாக மாற முயற்சிக்கும் போது இயற்கையில் இருந்து விலகி செயற்கையாக வாழத் துவங்கும் போது நிறைவு மறைய ஆரம்பிப்பதைக் காண்பீர்கள்.

வாழ்க்கையை முடித்து விட்டு இறைவனை சந்திக்கும் போது கடவுள் "நீ ஏன் பில் கேட்ஸ் போல் ஆகவில்லை என்று கேட்கப் போவதில்லை. நீ ஏன் நீயாக வாழவில்லை? உன் வாழ்க்கை வாழத் தானே உன்னைப் படைத்தேன். நீ ஏன் அடுத்தவர் வாழ்க்கையை வாழ்ந்து வந்திருக்கிறாய்" என்று தான் கேட்கப்போகிறார். மாறாக மற்றவர்களின் நகல்களாக ஆக்கத் துடிப்பது சைத்தானின் வேலை. இதை நான் ஒரு கவிதையாக இன்னொரு பதிவில் தந்திருந்தேன்.

எனக்கென்று ஒரு வரம்
சாத்தான் நேரில் வந்தது
வரமொன்று கேள் என்றது
பொன்னும் பொருளும் போகங்களும்
போதிய வரை தர நின்றது
நான் நானாக வேண்டும் எனக் கேட்டேன்.
நீ நீயானால் உன்னிடம்
எனக்கென்ன வேலை என்றது
ஏமாற்றத்துடன் சென்றது

எனவே உங்கள் உள்ளே ஒலிக்கும் குரலை உன் னிப் பாகக் கேளுங்கள். உங்களுக்கு இயற்கை யாக உள்ள திறமைகளைக் கண்டறிந்து வளர்த்துக் கொள்ளுங்கள். இயற்கையாக உள்ள ஈடுபாடு களை ஆராயுங்கள். இயற்கைக்கு ஒத்து கட்டுப் பாட்டுடன் வாழுங்கள். அடுத்தவர் செய்கிறார்களே என்று உங்களுக்கு ஒவ்வாத எதையும் செய்ய போகாதீர்கள். மற்றவர்கள் மெச்ச வேண்டுமென்று செயற்கையாக நடந்து கொள்ளாதீர்கள். மற்றவர் களிடமிருந்து மாறுபட வெட்கப்படாதீர்கள்.

மற்றவர்கள் சொல்வது எல்லாம் முட்டாள்தனம், அலட்சியப்படுத்துங்கள் என்று சொல்ல வர வில்லை. அவர்கள் சொல்வதைக் கவனியுங்கள். அவர்கள் அனுபவ அறிவின் வாக்குகளை சிந்தியுங் கள். ஆனால் முடிவு மட்டும் உங்களுடையதாக இருக்க வேண்டும். உங்கள் உண்மையான தேட லையும், குணாதிசயங்களையும் ஒட்டியே அமைய வேண்டும். அதுவே உங்களுக்கு நிறைவைக் கொடுக்கும்.

மற்றவர் வாழ்வில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளுங்கள். மற்றவர் வாழ்க்கையில் இருந்து ஊக்கம் பெறுங்கள். ஆனால் அவர்கள் வாழ்க்கை யின் நகலாக வாழ்ந்து விடாதீர்கள். முதலில் உங் களைக் கண்டறியுங்கள். மற்றவர்களை ஆராய்ச்சி செய்வதை விட்டு விட்டு உங்களை அமைதியாக ஆழமாக ஆராய்ந்தால் மட்டுமே உங்களை நீங்கள் கண்டறிய முடியும். இல்லா விட்டால் மற்றவர்கள் உங்களைப் பற்றிச் சொல்வதன் தொகுப்பையே 'நாம்' என்று தவறான கணிப்பில் வாழ்ந்து விடு வீர்கள். உண்மையான உங்களைக் கண்டறிந்த பின், உள்ளே ஒலிக்கும் அந்தக் குரலைக் கேட்க ஆரம்பித்த பின் உங்கள் வாழ்க்கையை முழு மையாக வாழ ஆரம்பியுங்கள். மற்றவர்கள் கண் களுக்கு அது சிறப்பென்று தோன்றாமல் இருக் கலாம். ஆனால் ஆத்ம திருப்தியை நீங்கள் உங்கள் வாழ்வில் உணர ஆரம்பிப்பீர்கள். உங்களைக் கண் டறிந்த பின் எக்காரணம் கொண்டும் உங்களைத் தொலைத்துக் கொள்ளாதீர்கள்.அப்படித் தொலைத்து விட்டால் கூடவே வாழ்வின் எல்லா நன்மைகளை யும் தொலைத்து விடுவீர்கள்

- என்.கணேசன்

மேற்கின் அணுகுமுறையும், அதனை எதிர்கொள்ளலும்

கோபி
ஒரு பேப்பர்

"2009 ம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினரால் விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டபோது, அவர்களது வீழ்ச்சியையிட்டு, சரியான சிந்தனைகொண்ட எவரும் அனுதாபப்பட்டிருக்க முடியாது. போருக்கு முன்னர் வடக்கிலும் கிழக்கிலும் வாழ்ந்த தமிழர்கள் விடுதலைப்புலிகளின் இரும்புப்பிடிக்குள் இருந்தார்கள், அவர்களால் கணக்கற்ற வகையில் பொது மக்கள் கொல்லப்பட்டார்கள்.

சுதந்திரத்திற்கான விடுதலைப்புலிகளின் போராட்டத்தின்போது அவர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரவாதம் உச்ச நிலையில் உள்ள கொடூரங்களைக் கொண்டிருந்தது. மகிந்த இராஜபக்ச வின் அரசாங்கம் அவர்களை தோற்கடித்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு அறிக்கையின்படி ஆயிரக்கணக்கான பொது மக்கள் போரின்போது கொல்லப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது பற்றிய விசாரணைகள் நடாத்தப்பட்டு பொறுப்புக் கூறப்படவேண்டும, விடுதலைப்புலிகளோ, அரசாங்கப்படைகளோ இக் கொலைக்களுக்கு பொறுப்பானவர்கள் எனக் காணப்பட்டால் அவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும். இதுவே பிரித்தானிய அரசாங்கத்தின் நிலைப்பாடு.

நான் சிறிலங்காவிற்கு சென்று திரும்பியுள்ளேன். போரின் பின்னரான நாலாண்டு கால நிலவரத்தை என்னால் உணரக் கூடியதாகவுள்ளது. வடக்குக்கு சென்றேன், அமைச்சர்களையும், அரசுசாரா நிறுவனங்களையும், போரால் இடம்பெயர்ந்த குடும்பங்களையும் சந்தித்தேன். தமிழர்கள் தங்களது வாழ்வை மீளக்கட்டியெழுப்ப முயற்சி செய்கிறார்கள். நாட்டில் பொருளாதாரமும், போர் நடந்த இடங்களில் உள்ளக கட்டுமானங்களும் மேம்பாடடைந்து வருகின்றன"

இவை அண்மையில் இலங்கைத் தீவிற்கு பயணம் செய்த பிரித்தானியாவின் துணை வெளிவிவகார அமைச்சர் (Minister of State for Foreign and Commonwealth office) அலிஸ்ரர் பேர்ட் கனடாவிலிருந்து வெளிவரும் "The Globe and Mail" பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துகள். இக்கட்டுரையை படிக்கும் தமிழர்கள் அலிஸ்ரர் பேர்ட் மீதும் பிரித்தானிய அரசாங்கத்தின் மீதும் ஆத்திரம் கொள்வார்கள், ஆனால் மேற்கின் அணுகுமுறையினை ஓரளவு வெளிக்காட்டுவதாக இக்கட்டுரை அமைந்திருக்கிறது என்ற அளவில் இக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துகளை அவதானிக்க வேண்டியுள்ளது.

அலிஸ்ரர் பேர்ட் குறிப்பிட்டுள்ள கருத்துகள், பொதுவில் மேற்கத்தைய அதிகார மையங்களின் கருத்துகளிலிருந்து வேறுபடவில்லை என்பதனை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழர்களது நிகழ்ச்சிகளில் பேச அழைக்கப்படும்போது, அழைத்தவர்களின் மனங்கோணாது இருக்க எமக்கு பிடித்த சில கருத்துகளை அவர்கள் தெரிவிக்கூடும். ஆனால் மேற்கில் மைய அரசியலில் உள்ள கட்சிகளைச் சேர்ந்த இன்னொரு அரசியல் தலைவர் முற்றிலும் வேறுவிதமான கருத்தினை கொண்டிருப்பார் என நாம் எதிர்பார்க்கமுடியாது. இங்கு இவர்களது கருத்துகள் அல்ல பிரச்சனை, இக்கருத்துகள் சார்ந்த இவர்களது செயற்பாடுகளை நாம் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறோம் என்பதனையிட்டே நாம் அதிகம் கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம்.

மேற்குலகத்தின் அனுசரணையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் ஒருதரப்பினராக, சிறிலங்கா அரசுடன் சமநிலையில் வைத்து பார்க்கப்பட்ட விடுதலைப்புலிகள், பேச்சுவார்த்தையின் முறிவின் பின்னர் அழிக்கப்பட்டதையிட்டு யாரும் அனுதாபப்படத் தேவையில்லை எனக் குறிப்பிட்டதன் மூலம் தமது ஒருதலைப்பட்சமான ஆதரவை சிறிலங்கா அரசாங்கத்திற்கு வழங்கியதனை அலிஸ்ரர் பேர்ட் இக்கட்டுரையில் வெளிப்படுத்தியுள்ளார். இது போன்ற கருத்தினை தொழிற்கட்சி ஆட்சியில் வெளிவிவகாரச் செயலாளராக இருந்து டேவிட் மிலிபான்ட் அவர்களும் ஒரு தடவை குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை தீவில் ஏற்பட்டுவரும் பொருளாதார மேம்பாடு, உட்கட்டுமானங்கள் அமைத்தல், நெடுஞ்சாலைகள் நிர்மாணித்தல் போன்றவை மேற்கு நாடுகளுக்கு திருப்தியை கொடுக்கிறது. ஆனால் அங்கு ஜனநாயகம் மற்றும், நல்லாட்சிக் குரிய நடைமுறைகள் மீறப்படுவது, தீவின் ஸ்திரத் தன்மையை பாதிக்கும் என்பதே மகிந்த அரசாங்கத்தை ஏற்றுக்கொள்வதில் அவர்களுக்கு சிக்கலை தோற்றுவிக்கிறது.

பொதுவாக மூன்றாம் உலக நாடுகளில் உள்ள தேசிய இனங்கள் விடயத்தில், அவற்றின் தனித்துவமான இறைமை, சுயநிர்ணய உரிமை போன்ற விடயங்களில் மேற்கின் அதிகார மையங்கள் அக்கறை கொள்வதில்லை. மாறாக இந்நாடுகளில் பல்லினங்கள் கொண்ட ஒரு கலப்புத் தேசியத்தை (cosmopolitan society) உருவாக்கவே இவர்கள் முனைப்புடன் செயற்பட்டு வருகிறார்கள்.

இலங்கைத்தீவு விடயத்திலும் 'இனங்களுக் கிடையிலான நல்லிணக்கம்' (reconciliation) என்ற பெயரில், இனங்களின் சுய அடையாளங்களை கலைத்து, 'சிறிலங்கா தேசியம்' என்ற பொதுமைப் பாட்டுக் கொண்டுவர முயன்றுவருகிறார்கள்.

சிறிலங்கா தேசியம் (Ceylonese), இந்திய தேசியம் என்பவை உள்ளூர் மக்களைப் பொறுத்தவரை அந்நியமான சொற்பதங்கள். அவை காலனித்துவ ஆட்சியாளர்களால் நிர்வாக வசதிக்காக செயற்கையாக உருவாக்கப்பட்டவை. ஆகவே தேசிய இனங்கள் தங்கள் இனத்துவ அடையாளங்களைத் துறந்து ஒரு பொது அடையாளத்திற்கு வருவது சாத்தியப் படப்போவதில்லை. ஏறத்தாள ஐரோப்பிய காலனித்துவத்துக்கு உட்படட்ட எல்லா ஆபிரிக்க நாடுகளிலும் இந்த நிலையே காணப்படுகிறது.

2009 ஆண்டு போர் முடிந்த சில மாதங்களிலேயே, International Alert, Royal Commonwealth Society போன்றமேற்குலக அரசுகளின் நிதியுதவியில் இயங்கும் அரசுசாரா அமைப்புகள் சிறிலங்கா தேசியத்தை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தினை நிறைவேற்றும் தமது செயற்பாடுகளில் இறங்கின. போர் நடைபெற்ற காலத்திலேயே இதற்கு கால்கோள் போடப்பட்டதனை 2008இல் மலேசியாவில் நடைபெற்ற Sri Lankan diaspora மாநாடு உறுதிப்படுத்தியது. இப்போது இதற்கென VoicesforReconciliation என்ற இன்னொரு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அலிஸ்ரர் பேர்ட் தனது வன்னிப்பயணத்தின்போது, முள்ளியவளையில் இந் நிறுவனத்தின் பணியகத்தை திறந்து வைத்தார்.

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற் படுத்தும் தமது முயற்சிகளுக்கு 'கடுங்கோப் பாளர்கள்' என இவர்களால் குறிக்கப்படும் தமிழ் diaspora மட்டுமல்ல diaspora என்ற சொல்லையே வெறுப்புடன் பார்க்கும் சிங்கள தேசியவாதிகளும் தடையாக இருப்பதாக இவர்களால் குற்றம் சாட்டப் படுகிறது. போருக்கு பிந்திய காலத்தில் மகிந்த இராஜபக்சவும் சிறிலங்கா தேசியம் பற்றி நிறையவே பேசி வருகிறார். இனி சிறுபான்மை இனங்கள் இல்லை என்பதுபோன்ற அறிவிப்புகளையும் அவர் செய்து வருகிறார். ஆனால் அவரது நடைமுறைகள், தூய சிங்கள பௌத்த வாதத்தை நோக்கிய தாகவே காணப்படுகின்றன.

மேற்குலக அதிகார மையங்கள் விரும்புகிற 'சிறிலங்கா தேசியம்' சாத்தியப்படும் என்ற வாதம் கொழும்பு மேட்டுக்குடி சார்ந்தவர்களால், குறிப்பாக சர்வதேசளவில் செயற்படும் அரசுசாரா நிறுவனங்களில் பணியாற்றும் கற்கையாளர்களால் முன்வைக்கப்படுகிறது. ஆனால் நடைமுறையில் இது சாத்தியமாகுமா என்ற கேள்விக்கு பதிலளிக்க அதிகம் யோசிக்க வேண்டியதில்லை அண்மையசம்பவங்களே விளக்கமளிக்கின்றன. சிங்கள மேலாதிக்கத்தை வலியுறுத்தும் நோக்குடன்கடந்த வருடம் உருவாக்கப்பட்ட 'சிங்கள இராவய' மற்றும் 'பொது பல சேனா' போன்ற அமைப்புகள் சிங்கள மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கைப் பெற்று வருகின்றன. கடந்த வாரம் மஹரகமவில், 'பொது பல சேனா' அமைப்பு இஸ்லாமியர்களுக்கு எதிராக ஒழுங்கு செய்த போராட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டார்கள். அதன் facebook பக்கத்தை இது வரை 4,378 பேர் like செய்திருக்கிறார்கள்.

> இலங்கைத்தீவில் நல்லாட்சியும், ஜனநாயகமும் வேண்டி வீதியில் மக்கள் வீதியில் இறங்கிப் போராடுவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் எதிர்க்கட்சிகள் காத்திருக்கிறார்கள். ஆனால், அங்கு தீவிர இனத்துவவாதிகளால் மட்டுமே ஆட்களை திரட்டி வீதிக்கு இறங்கி போராட முடிகிறது என்ற நடை முறை யதார்த்தத்தை யாரும் இலகுவில் புறந்தள்ளிவிடமுடியாது.

இலங்கைத்தீவில் நல்லாட்சியும், ஜனநாயகமும் வேண்டி மக்கள் வீதியில் இறங்கிப் போராடுவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் எதிர்க்கட்சிகள் காத்திருக்கிறார்கள. ஆனால், அங்கு தீவிர இனத்துவவாதிகளால் மட்டுமே ஆட்களை திரட்டி வீதிக்கு இறங்கி போராட முடிகிறது என்ற நடைமுறை யதார்த்தத்தை யாரும் இலகுவில் புறந்தள்ளிவிடமுடியாது. இராஜபக்ச சகோதரர்களை பதவியிலிருந்து இறக்கி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அவர்களை மிஞ்சிய இனவாதிகளே தேவைப்படுகிறார்கள் என்ற கருத்துடன் பலரும் உடன்படுகிறார்கள். இந்தக்களயதார்த்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதற்கேற்ப தீர்வு முயற்சிகள் வடிவமைக்கப்படாமல் இலங்கைத் தீவில் அரசியல்தீர்வுசாத்தியப்படாது. மேற்குலக அதிகார மையங்களை இவ்வியடத்தில் உடன்படவைப்பதே தமிழர் தரப்பின் முதன்மையான பணியாக இருக்க வேண்டும்.

கருத்துக்களுக்கு @orupaper & facebook.com/orupaper

ஒரு பேப்பர்

கிடைக்குமிடங்கள்

New Malden
Ayngaran 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan 020 8605 0434
Murugan Kovil 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

Tooting
Yhaal House 020 8767 8585
Rainbow Restaurant. 020 8640 4230
Amman Kovil 020 8795 4258
Niru Con.Store 020 8672 3200
Ayngaran 020 8540 1500
Suvai Aruvi..... 020 8543 6266
Adchaya 020 8540 8192

Croydon
Best Foods..... 020 8684 6269
Haran Bros..... 020 8686 2552
Chennai dosa 020 8665 9192
Eelam Video..... 020 8664 8351
Spice Land..... 020 8667 1700

Lewisham
Chandra 020 8333 8680
Eelam Shop 020 8690 6545
Katpagam 020 8694 8810
AJ Video 020 8691 8888
Sivan Kovil 020 8318 9844
KRS 020 8297 9432

Eastham
Seelans..... 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food 020 8552 9578
Akilan Enterprise 020 8548 0033

Ilford
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan 020 8514 1744
Angels 020 8553 0490
Sri Supermarket .....

Edmonton
New Kannan Stores 020 8884 4979
Sayas..... 020 8805 9529
Nagapoosani Temple020 8884 3333

Walthamstow
Vinayagar Kovil..... 020 8527 3819
Kumarans 020 7609 1912
Prabas 020 8509 3322

Harrow
Tsk food & Wine 020 7622 4258
Eelavan 020 8863 6160
Prabhas 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods..... 020 8423 9933
Sambal Express..... 020 8799 7171

Wembley
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods..... 020 8900 0100
Vahizan Disc 020 8795 0648

Ealing
Amman kovil..... 020 8810 0835

Greenford
Ambiha 020 8813 0967

Coventry
Eellakanthan Temple...02476663554

South hall
Thamilini C & C..... 020 8606 9900
Duvaraka C & C 020 8813 9126
Palm Palace Restaurant 020 8574 9209
Spicy Palace Restaurant 020 8574 4087
Luxmys C & C 020 8571 4599
Tamilan C & C..... 020 8561 8174
Lady Margret 020 8571 4434

Raj musix
Raj TV
CAPTAIN TV
VIJAY
சிரிப்பொலி
செய்திகள்
மக்கள்
தொலைக்காட்சி
மண் பயனுற வேண்டும்
புதிய தலைமுறை
உண்மை உடனுக்குடன்
mega 24
JAYA MAX
மெகா டிவி
WIN TV
Animal Planet
VASANTH TV
கலைஞர்
JAYA PLUS
NATIONAL GEOGRAPHIC™
After eight years
in Canada.....
Now in UK and Europe
www.you-tv.net
YOU-TV
PO.Box 52314 1711, Mccowan Road, Toronto, ONT, Canada M1S5G8
More than 50 Tamil Channels
(Jaya tv, Jaya Max, Raj, Captain,
Makkal, Mega, GTv, Zee Tamil and more)
10 Christian Channels
More than 1000 other Channels
(Tamil, Hindi, Telugu, Marathi, Malayalam, kannada,
Bengali, Punjabi,English, German, French, Pakistan,other)
More than 3000 tamil movies
All in one android box
More than 2000 other movies
Watch all channels without a Satellite.... Or cable connection
IF YOU RECOMMENDED SOMEONE YOU WILL GET ONE MONTH FREE
PRICE FROM
£ 149.00
TO £ 249.00
Mobile - 074 2359 7546
Mobile - 074 2359 7547
email - youtvsales@gmail.com

ஆதாரங்கள் இருந்தும் அசையாமல் நிற்கும் அனைத்துலகம்

எத்தனையோ இன அழிப்பு ஆதாரங்களை சனல்4 தொலைகாட்சி முன்வைத்தாலும், இந்த சர்வதேச சமூக ஸ்தாபனங்கள் செவிமடுப்பது போல் தெரியவில்லை. இன அழிப்பிற்கான விசாரணைகளை, கொலையாளிகளே நடாத்த வேண்டுமென விடாப்பிடியாக இருக்கிறது.

தேசியத் தலைவரின் மகன் பாலச்சந்திரன் படுகொலை செய்யப்பட்ட காட்சிகள் முன்பு வெளிவந்த நிலையில், தற்போது அவர் கொல்லப்படுவதற்கு முன்பாக சிங்கள இராணுவத்தின் பிடியில் இருந்த புகைப்படமும் வெளியாகியுள்ளது.

இதேபோன்று கேணல் ரமேசின் புகைப் படங்கள், காணொளிக் காட்சிகள் வெளி வந்தன. சரணடைந்த நிலையில் தோழர் க.வே.பாலகுமாரனும் அவர் மகன் தீபனும் ஒன்றாக அமர்ந்திருந்த புகைப்படம் வெளியாகியும், அவர்கள் இருவரும் இப்போது எங்கே இருக்கின்றார்கள் என்கிற கேள்விக்கு பதில் இல்லை.

இவர்களைக் கைது செய்யவில்லையென்று கோத்தபாயா ஊடகங்களுக்குச் செவ்வி வழங்கினாலும், உயிரோடு இருந்த புகைப்படங்களைக் கொண்டு, சுயாதீன சர்வதேச விசாரணை நிகழ்த்தப்பட வேண்டுமென்பதை ஏன் இந்த சர்வதேசம் வலியுறுத்தத் தயங்குகின்றது என்பதுதான் தமிழ் மக்கள் முன்னுள்ள கேள்வி.

அதுமட்டுமல்லாது, இறுதிப்போரில் தலைவரின் மனைவி, மகள் மற்றும் பாலச்சந்திரனிற்கு என்ன நடந்தது என்று தனக்குத் தெரியாதென, இன அழிப்பினை வழிநடாத்திய சரத் பொன்செக்கா நழுவிச் செல்லப்பார்க்கிறார் .

இவைதவிர புதுவை இரத்தினதுரை, யோகி, பேபி சுப்ரமணியம், மற்றும் லோரன்ஸ் திலகர் போன்ற விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள், இராணுவத்தால் பேரூந்து ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டதை நேரில் கண்ணுற்ற சாட்சிகள், நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் அதனைத் தெரிவித்தும், அவ்வாறு எதுவும் நடை பெறவில்லை என்று மறுக்கின்றது கோத்தா கும்பல்.

கடந்த வருடம், ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா கொண்டு வந்த இலங்கை மீதான தீர்மானத்தில், சிங்களம் உருவாக்கிய நல்லிணக்க ஆணைக்குழு வெளியிட்ட பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தப்பட்டது . 'அதனைக் கண்காணிப் பதற்கு நாங்கள் வரமாட்டோம்' என்கிற செய்தியை மறைமுகமாக வெளிப்படுத்தியது.

இருப்பினும் கதவை தட்டாமலே உள்ளே வரக்கூடிய அனுமதியை வழங்கவேண்டு மென்கிற தீர்மானத்தை இம்முறை முன்வைக் கப்போகிறது அமெரிக்கா. இதனை சிங்களம் ஏற்றுக்கொள்வதற்கான கால அவகாசத்தை யும் இப்புதிய தீர்மானம் வழங்குமென எதிர் பார்க்கலாம்.

இவர்களைப் பொறுத்தவரை , 2009 மே மாதத் திற்குப் பின்னர் இலங்கையில் இன அழிப் பென்று எதுவுமே நடைபெறவில்லை என்கிற நம்பிக்கையோடு செயற்படுவதை விரும்பு கிறார்கள். அதனை தமிழ் மக்களும் ஏற்றுக் கொண்டு, சிங்களத்தோடு கைகுலுக்கி நல்லி ணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் எதிர் பார்க்கின்றார்கள். அண்மைக்கால 'மகிந்த ரோடு கை குலுக்கும் கதைகள்' மேற்குலகின் நிகழ்ச்சி நிரலை தெளிவாக உணர்த்துகிறது.

"சாட்சிக்காரனின் காலில் விழுவதைவிட சண்டைக்காரனின் காலில் விழுவதே மேல்" என்கிற இராஜதந்திரத்தை, அழிவின் விளிம் பில் இருக்கும் ஒரு பூர்வீக தேசிய இனம் கடைப்பிடித்தால், அழிவு கடுகதியில் வரும் என்பதை எப்போதுதான் இவர்கள் புரிந்து கொள்ளப்போகிறார்களோ தெரியவில்லை.

சிங்கக் கொடி பிடித்தலுக்கும், கை குலுக்கு வதற்கும் இடையில் ஆறு வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள் என்றொரு போட்டி வைத் தால் எவருமே வெற்றியடையமாட்டார்கள்.

12 வயதுப் பாலகன் பாலச்சந்திரன் படு கொலை செய்யப்பட்ட ஆதாரங்களையே போலியானதென உடனடியாக நிராகரித்த சிங்களம், கை குலுக்கினால் மட்டும் இன அழிப் பினை ஏற்றுக்கொள்ளுமா?

தமிழினத்தின் மீது சிங்களத்தால் மேற் கொள்ளப்படும் இன அழிப்பினை உலகறியச் செய்ய, பெரும் முயற்சியில் ஈடுபடும் புலம் பெயர் தமிழ் அமைப்புக்களின் செயற்பாட்டினை நீர்த்துப் போகச் செய்யும் வகையில் அமைந் துவிடும் இந்தக் கைகுலுக்கும் இராஜதந்திரம்.

சிங்கக் கொடி பிடித்தாலும், என்னைக் கொல்ல புலிகள் திட்டமிட்டார்கள் என்று பொய் யுரைத்தாலும், அவர்களிடம் ஜனநாயகம் இல்லை என்று சாஸ்டாங்கமாக வீழ்ந்தாலும், கை குலுக்கத் தயார் என்று நேசக்கரம் நீட்டினா லும், சிங்களப் பேரினவாதம் தனது தமிழின அழிப்பினை நிறுத்தப்போவதில்லை.

மேற்குலகினரை அழைத்து மாநாடு நடாத்து பவர்கள் கவனிக்க வேண்டிய விடயம் ஒன்று உண்டு. 2012 இல் நல்லிணக்க ஆணைக்குழு வின் பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு ஒரு தீர் மானம் வந்தது. 2013 இல் அதை கண்காணிக்க மனித உரிமைப் பேரவையின் சிறப்புப் பிரதி நிதிகளை அனுமதிக்க வேண்டும் என்கிற தீர் மானம் வரும். 2014 இல் என்ன தீர்மானம் கொண்டு வரலாம் என்று திரைமறைவில் பேரம் பேசுதல் நிகழும்.

அரசியல் பார்வை

இதயச்சந்திரன்

வழமை போன்று, சனல் 4 தொலைக்காட்சி புதிய ஆவணப்படத்தை வெளியிடுவதாக விளம் பரம் செய்தவுடன், இலங்கைக்கு எதிராக காட் டமான தீர்மானமொன்று வரப்போகிறது என்கிற பரப்புரை கட்டவிழ்த்து விடப்பட்டு, மக்கள் மத்தியில் பெரிய எதிர்பார்ப்பொன்று உருவாக் கப்படுகிறது. சென்ற வருடமும் இதுதான் நடந்தது. இவ்வகையான கால நீட்சி இழுத்தடிப்புக்கள் மேற்குலகிற்குத் தேவை.

பேரவையில் தீர்மானம் கொண்டுவரும் ஒபாமா நிர்வாகம், இலங்கையை இராஜதந்திர மட்டத்தில் தனிமைப்படுத்தும் வகையில் தனது நடவடிக்கைகளை முன்னெடுக்குமா என்கிற கேள்வியை மேற்குலகின் அரசியல் நோக்கர் ஒருவர் அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

முள்ளி வாய்க்காலில் நிகழ்ந்த இன அழிப்பு, எதிர்பாராமல் நடந்த துன்பியல் சம்பவம் அல்ல என்று குறிப்பிடும் அவர், அமெரிக்காவின் மென் மையான தீர்மானங்கள் எப்போது இறுக்கமான, கடுமையான தீர்மானமாக மாறும் என்பதோடு, அமெரிக்காவின் இலங்கை குறித்தான திட்டம் என்ன என்கிற சந்தேகத்தையும் எழுப்பியுள்ளார்.

லிபியா, சிரியா மற்றும் மாலி பிரச்சினையில் நேரடியாகத் தலையீடு செய்யாமல் , தனது நேச நாடுகளுக்கு பின்புலத்தில் இருந்து உதவி செய்யும் அமெரிக்கா , இலங்கை விவகாரத்தில் ஏன் மென் போக்கினை கடைப்பிடிக்கிறது என்பதனை தமிழ் மக்கள் புரிந்து கொள்வது நல்லது.

ஏனெனில் சர்வதேச மனித உரிமைச் சங்கங் களின் காட்டமான கருத்துக்களையும், ஐ.நா மனித உரிமைப் பேரவையின் அறிக்கையினை யும் அமெரிக்கா தனது தீர்மானத்தில் உள் வாங்குமா என்பது குறித்த எதிர்ப்பார்ப்போடு இருப்பது தவறு.

ஐ.நா. சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு இறைமையுள்ள நாட்டின் மீது, மனித உரி மைப் பேரவை எத்தகைய தீர்மானங்களைக் கொண்டு வந்தாலும், அதனைச் செயல்படுத் தும் வல்லமை அதற்கு இருக்கிறதா என்பதை கவனிக்க வேண்டும்.

நாட்டின் ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் இறைமை என்கிற ஐ.நா. சாசன ஆயுதங்களை வைத்தே, பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்று கூறியவாறு தனது இன அழிப்பு நிகழ்ச்சி நிரலை மிகக் கொடூரமான வகையில் பௌத்த சிங்களப் பேரினவாதம் முன்னெடுக்கிறது.

இதனை எல்லோரும் புரிந்து கொள்கின்றார் கள். ஆனாலும் தத்தமது தேசிய, பூகோள நல னுக்கு ஏற்றவாறு எவ்வாறு இதனைக் கை யாள்வது என்பதானது, சில இடங்களில் வன் அழுத்தம், பல இடங்களில் மென் அழுத்தம் என்கிற வகையில் தீர்மானிக்கப்படுகிறது.

தமிழ் பிரதேச சிவில் நிர்வாகத்தில் இராணு வத்தின் தலையீடு, திட்டமிட்ட வகையில் மேற் கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்களும் முகாம் விரிவாக்கங்களும், அம்பாறையில் பறிக் கப்படும் தமிழ் பேசும் மக்களின் நிலங்கள் போன்ற சிங்கள ஆதிக்கச் செயல்பாடுகள் குறித்து இந்த நல்லிணக்க ஜாம்பவான்கள் அக்கறை கொள்வதில்லை.

இதற்கு எதிராக தமிழ் தேசிய அரசியல் தலைமைகள் மக்களை அணிதிரட்டிப் போராட் டங்களை நடாத்தும்போது, அதனை முறியடிக்க சிங்களம் கட்டவிழ்க்கும் வன்முறை குறித்து எந்தவிதமான அழுத்தங்களையும் பிரயோகிக் காமல் மௌனமாக இருக்கின்றன இந்த வல் லரசுகள். சண்டே லீடர் ஊடகவியலாளர் மீதான துப்பாக்கிச் சூடு மற்றும் சிராணி மீது கொண்டு வரப்பட்ட குற்றவியல் பிரேரணை குறித்து பகிரங்கமாக கண்டனங்களைத் தெரி விக்கும் மேற்குலகம், தொடரும் நில அபகரிப் பிற்கு எதிராக இதுவரை ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

இருப்பினும், இலங்கையில் மனித உரிமை மேம்பட வேண்டும், நல்லாட்சி ஏற்படுத்தப்பட வேண்டும், நீதித்துறையின் சுயாதீனம் பேணப் பட வேண்டும், ஊடக சுதந்திரம் நிலைநாட் டப்பட வேண்டும், என்கின்ற பல வேண்டு கோள்களை மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையார் தனது அறிக்கையில் குறிப்பிட்டாலும், அதனை நடைமுறைச் சாத்தியமாக்கும் தளம் இலங்கை யில் அறவே இல்லை என்பதை அவர் உணர்வார்.

சிங்களத்தின் முழு நாட்டிற்குமான இறை மையை ஏற்றுக்கொண்டிருக்கும் இலங்கை யின் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு அப்பால் நின்று தீர்வு குறித்துப் பேசாவிட்டால், இன நல் லிணக்கமோ அல்லது சமாதானமோ எப் போதும் சாத்தியமில்லை என்பதை இவர்கள் உணர்வார்களா?

சிங்களத்தை விழுங்கும் சிங்களப் பேரினவாதம்.....

சுகி

(ஒரு பேப்பருக்காக)

அண்மையில் மனநல நிறுவனத்தின் முகாமையாளருடனான சந்திப்பின் போது, ஈழத் தமிழர்கள், முக்கியமாக அண்மைக் காலத்தில் வந்தவர்கள், மனரீதியாக மிகவும் பாதிக்கப் பட்டுள்ளார்கள். அவர்களில் யாரையாவது எனக்குத் தெரியுமா? என்று கேட்டார். யாரைச் சொல்ல, யாரை விட. நான் ஒரு ஈழதமிழிச்சி, நான் மனரீதியாக பாதிக்கப்பட்டுள்ளேனா? இல்லையா? விடை தெரிய வில்லை. கடும் குளிருக்குள் வேலைக்கு போகும் போது மனம் சலிக்க, கொட்டும் மழைக்குள் கணுக்காலுக் குள் மேல் சேறுக்குள், காவல் அரண்களில் விழி துயிலாது நின்ற எம் பெண்போராளிகளின் நினைவு வர, எட்டி நடக்கின்றேன். வருத்தம் என்று உடம்பு கெஞ்சினாலும் மனம் இதென்ன வருத்தம் என்று போராளிகளோடு ஒப்பீட்டுக்குப் போகின்றது. 2009 இல் கம்பி வேலிக்கு பின் னால் நின்று ஏக்கத்தில் பார்த்து நின்ற 10 வயது சிறுமியின் முகம், ஏன் என்று காரணம் சொல்ல முடியாத வேளைகளில் நினைவுக்கு வந்து, கண்களில் கண்ணீர் திரை, பக்கத்தில் இருப்பவர்கள் பார்க்க முதல் தொண்டை குழிக்குள் சிக்கி அடங்கும், மெலிந்த தேகத்து டன், பரட்டை தலையுடனும், உணவுக்கான வரிசையில் காத்து நின்று அந்த வயது போன அன்னையின் முகம் நினைவில் வந்து, கையா லாகாத எமது நிலையை நினைந்து தன்னின இரக்கத்தில், அடிவயறு பிசையும்.

இப்போ பாலசந்திரனின் பால்வடியும் முகம். ஜயகோ அந்த பாலகன் என்னத்தை நினைத் தானோ? அந்த பிஞ்சுமனம் என்ன பாடுபட்டிருக் கும், பிடித்தவுடன் அந்த பாலனை படம் எடுத்து அனுப்பியிருப்பார்கள் அல்லவா? இந்த பாலனை பார்த்து விட்டும் சுட சொல்லி கட்டளையிட்ட அந்த கயவர்களை நினைக்க மனம் அரு வருப்பு, ஆத்திரம் கசப்பு எல்லாம் கலந்த உணர் வில் வெம்புகின்றது. அந்த முகம் நெஞ்சு கூட்டுக்குள் அகலாது நெருடுகிறது நீதி தேடி. உலகத்தின் கதவை பலமுறை தட்டிவிட் டோம், அடுத்தது என்ன என்று மனம் அலக்கழி கின்றது.

நிமிர்ந்த நெஞ்சும், நேர்கொண்ட பார்வையும், சொற்பிரளாத வார்த்தையும் கொண்ட தமிழர் தலைமையை அழித்துவிட்டு, பொருளாதார ஸ்திரநிலை என்ற கானல்நீரை சிங்களத் திடம் எதிர்பார்த்து, இந்த உலகம் இன்னும் ஏமாறுவது நிச்சயம். அது அங்கே கிடைக்கப் போவதில்லை. எந்த சிங்களப்பேரினவாதத்தை வளர்த்து மகிந்த ஆட்சிக்கு வந்தாரோ அதை விடக்கூடிய சிங்கள பேரின வாத சக்திகள் வந்து அவர் ஆட்சியை ஆட்டம் காணவைக்கும். பொது பல சேன போன்ற சிங்கள கட்சிகள் பேரின வாதத்தின் உச்ச கட்டமாக கலால் இறைச்சியை விற்கக்கூடாது என்றும், நாமும் முஸ்லீம் இனத் தவர்கள் போல, 5 மனைவியை திருமணம் முடிக் கும் சட்டம் வேண்டும் அப்போது தான் முஸ்லீம் மக்கள் போல, நிறைய பிள்ளை பெற்று இனத்தை விருத்திசெய்ய முடியும் என்கிறார்கள். மகிந்த கூட, எதாடா இது என்று வியக்கும் அளவிற்கு சிங்கத்தின் பேரினவாதம், அவர்களிடம் படர்ந்து போயுள்ளது. சிங்களத்தின் எந்த பல கீனத்தை வைத்து மகிந்த ஆட்சிக்கு வந் தாரோ, அதே பலகீனத்தையே தமக்கும் பலமாக பாவிக்க மற்றைய கட்சிகளும் தொடங்கி யுள்ளது. இது சிங்களவர்களின் நாடு என்பது போய், இது சிங்களவருக்கு மட்டுமே சொந்த மான நாடு என்ற கோசமும், இனத்துவேசமும் அதிகரித்துள்ளன.

இதுதொடரும் போது, உலகநாடுகள், அன்று கைகட்டி பார்த்திருந்த நிகழ்வுக்களுக்கெல் லாம், இன்று கேள்வி கேட்கும். கோபம் வந்து பிரியும் போது, முந்தி தந்ததை எல்லாம் திருப் பித்தா என்று கேட்கும் சிறுவர்கள் போல, பொருளாதார ஸ்திர நிலை வேண்டி, இது நடக்கும். முன்பு சொன்னது போல, விடுதலை புலிகளால்தான் எல்லாம் என்று குற்றம் சொல்ல இப்போது முடியாத நிலை, எந்த இறைமையில் தமிழர்களுக்கு பங்கில்லை என்று சொன்னார் களோ. அந்த இறைமையை சிங்களம் உலகத் திடம் அடகு வைக்கும் நிலை வெகுதூரத்தில் இல்லை. அப்பத்தை குரங்கிடம் கொடுத்த நிலைதான்.

தமிழருக்கு தலைமையில்லாமல் போனால் என்ன, அந்த இடைவெளியை நிரப்ப நாம் தாயா ராக உள்ளோம், என்று பூட்டிய அறைக்குள் நடக்கும் தனியான சந்திப்புகளின் போது எல் லாம், கோடிட்டு காட்டியவர்கள் தான் இப்போ தாயகத்தில் அவ்வெற்றிடத்தை நிரம்புவதாக சொல்லிக் கொண்டு பதவிகளில் வெட்டியாக குந்திக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இப்போ கதிரைக்கு போடும் சலாம் பார்த் தாலே தெரிகிறது, எமது தலைமையின் அழிவுக்கு, விலைபோகக் கூடிய இவர்களின் இருப்புத் தான், முதலாவது காரணம். 'மாற்றீடு' இல்லை என்றால் மாற்றீட்டை தாயார் நிலையில் வைத்தி ருக்காது 'முதல்' இல் கை வைத்திருக்க மாட் டார்கள். தமிழ் மக்களையும், மக்களின் தமிழ் ஈழத்தினதும், போராளிகளினதும், தலைவரி னதும் மீதான பற்றை, குறைந்து விளம்பிய தோடு, பயங்கரவாதம் என்று கையடித்து சத்தியம் செய்திருப்பார்கள். உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசும் உருமாறிகள்.

வெகுவிரைவில் அடுப்பில் இருந்து நெருப் புக்குள் விழுந்ததை சிங்கள மக்கள் உணரு வார்கள். அப்போ மூன்று வருடங்களுக்கு முன் பெற்றதாக சொல்லப்பட்ட, சிங்களத்தின் வெற்றி கேள்விக்குறியாகியிருக்கும். ஆனால் முள்ளி வாய்கால் தமிழருக்கு அழிவின் பின்னும் காலம் காலமாக விடை பகிரும். மீண்டும் இயற்கை சமநிலை, எமது இருப்பை காட்ட அழைக்கும். ஆனால் அப்போது வரும் தலைமை அடிபட்ட புலிக்குட்டியாக இருக்கும்.

அடிபணி அரசியல் மாயைகள் கலைந்து போகும். அது அரசியல் விளங்காத அல்லது தன்நலம் கருதி நிற்கும் கூட்டத்தில் முகப்பூச்சு, அவர்களின் தெளிவில்லாத அரசியல் கற்பிதம். கையாலாகாத்தனம் என விளங்கும்.

அத்தோடு கீழ்மட்டத்தில் உள்ள மக்களை ஓர் தெளிவான சிந்தனையின் கீழ் வெளி நோக்கி சிந்திக்க விடாது, பிரிவை உண்டாக்கி, உள்ளூர் பிரச்சனைக்குள், திட்டமிட்டு முடக்கி வைத்திருக்கும், கல்லறைக்கு அடிபடும் சின னத்தனங்கள் இல்லாது ஒழிந்து போகும். அது வரை சிங்களத்தை மெல்ல விழுங்கும் சிங்களப் பேரினவாதத்தை பார்த்திருப்போம்.

MASS GLOBAL SHIPPING

Sea - Air - Road & Ticketing , Serving all Communities

MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK

* Packers * Movers * Shippers

Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers

We Offer the Best Services than all the Other in the trade!

உங்கள் பொருட்களை ஆகாய தரை கடல் மார்க்கமாக பாதகாப்பாகவும் துரிதமாகவும் குறைந்த செலவிலும் அனுப்புவதற்கு நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.

Special rates for Containers and Machinery

4 Collection Points :
Harrow
Watford
Knightsbridge
Croydon

T-chest Box சென்னைக்கு அனுப்ப £40 மட்டுமே

ஒரு T-chest Box அனுப்ப £40 இரண்டு T-chest Box அனுப்ப £30

FREIGHT ONLY £15.00
FREIGHT AND BOX £15.00
(Volume 4.5Cu.ft)

Wooden boxes available

Call - 0208 3862314

Hot Line 24/7- 079 4010 8177

Local Collection Charge £10.00 upto Hounslow.
Within M1 collection charge £15.00 All other area's we will offer the best rates

MASS GLOBAL SHIPPING

N0 58 THE ARCHES, HARROW, HA2 8AA

E-Mail: info@massshipping.com, Web : www.massshipping.com

*Condition Apply - No hidden charges - No bogus promotions

மதுபானம் விற்பதற்கான அனுமதிப்பத்திரம் எடுத்துத் தரப்படும்

இலங்கையில் மதுபானம் விற்பனைக்கும், விநியோகம் செய்வதற்குமான அனுமதிப்பத்திரம் விற்பனைக்கு உண்டு.

ஆரம்பவிலை 10 மில்லியன் இலங்கை ரூபா அதிகூடிய விலை கேட்போருக்கு விற்கப்படும்

UK யில் Freehold and Leasehold Petrol Station மற்றும் Restaurant, Supermarket என்பன விற்பனைக்கு உண்டு

Contact us: 468, Church Lane, Kingsbury, London, NW9 8UA

M: 07956274856 Tel: 020 8200 2407 | Fax: 020 8200 2406

ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: _____

Address : _____

_____

_____

Postcode: _____

Telephone: _____

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலை யினையும்,
G11, Lombard House, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தமிழ் மக்களின் 'காத்திருத்தல்'-2

திலகர்



பீற்றர் ஆர்பென்ஸ்

நடராஜா முரளிதரன்

(ஒரு பேப்பருக்காக)

புலம்பெயர் சமூகங்கள் என்பதனை எந்த நாட்டினதும், எந்த இனத்தினதும், எந்தச் சமூகத்தினதும் நெருக்கடியான காலகட்டங்களிலும்நாம் அவதானிக்கலாம்.'யூதர்கள்'ஏனைய இனங்களால் அழிக்கப்பட்டபோது ஏறத்தாள இரண்டாயிரம் வருடங்களாகப் புலம் பெயர்ந்து வந்திருக்கின்றார்கள். தென்னாபிரிக்காவில் பிரிட்டிஸாரின் படையெடுப்புக்குத் தாக்குப் பிடிக்க முடியாத 'ஆப்பிரிக்கான்ஸ்' இனத்தவர்கள் தங்களது நிலப்பரப்பைக் கைவிட்டுக் கால்நடைகளையும், தங்களது உடமைகளையெல்லாம் திரட்டிக் கட்டியெடுத்துக் கொண்டு 'கரவன்' என்று அழைக்கப்படும் ஊர்திகள் மூலம் மத்திய நிலப்பரப்பை நோக்கி ஓடினார்கள்.'வியட்நாமிய','அமெரிக்க'யுத்தத்தின் போது பல இலட்சம் 'வியட்நாமிய' மக்கள் 'சீனாவுக்கு' ஓடி வந்திருக்கின்றார்கள். 'பாகிஸ்தான்' தனது முற்றுகையை வலுப்படுத்திய பொழுது ஒரு கோடி 'கிழக்கு வங்காள' முஸ்லீம் மக்கள் அருகிலிருந்த இந்திய மாநிலமான 'மேற்கு வங்கத்துக்குள்' நுழைந்து கொண்டார்கள். 'துருக்கியால்' நிகழ்த்தப்பட்ட ஆர்மீனிய இனப் படுகொலைகளின் பொழுது 'ஆர்மீனியர்கள்' தங்களது நிலப்பரப்புகளை விட்டு வேற்று நாடுகளுக்கு இடம்பெயர்ந்திருக்கின்றார்கள்.

அண்மைக்கால வரலாறுகளிலே 'யூதர்கள்', 'குர்தியர்கள்', 'பாலஸ்தீனியர்கள்', 'கிழக்குத் தீமோரியர்கள்', 'தீபெத்தியர்கள்', 'தென் சூடானியர்கள்', 'கொசொவோக்கள்', 'இலங்கைத் தமிழர்கள்','கியூபன்கள்','மெக்சிக்கர்கள்'என இந்தத் தொடர்ச்சி நீண்டு கொண்டேயிருக்கிறது. இவ்வாறு இடம்பெயர்ந்து மேற்குலகில் குடியேறியவர்கள் பொருளாதார ரீதியில் சில அனுகூலங்களைப் பெற்று வாழக்கூடியதாக இருக்கின்றது.

ஆகவே தாங்கள் வாழ்ந்த நாடுகளின் உள் முரண்பாட்டுச் சிக்கலின் பக்க விளைவாக நாடு மாறியோர் 'காசு காய்க்கும் மரங்களாக' நோக்கப்படும் சூழ்நிலை உருவாகிறது. இந்தக் 'காசு காய்க்கும் மரங்கள்' எங்கெங்கு போராட்டங்கள் நிகழ்ந்தனவோ அங்கெல்லாம் தனது தாக்கங்களை நிகழ்த்தியிருக்கும்.

வறுமையில் வாடிய குடும்பங்களுக்கு நிதிகளை வாரி வழங்கியிருக்கிறது.தன்னுடைய சகோதரர்களை படிப்பிக்க வைத்திருக்கின்றது. சகோதரிகளுக்கு மணம் புரிந்து வைத்திருக்கின்றது. தம்பி, தங்கையரை வெளிநாடுகளுக்கு வரவழைத்திருக்கின்றது. நாட்டிலிருந்த குடும்ப உறவுகளுக்கு வியாபார மூலதனங்களை உருவாக்கியிருக்கிறது. தங்களது சொந்தங்களுக்கு வீடு வாசல்களை வாங்கியும், கட்டவைத்தும் சொத்துக்களைக் சேர்க்க வைத்திருக்கின்றது. நோய்வாய்ப்பட்ட பெற்றோருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் வைத்தியம் அளித்திருக்கின்றது. இவையெல்லாம் இயல்பாக எங்களைப் போன்ற எல்லா இனக் கூட்டங்களுக்கும் அவர்களது தாய் நிலங்களில் நிகழ்ந்திருக்கின்றது.

எமது விடயத்தில் 1983ஆம் ஆண்டிலிருந்து நோக்கினால் முதல் மூன்று வருடங்களுக்குப் பின்னால் ஈழப் போராட்ட இயக்கங்கள் தங்கள் கால்களில் நிற்க வேண்டிய சூழல் எழுகின்றது. விதிவிலக்காக'எம்ஜிஆரின்'நிதியுதவி 'விடுதலைப் புலிகள் அமைப்புக்குக்' கிடைத்திருக்கின்றது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் போதும் இந்திய அரசின் நிதியுதவி அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் இதனுள் உள்ளடக்கலாம்.

ஆனால் இந்திய அழுத்தத்துக்குள் அகப்படாது விலகிக் கொண்டிருந்த 'விடுதலைப் புலிகள்' அமைப்புக்குத் தனது சுய காலிலேயே நிற்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஏற்கனவே தனது வலைப்பின்னலை தமிழ் மக்கள் பெருமளவில் வாழ்ந்த மேற்கு நாடுகளில் வலுவாகக் கட்டியிருந்த 'விடுதலைப் புலிகள் அமைப்பு' நிதிப் பின்தளமாக இதனை மாற்றுகிறது. வெளிநாடுகளில் வாழ்ந்த மக்களும் மண்ணில் நின்று உழைத்த , போராடிய அமைப்புக்குக் கணிசமான நிதியுதவி வழங்க முன் வந்தனர். இத்தகைய வாய்ப்பு ஏன் மற்றைய அமைப்புக்களுக்குக் கிடைக்கவில்லை என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நாங்கள் நோக்க வேண்டும்.

'மூன்றாம் கட்ட ஈழப்போரின் முடிவில் மேற்கு நாடுகளின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளின் பின்னணியில் அது, அபிப்பிராயங்களை உருவாக்கவல்லதும், தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தவல்லதுமான ஓர் இரண்டாவது பின்தளம் என்று அழைக்கப் படக்கூடிய வளர்ச்சியைப் பெற்றது' என்பது முழு உண்மையல்ல.

உதாரணத்துக்கு நான் சுவிசில் ஒருங்கிணைப்பாளராக இருந்த காலத்தில் இடம் பெற்ற ஒரு விடயத்தை எடுத்துக் கொள்ளுகிறேன்..'கிட்டுவை' இங்கிலாந்தில் இருந்து வெளியேறுமாறு கோருகின்றது அந்த நாட்டின் உள் துறை அமைச்சு. அவர் ஏற்கனவே மருத்துவச் சிகிச்சை பெறுவதற்கான விசாவின் அடிப்படையில்தான் அந்த நாட்டுக்குள் நுழைந்திருந்தார் என்பதுதான் எனது ஞாபகம். எனவே அவரைச் சட்டபூர்வமாக எந்த நாட்டுக்குள் கொண்டு செல்லலாம் என்ற பிரச்சினை எழுகிறது இயக்கத்துக்கு. அந்தச் சந்தர்ப்பத்திலே நானும், திலகரும், அன்ரனும் 'பேர்ணில்' அமைந்துள்ள அகதிகள் திணைக்களத் தலைமை அலுவலகத்தில் 'சுவிசின்' அகதிகள் துறைக்கான ஆணையாளர் 'பீற்றர் ஆர்பென்ஸை' சந்திக்கின்றோம்.

'ஆர்பென்சுக்கு' நிலைமைகளை எடுத்து விளக்கி 'கிட்டுவை' சுவிசிற்குள் அழைத்து வருவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டது எங்களால். ஆனால் 'ஆர்பென்ஸின்' நோக்கம் வேறு! 'விடுதலைப் புலிகள்' அமைப்பின் மிக முக்கிய பொறுப்பில் இருப்பவர் ஒருவரை வர வழைத்து அவரோடு பேச்சுவார்த்தை நடத்துவதன் ஊடாகத் 'தற்காலிக போர் நிறுத்தம்' ஒன்றை இலங்கை அரசோடு ஏற்படுத்துவதே 'ஆர்பென்சின்' எண்ணம்.

ஏனெனில் அகதிகள் பெருமளவில் தங்களது நாட்டுக்குள் நுழைவதை 'சுவிஸ்' நாட்டவர்களில் பெரும்பான்மையோர் ஏற்றுக் கொள்வதில்லை. எனவே பெருகி வரும் தமிழ் அகதிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களைத் தடுத்தாக வேண்டும். அந்தத் தந்திரோபாயத்தின் அடிப்படையில் 'ஆர்பென்ஸ்' காய்களை நகர்த்தினார். அதனால் சிறிது காலம் 'கிட்டுவுக்கு''சுவிசில்'வாழுவதற்கான அனுமதி மறைமுகமாக 'சுவிஸ்' அரசினால் வழங்கப் பட்டது. ஆனால் அவர்களது முயற்சி நிறைவேறவில்லை. பின்பு அவர்களாகவே 'கிட்டுவை' வெளியேறுமாறு கேட்டுக் கொண்டார்கள். நல்லெண்ணத்தின் அடிப்படையில் அவர்கள் செய்தஉதவியைக்கருத்திற்கொண்டு'கிட்டுவும்' வெளியே செல்வதென முடிவெடுத்தார்.

இங்கு உலகமயமாதல் சூழலில் ஒவ்வொரு நாடுகளினதும் நலன்கள் இன்னுமொரு நாட்டுடன் பின்னிப்பிணைந்துள்ளதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஆகவே அந்த நலன்களின் அடிப்படையில் சில விடயங்களைச் செய்ய வேண்டியதாகிறது. அதற்காக முழு நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புடனும் காத்திருத்தல் என்பதல்ல அதன் அர்த்தம் என்பதை மீண்டும், மீண்டும் இங்கு வலியுறுத்த வேண்டியுள்ளது. இது பலம் வாய்ந்த எதிரியிடமிருந்து பலவீனமானவன் தன்னைத் தக்க வைத்துக் கொள்வதற்காக நிகழ்த்துகின்ற செயற்பாட்டுத் தளம்.

தமிழர்கள் வீழ்ச்சியடைந்து கொண்டிருந்த வேளையில் மேற்கை நோக்கி, தமிழ் நாட்டை நோக்கிக் காத்திருந்தார்கள் என்பதைச் சிலர் 'குற்றப் பத்திரிகை' போன்று மீட்டுகின்றார்கள் என்றே நினைத்துக் கொள்ள நேர்கிறது. 'ஏகாதிபத்தியம்', 'நவகாலனித்துவம்', 'உலகமயமாதல்' போன்ற அனைத்து வடிவங்கள் தொடர்பான எமது விமர்சனங்களைத் தாண்டி இவ்வாறான நாடுகளில் தான் நாங்கள் எங்களுக்கு இழைக்கப்படுகின்ற இன்னல்களுக்கு எதிராகப் பேசவும், எழுதவும், போராடவும் கூடியதாக உள்ளது. குறைந்த பட்சம் 'தாராளவாத ஜனநாயகம்' தரும் இடைவெளியில் உலக மனித உரிமை உடன்படிக்கைகளைப் பற்றியாவது பேச முடிகிறது! இருப்பைத் தக்க வைத்துக் கொண்டு மேலும் தொடருவதற்காக!

இந்த இடத்தில் இன்னுமொன்றையும் கூறியே ஆக வேண்டும். 'ஏகாதிபத்தியம்', 'நவகாலனித்துவம்', 'உலகமயமாதல்' என்று வெளுத்து வாங்கி 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்று ஓங்கியுரைக்கும் இடதுசாரி நண்பர்களுக்கும் இந்த 'முதலாளித்துவ மேற்குலகம்' தான் இயங்குதற்கான வெளியாக உள்ளது. எனவே அதன் மீதான பயணம் அவசியமாகின்றது. மேலும் அந்த வெளியைக் கடந்து செல்வதற்காகவே அந்தப் பயணம் என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்!

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் போது செயற்பட்ட 'ஓபாமாவிற்கான தமிழர் அமைப்பின்' மூலம் அமெரிக்காவின் முடிவுகளில் செல்வாக்குச் செலுத்தலாம் என்ற நம்பிக்கை நான் சந்தித்த எந்த ஒரு கனடியத் தமிழனிடத்தும் இருந்ததை நான் அறியேன். 'வன்னிப் பெரு நிலத்தில் சாதாரண தமிழ் மக்கள் மத்தியில் இந்த நம்பிக்கை பரவலாகக் காணப்பட்டது' என்று சொல்லப்படுகிறது. 'ஓபாமாவின் பதவியேற்பு உரையின்போது அவர் ஈழத்தமிழர் களைப்பற்றிக் குறிப்பிடுவார் என்றொரு வதந்தியும்உலவியது'என்பதும் அதனோடு இணைந்த செய்திகளில் ஒன்று!

முள்ளிவாய்க்காலின் புறங்களில் நிகழ்ந்து கொண்டிருந்த 'மாபெரும் மனித அவலம்' அவ்வாறான இறுதி நம்பிக்கைகளுக்கு அந்த மக்களை இட்டுச் சென்றதா ? என்ற கேள்வி இங்கு எழுகின்றது.

'எதுவும் நடக்கவில்லை' என்பதுதான் அறுதியாக அங்கு நிகழ முடியும் என்பதை அரசியல் அறிந்த அனைவரும் தெரிந்தே வைத்திருந்தார்கள். அனால் அது அவர்களது வெளிப்பாடுகளில், சொல்லாடல்களில் நிகழாமல் இருந்திருக்கலாம். தாங்கள் காத்திருந்த எந்தக் கப்பல்களும் வந்து சேராத நம்பிக்கை உடைந்த ஊழிப் பெருங்காற்று தாண்டவம் ஆடியதையே அந்த மக்கள் கண்டிருந்தார்கள்.

எத்தனையோ பேரரசுகள் வீழ்ந்து மடிந்த சரிதங்களின் இறுதிக்களம் நிலம் சிறுத்துக் கொண்டு வருவதற்கான காட்சிப்புல விரிவாகவே இருந்திருக்கும். ஆனால் இங்கு ஒடுக்கப் பட்டவன் நிலை கொண்ட இறுதிக் கைபிடி மண்ணும் தாரை வார்க்கப்படும் குத்திமுறியும் சோகப் படலம்.

ஆனால் நம்பிக்கைகள் அற்றும் நம்பிக்கைகளுடனும் தான் உலகப் பெரு வரலாறுகளில் சின்னஞ்சிறிய இனங்கள் தப்பிப்பிழைத்திருக்கின்றன.

Immigration | Asylum | Family | Criminal Defence | Civil Litigation

Expert in Criminal Defence Services.
24 Hour Police Station Attendance
Magistrates' & Crown Court Representation

Contractual Disputes
Matrimonial - Divorce ancillary relief matters
Emergency Injunction

Immigration Law Specialists
Asylum & Immigration
Bail Application (Immigration Detention)
Removals, Deportation
Judicial Review & Emergency Injunction

Civil Litigation

We offer Legal Aid (FREE) in Crime, Immigration and Asylum matter

அகதி விண்ணப்பம், குடிவரவு, குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இலவசமான சட்ட உதவிக் கொடை கொடுக்கப்படும்

Criminal Defence Service
Community Legal Service
THE LAW SOCIETY ACCREDITED Immigration & Asylum

RAJ LAW SOLICITORS

169, Tooting High Street, London, SW17 0SY Tooting Broadway
Tel: 0203 133 0000 | Fax: 0203 133 0092 | www.rajlaw.co.uk
We are authorised and regulated by the Solicitors Regulation Authority (No. 421 980) Mail : info@rajlaw.co.uk

Emergency
079 4764 1876
079 1225 3418

எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு வழி வகுக்கும் தொழில்நுட்ப வளர்ச்சி

வேல் தர்மா

(ஒரு பேப்பருக்காக)

பாகிஸ்தானின் வட வஜ்ரிஸ்த்தான் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் தலிபான் போராளிகள் மூவர் இருக்கின்றனர். தொலைக்காட்சியில் மல்லிகா ஷெரவாத் ஒரு இந்திப் பாடலுக்கு நடனமாடிக்கொண்டிருக்கிறார். அதை இரசித்தபடி அவர்கள் தங்கள் தாக்குதல் திட்டமொன்றை வகுத்துக் கொண்டிருக்கின்றனர். குறித்தவீட்டில் தலிபான் போராளிகள் இருக்கிறார்கள் என்ற தகவல் அமெரிக்க உளவுத் துறைக்குக் கிடைக்கிறது. குறித்த வீட்டின் புவியியல் நிலையைத் துல்லியமாகக் கணித்து ஆப்கானிஸ்தானில் உள்ள ஒரு சி.ஐ.ஏ.யின் ஆளில்லாவிமானத் தளத்திற்கு தகவல் அனுப்பப்படுகிறது. அங்கிருந்து சிறுவர்களின் பட்டம் அளவுள்ள சிறு ஆளில்லா விமானங்கள் வட வஜ்ரிஸ்த்தானில் உள்ள குறித்த வீட்டை நோக்கிப் புறப்படுகின்றன. குறித்த வீட்டை அடைந்த விமானங்கள் மேலிருந்தபடியே அங்கிருந்து வரும் வெப்பத்தை அளவிட்டு வீட்டில் மூன்றுபேர் இருக்கின்றனர் என்ற தகவலையும் அவர்களின் இருப்பிடங்களையும் அறிந்துகொள்கிறது. உடன் ஒருவிமானம் அந்த வீட்டு சாளரக்கதவை உடைக்கிறது. இன்னொரு சிறு விமானம் வெடிகுண்டுடன் உள் நுழைந்து அங்கிருப்பவர்களில் ஒருவரின் மடியில் இறங்கிவெடிக்கிறது. மூவரும் இறக்கின்றனர்.

ஆப்கானிஸ்தானின் எல்லையுடன் அமைந்துள்ள ஒரு பாகிஸ்தானிய கிராமத்தில் அல் கெய்தாவினர் பெருமளவில் கூடி இருப்பதாக அமெரிக்க உளவுத் துறைக்குச் செய்தி கிடைக்கிறது. ஆப்கானிஸ்தானின் மறைவான இடமொன்றில் இருக்கும் அமெரிக்க ஆளில்லாப் போர் விமானத் தளத்தில் இருந்து ஒரு ஆளில்லா தாக்குதல் விமானம் புறப்பட்டுச் சென்று அக் கூட்டத்தினர் மீது ஏவுகணைக் குண்டுகளை வீசுகிறது. பலர் கொல்லப்படுகின்றனர். அந்த இடத்தில் இரு இனக் குழுமங்களிடையே கனிமவளங்கள் தோண்டுதலுக்கான உரிமை தொடர்பாக ஏற்பட்ட பிணக்கைத் தீர்க்க கிராமத்துப் பெரியவர்கள் கூட்டிய கூட்டம் அது. அதில் அல் கெய்தா உறுப்பினர்கள் எவரும் இல்லை. அமெரிக்க ஆளில்லா விமானத்தில் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் அப்பாவிப் பொதுமக்கள்என அமெரிக்கா அறிந்துகொள்கிறது.

தற்போதைய ஆப்கானிஸ்தான் போர்க்கள நிலைமை இப்படித்தான் இருக்கிறது. இதெல்லாம் விஸ்வரூபத்தில் காட்டமுடியாது. நாடுகளுக்கு இடையிலான இறைமை தொடர்பாக Westphalian international legal order என்னும் ஒழுங்கு இருக்கிறது. அதன்படி:

01. எல்லாநாடுகளும் தமது உள்நாட்டு விவகாரங்களை தாமே பார்த்துக் கொள்ளும் உரிமையுடையன.

02. ஒவ்வொரு நாடும் என்றும் சட்டரீதியாக சமமானவை

03. ஒரு நாட்டுக்குள் மற்ற நாட்டுப் படைகள் புகுந்து தாக்குதல் நடத்த முடியாது.

அமெரிக்க ஆளில்லாவிமானங்களின் தாக்குதல்கள் அப்பட்டமான ஒரு எல்லை தாண்டிய பயங்கரவாதமே. அமெரிக்காவுடன் பாகிஸ்தான் அரசு, படைத்துறை, உளவுத்துறை ஆகியன இரட்டைவேடம் போடுகின்றன. ஒரு புறம் அமெரிக்காவை தமது நாட்டுக்குள் புக அனுமதிக்கின்றன மறுபுறம் அதை எதிர்ப்பது போல் பாசாங்கு செய்கின்றன. பின் லாடன் கொலைதவிர அமெரிக்கா பாகிஸ்தானுக்குள் புகுந்து நடத்தும் தாக்குதல்கள் எல்லாம் பாகிஸ்தானின் அனுமதியுடனே நடக்கின்றன. மேற்கூறியவை போன்ற அமெரிக்க ஆளில்லாவிமானங்களின் தாக்குதல்கள் யேமன், சூடான், சோமாலியா, எதிரித்தியா ஆகியநாடுகளில் நடந்துகொண்டே இருக்கின்றன. பாக்கிஸ்தானைப் போலல்லாமல் இந்தநாடுகளில் அரசுகளின் எதிர்ப்புக்கு மத்தியிலேயே நடக்கின்ற எல்லை தாண்டிய பயங்கரவாதத் தாக்குதல்களே.

◆ பராக் ஒபாமாவிற்குப் பிடித்த தாக்குதல்கள்

பராக் ஒபாமா பதவிக்கு வந்ததில் இருந்தே அவர் ஆளில்லாவிமானத் தாக்குதல்களில் அதிக விருப்பமும் அக்கறையும் காட்டிவருகிறார். அமெரிக்கப் படையினருக்கு கணனி விளையாட்டுப்போன்ற ஆளில்லாவிமானத் தாக்குதல்களால் ஆப்கானிஸ்தானிலும் யேமனிலும் பல அல் கெய்தா மற்றும் தலிபான் போராளிகள் கொல்லப்பட்டுள்ளனர். ஆளில்லாப் விமானத் தாக்குதல்களிற்கு தனக்கு பொறுப்பும் கூறும் வகையற்ற ஒரு தான்தோன்றித்தனமான அதிகாரம் இருக்கிறதுஎன்றும் இருக்க வேண்டும் என்றும் பராக் ஒபாமா கருதுகிறார். சில அமெரிக்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இத் தக்குதல்கள் தொடர்பாக விசாரிக்க இரகசிய நீதிமன்றங்கள் தேவைஎனக் கருதுகின்றனர்.

◆ ஆபிரிக்காவில் மேலும் தளங்கள்

வட ஆபிரிக்காவில் அண்மைக்காலங்களாக அல் கெய்தா இயக்கத்தினர் தமது நடவடிக்கையை விரிவு படுத்தியமையைத் தொடர்ந்து அமெரிக்கா அங்கு பல புதிய ஆளில்லாப் போர் விமானத் தளங்களை அமைத்து வருகிறது. மாலியில் அல் கெய்தா தனது கைவரிசையைக் காட்டியமையைத் தொடர்ந்து நிகர் நாட்டில் அமெரிக்கா தனது ஆளில்லாப் போர் விமானத் தளத்தை அமைக்க நிகர் நாடு ஒத்துக் கொண்டுள்ளது. மாலிக்கு நடந்தது தங்களுக்கும் நடக்கக் கூடாதுஎனநிகர் நாட்டு அமெரிக்க சார்பு ஆட்சியாளர்கள் கருதுகிறார்கள். நிகர் நாட்டில் தளம் அமைக்கும் திட்டம் வெள்ளை மாளிகையின் உத்தரவிற்கு காத்திருக்கிறது.

◆ அமெரிக்கக் குடிமக்களைக் கொல்லலாமா?

அமெரிக்கக் குடியுரிமையுடைய இசுலாமியர்கள் அல் கெய்தாவில் இணைந்து ஆப்கானிலும் யேமனிலும் செயற்பட்டுவருகின்றனர். இவர்களையும் தேடிக் கொன்றுள்ளன அமெரிக்க ஆளில்லாப் போர் விமானங்கள். 2011இல் யேமனில் கொல்லப்பட்ட அன்வர் அவ்லாக்கி என்னும் அல் கெய்தாவின் முக்கிய தலைவரும், அல் கெய்தாவின் பிரச்சாரப் பீராங்கியான சமீர் கான் ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்க அமெரிக்கக் குடிமகன்களாகும். இது அமெரிக்கநீதிமன்றில் விசாரிக்கப் படவேண்டிய ஒன்று என்று சில சட்ட அறிஞர்களும் மனித உரிமை ஆர்வலர்களும் கருத்துத் தெரிவித்திருந்தனர். இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் நோபல் பரிசுபெற்றதென் ஆபிரிக்க மனித நேயச் செயற்பாட்டாளர் டெஸ்மண்ட் டுடு அவர்கள் 'அமெரிக்க மக்கள் தமது உயிர்களிலும் பார்க்க மற்றநாட்டு உயிர்கள் பெறுமதி குறைந்தது என்று எண்ணுகிறார்களா? நாங்கள் உங்களைப் போல் மனிதர்கள் இல்லாமல் அடிமைகளா?' என்று கேள்விகள் எழுப்பியுள்ளார். அனைவரும் நீதிவிசாரணைக்கு உட்படுத்தப்பட்டுகுற்றவாளிகளாகக் காணப்பட்ட பின்னரேதண்டிக்கும் உரிமை அமெரிக்காவிற்கு இருக்கிறது என்பது அவரின் விவாதம்.

◆ சட்டங்களுக்குஅப்பாற்பட்டது

அமெரிக்க உளவுத் துறையின் ஆளில்லாப் போர் விமானங்களின் நடவடிக்கைகள் அமெரிக்காவினதோ அல்லது வேறுஎந்த ஒரு நாட்டினதோ நீதித் துறையின் நியாயாதிக்கத்திற்கு உள் பட்டதல்ல என்று கூறப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபை இது தொடர்பாக விசாரிப்பதாகச் சொன்னது. சில மனித உரிமை அமைப்புக்கள் சாட்டுக்குதமது அதிருப்தியை வெளிப் படுத்தின.

◆ வடவாஜிரிஸ்த்தான்

அமெரிக்காவின் தாக்குதல்களால் வட வாஜிரிஸ்த்தானில் ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பாகதனக்கு அறிக்கைசமர்ப்பிக்கும்படி பாக்கிஸ்த்தானியப் பிரதமநீதியரசர் தோஸ்த் முகமட் கான் பாக் அரசிடம் உத்தரவிட்டார். பாக் பிரதிசட்டமா அதிபர் சமர்ப்பித்த அறிக்கையின் படி: 2008-ம் ஆண்டு 8 தாக்குதல்களில் 52 பேரும்,2009-ம் ஆண்டு 9 தாக்குதல்களில் 82 பேரும்,2010-ம் ஆண்டு 73 தாக்குதல்களில் 424பேரும்,2011-ம் ஆண்டு 38 தாக்குதல்களில் 241 பேரும்,2012-ம் ஆண்டு 19 தாக்குதல்களில் 95பேரும் கொல்லப்பட்டனர். மொத்தத்தில் 24 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த அறிக்கை சரியானதல்ல எனபாக்கிஸ்த்தானிய உயர் நீதிமன்றம் கூறியுள்ளது. இது பாக்கிஸ்த்தானிய அரசின் இரட்டை வேடத்தை எடுத்துக் காட்டுகிறது. பாக்கிஸ்த்தானில் மட்டும் ஆளில்லாப் போர் விமானத் தாக்குதலால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 2500இல் இருந்து 3500 வரை இருக்கலாம் என மதிப்பிடப் பட்டுள்ளது. வாஜிரிஸ்த்தான் மக்கள் அடிக்கடி பாக் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அமெரிக்க விமானத் தாக்குதல்களுக்கு எதிராக ஆர்ப் பாட்டம் செய்வதுண்டு. கொல்லப்படுபவர்களில் 18 முதல் 23% ஆனவர்கள் பொது மக்களே என்கிறது சி.என்.என் செய்தி நிறுவனம். எல்லாம் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்னும் போர்வையிலேயே அரங்கேற்றப் படுகின்றன. பாகிஸ்தான் ஆடும் இரட்டை வேடநாடகத்திற்குப் பரிசாக ஐக்கிய அமெரிக் காவிடமிருந்து பல பில்லியன் டொலர்களை நிதி உதவியாகப் பெறுகிறது.

08-02-2013 பிற்பகல் மூன்று மணியளவில் தனது எல்லைக்குட்பட்ட கடற்பிராந்தியத் திற்குள் இரு இரசிய SU-27விமானங்கள் அத்து மீறிப் பிரவேசித்ததாக ஜப்பான் அறிவித் தது. இவ்வாறே சீன விமானங்கள் அடிக்கடி ஜப்பானியப் பிராந்தியத்துக்குள் நுழைவ துண்டு. 12-02-2013 அமெரிக்கஅதிபர் பராக் ஒபாமா தனது இந்த ஆண்டுக்கான அமெரிக்கப் பாராளுமன்றத்தின் மக்களவையினதும் மூத வையினதும் உறுப்பினர்களுக்கானஉரையாற் றத் தயாராக இருக்கும் வேளையில் இரசிய விமானப் படையின் Tu-95 "Bear" bombers வெனிசுலேவியாவின் எல்லை ஓரமாக இருந்த அமெரிக்க எல்லைப் பகுதியில் ஊடுருவின. அவற்றை அறிந்து கொண்ட அமெரிக்கப் பாதுகாப்புப் பிரிவினர் தமது விமானங்களை அனுப்பி அவற்றை விரட்டினர். சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் பன்னாட்டரங்கில் தனது முக்கியத்துவம் குறைந்து விட வில்லை என்பதைக் காட்டுவதற்காக இரசியா அடிக்கடி அமெரிக்க மற்றும் பிரித்தானிய வான் பரப்புக்களுக்குள்

(தொடர்ச்சி 26ம் பக்கம்)

கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?

தனிநபரோ... வியாபாரமோ...

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்

BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN

CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN

CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN

BBK PARTNERSHIP

www.bbkca.com

Email: admin@bbkca.com

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

Chilling new Channel 4 images:

Will India act at least now?

By : G Pramod Kumar

If the desperate cries of women and children under carpet bombing, summary executions, and the tender body of slain LTTE leader V Prabhakaran's young son weren't enough for India to take a stand against Sri Lanka, will it still run away from spine-chilling new evidence that stares at its face?

While most of the civilised world rallied behind the move, India not only sat on the fence till the last minute along with some rogue-nations and countries with dubious human rights records, it also ensured that the text of the resolution was toned down to make it virtually ineffective.

The new evidence, published by The Hindu today, is unlikely to leave one for months. It's three photos in a sequence – a young boy sitting on a bench in a sandbag bunker, then he munching something, and finally, lying dead with bullet injuries on his chest.

We know this boy because we have seen his picture before. He is Balachandran Prabhakaran, the 12-year old son of slain LTTE leader V Prabhakaran. And the photos summarise the capture and cold-blooded murder of a young boy by his country's military.

The photograph of the boy that we had seen a year ago was the third one, in which the boy lay dead with bullet injuries. It was part of the second edition of the documentary on Sri Lanka's alleged war crimes by Britain's Channel 4. The sequence of pictures today makes the story complete.

"The new photographs tell a chilling story. This child has not been lost of course: he has been captured and is being held in a sandbag bunker, apparently guarded by a Sri Lankan Army soldier. In less than two hours he will be taken, executed in cold blood — and then photographed again." – says Callum Macrae, director of the Channel 4 movie, in his op-ed article in The Hindu.

Last year, Channel 4 had said that it had a sworn affidavit of an officer who said that the child, along with his bodyguards, were sent to the army to surrender, but they were interrogated to get the whereabouts of Prabhakaran before getting shot. With documentary evidence and forensic analysis, the channel has now proved this claim.

The new evidence is part of the third documentary by Channel 4 on Sri Lanka's war crimes titled, "No War Zone: The Killing Fields of Sri Lanka", which will be screened in Geneva next month, ahead of a second resolution that is coming up against the island nation at the UNHRC.

The subtext of Macrae's article is a direct hint at India's dubious role at the UNHRC last year when the international community moved its first resolution against Sri Lanka. The aim of the resolution, sponsored by the US and supported by 23 countries, was to fix accountability for the country's war crimes and to take genuine reparative steps.

While most of the civilised world rallied behind the move, India not only sat on the fence till the last minute along with some rogue-nations and countries with dubious human rights records, it also ensured that the text of the resolution was toned down to make it virtually ineffective.

Macrae's words make it clear that the new evidence is meant for India and that at least this time, the country needs to take a firm stand. He writes: "The new evidence in the film is certain to increase pressure on the Indian government not only to support a resolution on Sri Lanka and accountability, but also to ensure that it is robustly worded, and that it outlines an effective plan for international action to end impunity in Sri Lanka."

"It is difficult to imagine the mindset of an army in which a child can be executed in cold blood with apparent impunity. It also raises extremely difficult questions for the Sri Lankan military. With every month that passes, the evidence of systematic execution of prisoners grows. The pattern of apparent sexual violence against female fighters is disturbing in the extreme."

Macrae says that the photographs have been analysed by a forensic pathologist who confirmed that the boy had been shot at close range, so close that he could have touched the gun that killed him. He may have been forced to watch the execution of his bodyguards because he was not blindfolded. The forensic analysis also ruled out fabrication or manipulation of the images or their sequence.

The first and second parts of the Channel 4 film had shocked the world with documentary evidence of the alleged killing of thousands of Tamil civilians and different forms of war crimes such as rapes and executions. A UN report also said about 40,000 people had been killed in the war.

The film, together with a highly detailed account of the last phase of the war by Gordon Weiss, a former UN spokesperson in Colombo, led to a tide of international opinion against Sri Lanka that culminated in the resolution at the UNHRC.

However, the Sri Lankan government has been defiant even after the UNHRC resolution, which has forced the US to propose a new "procedural resolution" at the upcoming 22nd session in March. The island has not only done precious little to address the recommendations of the last resolution, but it has also become more brazen in muzzling free speech and civil liberties, and stripping down its constitutional and democratic institutions.

The brazenness recently hit the nadir, when the country's chief justice, Shirani Bandaranaika, was impeached for raising legal questions against the government. The free run of violent proxy-attacks against rights activists and journalists, including foreign nationals, and disappearances still continue.

Last week, the UN Human Rights Commissioner Navi Pillay was brutally frank when she said that the Sri Lankan government was indulging in triumphalism in the north. She also said that the civilians of the north have been prevented from commemorating victims of the war.

Reportedly, the graves of about 20,000 Tamil tiger fighters have been razed in the Vanni area where new museums and war memorials hailing the Sri Lankan soldiers have been erected. Navi Pillay has reportedly said that the triumphalist images will create a strong sense of alienation in the local population.

There have also been reports of military-tourism in the area to further the triumphalist sentiments, which effectively ridicule the suffering of tens of thousands of Tamil civilians who died at the hands of the country's military.

If not for the respect for human rights and the demands of its own people in Tamil Nadu, India should take a stand for its own security. Strategically, it is certainly dangerous to have a rights-violative dictatorship next door, which openly encourages the Chinese and the Pakistani

Macrae's words are ominous for India: "If there is no attempt to address these issues and to bring justice to those who suffered, the fear is that in the short term, political repression in Sri Lanka will increase and that in the long term, history is destined to repeat itself with yet more bloodshed and regional instability."

If not for the respect for human rights and the demands of its own people in Tamil Nadu, India should take a stand for its own security. Strategically, it is certainly dangerous to have a rights-violative dictatorship next door, which openly encourages the Chinese and the Pakistani

Courtesy: www.firstpost.com

✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Company Formation
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

Broken Dreams:

The Truth about Sri Lanka

By :The Social Architects

The brutal civil war in Sri Lanka ended nearly four years ago, but people are still hurting. The country's North and East are plagued by a host of problems that are unlikely to be resolved soon. Misguided policies emanating from the central government in Colombo have directly contributed to these negative trends. Lofty talk about "the defeat of terrorism" and majoritarian triumphalism have further antagonized people.

Resettlement and Land Issues

The politics of land remains controversial. Even though Menik Farm has closed, tens of thousands of IDPs have not been properly resettled. Since the military still occupies large swathes of land, many IDPs have been forced to move in with friends or relatives. In other instances, families that have been "resettled" lack adequate housing, with sanitation facilities.

People who were recently resettled in Mullivaikkal have returned to transit camps due to appalling living conditions "at home" and the dismal security situation there.

Furthermore, many community members do not have the proper identity documents required to regain their land. And there are consistent reports of land infringement and the expropriation of civilians' private lands by either "outsiders" coming from other parts of the country or military personnel. To be clear, there is still plenty of land that could be distributed, but – due to the government's withdrawal of a controversial land circular – the government claims that it is unable to provide community members with land at this time, asserting that the state must issue a new land circular before doing so. This is, at best, a dubious argument.

Militarization and the Rule of Law

The government's talk about a military drawdown lacks merit, especially in the Northern Province. "We are living under military occupation," notes one community member living near Jaffna. Even though several checkpoints have been removed, a large number of them have been converted into shops – such as grocery stores and cafés – that are run by the military. The ubiquity of military personnel does not leave people feeling safer; ordinary citizens feel more vulnerable and the country's continued militarization has contributed to a host of widespread social problems including alcohol abuse, sexual violence and rape.

In Kilinochchi and Mullaitivu districts, military personnel even demand that they be invited to all social functions, including private events like weddings. Militarization has also resulted in the harsh repression of dissent. People are simply reluctant to speak out or to talk about political issues. According to one community member in the North, "People are afraid to have political ideas."

The heavy monitoring of ex-combatants has continued unabated. Ex-LTTE cadres are consistently harassed by state security personnel. Security forces also monitor and harass people who had only tangential connections to the LTTE. Employers of ex-LTTE cadres are being questioned too, so people are now reluctant to hire other ex-LTTE cadres.

Regarding development projects, the military has its hands in every thing. In places like Vavuniya North, the military drafts its own beneficiary lists for housing projects.

And the military consistently uses NGOs to obtain personal information about community members. Further, development projects are being given to families and communities that overtly support the government. The politicization of aid permeates all levels of development work in the North and East.

In Kilinochchi and Mullaitivu, the Civil Defence Department – a part of the Ministry of Defence – has begun a large recruitment process in the Northern Province. This includes the military's recruitment of 400 preschool teachers. From urban development and aspects of tourism to the NGO Secretariat, it appears that even preschool education will now fall under the purview of the Ministry of Defence.

The rule of law in the North and East is virtually non-existent. Disappearances and extrajudicial killings have continued, but assailants are rarely held accountable. Like elsewhere in Sri Lanka, impunity has become institutionalized. Besides, there are few Tamil-speaking police officers in these areas, meaning that most community members would be unable to file a complaint since they are not conversant in Sinhala. Under standably, people are especially reluctant to go to the police when military personnel are the alleged offenders.

Sinhalization and the Denigration of Tamil Culture

The people of Sri Lanka should be free to settle in any area, but the central government should stop encouraging Sinhalese people to settle in historically Tamil areas. In addition, dozens of towns and numerous streets that originally had Tamil names have been given Sinhalese ones. And, with government money, Buddhist temples and war memorials (venerating the military) continue to be built in the North and East. Yet, scores of Hindu temples in need of renovation have been left neglected.

Economic Troubles

Believed to exceed 20 percent, unemployment for civilians in the Northern Province remains stubbornly high. As a corollary, military intrusion into civilian commercial activity is profound. In other cases, big business contracts have been awarded to former military personnel or those with strong ties to the armed forces. As noted, it is particularly difficult for ex-combatants to find work.

Women's Rights

Women and children have undoubtedly suffered disproportionately as a result of the war. Distressingly high levels of militarization and the proliferation of Female-Headed Households have left women in an even more precarious position. Now, many women have been compelled to become breadwinners while also taking care of their children, placing great strains on these war-torn communities. Also, reports of sexual violence and intimidation are common place. In other instances, women engage in sexual relationships with soldiers with the hope that they will be protected from other abuses. Failing to succumb to a military man's request for sexual favors could result in continued visits and harassment.

Conclusion

The end of war has not augured a return to normalcy in Sri Lanka's North and East. Rather, there are clear, indisputable indications that conditions are getting worse. Consequently, international condemnation of the country's human rights record is not only justified; it is essential. Giving Sri Lanka a free pass on human rights and reconciliation would set a damaging precedent that could take decades to overcome. If the time for more resolute action has not yet arrived, will it ever?

Courtesy: internationalpolicydigest.org

KIDSபேப்பர்

Kids Poem

Holiday Wishes

We wish for you a holiday
That's better than your dreams,
Filled with peace, good will and hope
And firelight that gleams,

Overflowing with holiday spirit
Good food and holiday laughter;
And when it's done, We hope that you
Live happily ever after!

Child Holiday Poem

My mom is cooking holiday treats;
My dad is spending money;
They think they've hidden all the gifts;
It's really pretty funny.

Now Mom and Dad are whispering;
They imagine I don't hear.
I'm really all excited;
It's a happy time of year.

I've made my holiday gift list;
Whatever I get, I'll be glad
To be a part of my family,
And the best holiday I've had!

Back to School

Early one morning, a mother went in to wake up her son.
'Wake up, son. It's time to go to school'
'But why, Mom? I don't want to go.'
'Give me two reasons why you don't want to go.'
'Well, the kids hate me for one, and the teachers hate me, too!'
'Oh, that's no reason not to go to school. Come on now and get ready.'
'Give me two reasons why I should go to school.'
'Well, for one, you're 52 years old. And for another, you're the Head teacher!'

Easter Poem

English people get together and think about the story of Jesus, Then celebrate Easter. Parents also hide. Round chocolate eggs for their children to find

Abirami Ramanan
Year 5, 10 yrs old

பெப்ரவரி 12 ஆபிரகாம் லிங்கன் எனும்வரலாற்றின்இணையற்றநாயகன் பிறந்தநாள். அவரின் நினைவாக இந்த பதிவு.

லிங்கன் தன் மகனைப் பயிற்றுவிக்கும் ஆசிரியருக்கு எழுதிய நெகிழ்ச்சி தரும் கடிதம்.

அனைத்து மனிதர்களுமே நேர்மையானவர்களாக, உண்மையானவர்களாக இருக்கமாட்டார்கள் என அவனுக்குச் சொல்லித் தாருங்கள். ஆனால் பகைவர்களுக்கு நடுவில் அன்பான நட்புக்கரம் நீட்டும் மனிதர்களும் உண்டென அவனுக்கு தெரிவியுங்கள்.

பொறாமை அவன் மனதை அண்டாமல் கவனமாக பார்த்துக் கொள்ளுங்கள். எதற்கெடுத்தாலும் பயந்து ஒடுங்கிப்போவது, கோழைத்தனம் என புரியவையுங்கள்.

புத்தகங்கள் என்ற அற்புத உலகத்தின் வாசல்களை அவனுக்கு திறந்து காட்டுங்கள். பசுமையான இயற்கை வனப்பை ரசிக்க கற்றுத் தாருங்கள்.

- கடிதம் -

ஏமாற்றுவதைவிடவும் தோல்வி அடைவது எவ்வளவோ மேலானது என்பதை அவனுக்கு கற்றுக்கொடுங்கள்.

மற்றவர்கள் தவறு என விமர்சித்தாலும் கூட, சுயசிந்தனை மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைக்க அவனுக்கு கற்றுக்கொடுங்கள்.

மென்மையான மனிதர்களிடம் மென்மையாகவும், முரட்டுக்குணம் கொண்டவர்களிடம் கடினமாகவும் அணுக அவனை தயார்படுத்துங்கள்

அனைத்து மனிதர்களின் குரலுக்கும் அவன் செவிசாய்க்க வேண்டும் என அறிவுறுத்துங்கள். எனினும், உண்மை எனும் திரையில் வடிகட்டி நல்லவற்றை மட்டும் பிரித்தெடுக்க அவனுக்கு கற்றுக்கொடுங்கள். துயரமானவேளைகளில் சிரிப்பது எப்படி என்று அவனுக்கு கற்றுக் கொடுங்கள்.

போலியான நடிப்பைக் கண்டால் எள்ளிநகையாடவும், வெற்று புகழுரைகளை கண்டால் எச்சரிக்கையாக இருக்கவும் அவனுக்கு பயிற்சி கொடுங்கள்.

அவனைக் கனிவாக நடத்துங்கள். சிறுமை கண்டால் கொதித்தெழும் துணிச்சலை அவனுக்கு ஊட்டுங்கள். அதேவேளையில் தனது வலிமையை மவுனமாக வெளிப்படுத்தும் பொறுமையையும் அவனுக்கு சொல்லி கொடுங்கள். இதுஒருமிகப்பெரியபட்டியல்தான்... இதில்உங்களுக்குசாத்தியமானதையெல்லாம் கற்றுக்கொடுங்கள். அவன் என் அன்பு மகன்.

இப்படிக்கு,
ஆபிரகாம் லிங்கன்.





Word Search

L	C	P	G	I	I	A	P	O	K
X	V	K	H	A	P	J	V	Y	T
A	L	I	V	U	K	O	K	P	V
I	G	D	T	G	M	A	Y	A	A
E	B	K	A	L	N	O	L	W	T
O	P	Z	O	K	Z	M	A	C	E
X	R	Y	E	H	W	R	L	Y	P
J	C	S	L	D	M	F	A	B	J
V	A	X	T	I	L	V	P	R	A
N	J	N	E	E	R	V	E	L	I

Words: Subject: Jaffna Places
NEERVELI, KOKUVIL, KOPAI, PALALY

Quotable Quotes

"Content makes poor man rich; discontent makes rich man poor"
B. Franklin.

" The harder you work the luckier you get."
Gray Player

" Nothing is impossible to a willing heart"
John Heywood.

Colouring - 188

Web: www.facebook.com/Kalai.Kili

Dear Kids...

Colour and Send in a picture to ORU PAPER. you could be the lucky winner Gift from KALAIKILI...

நீங்களும் கலைக் கிளி வழங்கும் பரிசினைப் பெற படத்திற்கு அழகுற வர்ணம் தீட்டி எங்களுக்கு அனுப்பி வையுங்கள்..



Issue 187 Winner
Keyuraa Nimalesh

Bharathwaj.S

நி.கியூரா

Ashwin, 8 Yrs

Abirami.R



Ashwin

Abirami

Tips of the Week

ஹலோ குட்டீஸ் இந்த வாரம் www.tamilkalanjiyam.com என்ற இணையத்தளத்தை சும்மா ஒரு தடவை தட்டித்தான் பாருங்களேன். பிடிச்சா அடிக்கடி தட்டுங்கோ, பிடிக்காட்டி அடுத்த வாரம் வேற ஒன்டை சொல்லுறம். உங்களுக்கு தெரிஞ்சதையும் எங்களுக்கு சொல்லுங்கோ.

www.tamilkalanjiyam.com/general_knowledge

JSN BATHROOMS

MERLYN M · KUDOS · hansgrohe · KUDOS · GROHE · GRUNDFOS · Hudson Reed

WIDE RANGE OF BATHROOMS & SHOWERS

மாபெரும் சிறப்பு மலிவு விற்பனையைத் தவறவிடாதீர்கள்.

European Toilet & unit

£180

European Single sink with tap

45cm £79

55cm £89

Hansgrohe mixer taps

Start from £59

Thermostatic shower mixer

Start from £49

European bathroom suite

Start from £90

Sliding shower doors

CALL FOR PRICES

SPECIAL DISCOUNTS FROM MERLYN, KUDOS, & SANEUX SHOWERS



Thermostatic concealed shower mixer

1 option £150

2 option £170

ITALIAN FURNITURE Start from £256



FULL BATHROOM SUITE Start from £220

Free standing baths

CALL FOR PRICES

SPECIAL DISCOUNTS FROM SANEUX

• BATHROOMS • SHOWERS • GRANITE TILES
• MARBLE TILES • PORCELAIN TILES *ALL AT DISCOUNT PRICES*

JSN HEAT SUPPLIES LTD

• PLUMBING • ELECTRICALS • BOILERS • RADIATORS
ALL AT DISCOUNT PRICES

WATER SOFTENERS AVAILABLE ALL BRANDS

Heated towel rails 600x1000 start from £49

DISCOUNTED PRICES ON BOILERS, RADIATORS & UNDERFLOOR HEATING

WIDE RANGE OF BOILERS & RADIATORS IN STOCK

WE STOCK ALL MAKES OF BOILER
ALL MEGAFLOW SYSTEM BOILERS SUPPLIED & FITTED AT AFFORDABLE PRICES

TEL: 020 8427 0553

Ideal Standard · Roca · GROHE · mira · MAIN · Hudson Reed · AQUALUX · ARISTON · Armitage Shanks · Vaillant · AQUALISA · KESTON · Glow-worm · WORCESTER · saneux

148 PINNER ROAD, HARROW HA1 4JE TEL: 020 8427 6969

நீங்கள் பத்திரிகைத் துறையில் ஆர்வம் உள்ளவரா...?

இணைந்து பணியாற்றத் தயாரா..... ?

விளம்பரம், சந்தைப்படுத்தல்

REQUIREMENT

- Eligibility to work in UK
- Minimum A level or Diploma
- Conversant in English and Tamil

JOB TASK

- Contact businesses or private individuals by telephone in order to solicit sales for goods or services, or to request donations for charitable causes
- Answer telephone calls from potential customers who have been solicited through advertisements.
- Maintain records of contacts, accounts, and orders.

Intersted candidate please send your resume to Info@orupaper.com Please mention the subject as Resume in the subject field.

துறை சார்ந்த செய்திகள், நாட்டு நடப்புக்களை சுவைபட எழுதும் திறமை உங்களிடமிருக்கிறதா ?

அல்லது மொழிபெயர்ப்புச் செய்யும் ஆற்றல் இருக்கிறதா ?

அப்படியாயின் இணைந்து பணியாற்ற என்ன தயக்கம் ?
வாருங்கள்....

அழையுங்கள் - 020 7043 4310

ஒரு பேப்பர் ORU PAPER

For More Details
Fbook : facebook.com/orupaper
Mail : info@orupaper.com
Web : www.orupaper.com

S24 MANAGEMENT
PROUDLY PRESENTS

தும் தும் தும் தும்

திருமண கண்காட்சி

SOUTH ASIAN WEDDING EXHIBITION

ஒவ்வொரு மணப்பெண்ணின் கனவு

பாரம்பரிய முறையிலான நவீன நகைகள்,
ஆடை ஆபரணங்கள், மணப்பெண்
அலங்காரம், புகைப்படம், மணமேடை
அலங்காரம், திருமண சேவைகளை வழங்கும்
முகைப்பிடங்களை இங்கே காணலாம்

Sunday 17th March 2013
Croydon Park Hotel,
7 Altyre Road
Croydon, CR9 5AA

இக் கண்காட்சி நாட்டில் உள்ள பாரம்பரிய
மற்றும் திருமண சம்பந்தும் உள்ள
பொருட்களை விற்கும் சிறு, நடுத்தர
தொழில் முலகர்களுக்கு சிறந்த ஓர் வர்த்தக
தளமாக அமையும்

நீங்களும் இதில் பங்கு கொள்ள
விரும்பினால் அழைக்கவும்

SINTHU - 07556 249 170
FATIMA - 07424 002 027
www.s24management.com
www.she24magazine.co.uk

அனுமதி இலவசம்

REGISTER FOR YOUR **FREE** **GOODIE** BAG

தீர்வுத்திட்டமில்லாத எதிரணியுடன் சேர்ந்தியங்குவதில்; எச்சரிக்கை தேவை

பாகம் 127

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமையுடைத்திவ்வுலகு" என்கிறது வள்ளுவம். இதற்கு யார் என்ன விளக்கத்தைக் கூறினாலும் 'நேற்று இருந்த போற்றுதலுக்குரிய ஒருவனை இன்று ஒழித்துக்கட்டிவிட்ட நிலையாமையென்னும் இழி பெருமையைக் கொண்டதுதான் இவ்வுலகு என்றுதான் அர்த்தம்கொள்ள வேண்டியிருக்கிறது. நாம் பலரை இழந்துவிட்டோம் சமீபத்தில் எமக்கு மிகவும் வேண்டியவோர் இன்னுயிரை அழித்துவிட்ட பெருமையில் இவ்வுலகம் இறுமாந்திருக்கிறது.

ஈழத்தமிழர்களுக்காகக் குரல் கொடுத்த தமிழ்த் தேசியப் பற்றாளர் டாக்டர் இரா ஜனார்த்தனம் ஐயா அவர்கள் சென்ற புதன் கிழமை காலை காலமான செய்தி மிகுந்த கவலையளிக்கிறது. அவரை இந்தியாவுக்குச் சென்ற சமயங்களில் பலதடவைகள் சந்தித்திருக்கிறேன். அவரை முதன்முறையாகச் சந்திக்கச் சென்றபோது அவரது வீட்டில் அவரில்லாததால் திரும்பிவந்து விட்டேன். பின்னர் செய்தியறிந்து பூச்செண்டுடன் என்னைச் சந்திக்க வந்தார். ஒரு ஈழத் தமிழப் பெண்ணுக்குத் தன் மகனைத் திருமணம் செய்துகொடுக்க விரும்புவதாகத் தன் ஆதங்கத்தை என்னிடம் வெளிப்படுத்தினார். தற்போது அவரது துணைவியார், மகள், மகன் ஆகியமூவரும் அமெரிக்காவில் வாழ்கின்றனர். துணைவியார் அங்குதான் தொழில் புரிகிறார் எனச் சொன்ன ஞாபகம். அமெரிக்கா சென்று சுகமாக வாழக்கூடிய வசதிகளிருந்தும் தமிழர் நலனுக்கு உழைக்க வேண்டுமென்பதற்காக தமிழ்நாட்டோடு தன் உறவை அறுத்துவிடாமல் அங்கேயே வாழ்ந்து மறைந்துவிட்டார்.

1974 உலகத் தமிழராய்ச்சி மாநாடு யாழப்பாணத்தில் நடந்தபோது இலங்கை வர விஸா மறுக்கப்பட்டும் எப்படியோ உள்நுழைந்து அதில் பங்குபற்றியதுமல்லாமல் போலீஸாரின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு கைதுசெய்யப்படாமல் தாயகம் திரும்பிய துணிகரமிக்கவரான ஐயா டாக்டர் ஜனார்த்தனன் தமிழ் இளைஞர் மத்தியில் விடுதலைக்கான போராட்ட உத்வேகத்தை யுருவாக்குவதில் அந்நாளில் ஓர் முக்கிய புள்ளியாக இருந்தார். எம்ஜிஆர் காலத்தில் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் கொறடாவாகவும் பணியாற்றிய அவர் 1983 இனக் கலவரத்தின்போது இந்திய மத்திய அரசு போதிய கவனமெடுத்துத் தமிழர்களைக் காப்பாற்றவில்லையேயென்ற மனக்குறையினால் தனது மேலவையுறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்தார்.

அத்தகைய தியாக உள்ளம்கொண்ட ஐயா டாக்டர் இராஜனார்த்தனன் அவர்களின் ஆத்மா நித்தியமான பரம்பொருளில் சாந்தி பெறப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கும் என் சார்பிலும் ***ஒரு பேப்பர்*** ன் அலசுவாரம் பத்திவாசகர்கள் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறேன்.

சமீபத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்படப் பலமுக்கிய தலைவர்கள் யாழ்ப்பாணம் சென்று வரலாற்றுப் பதிவுகளில் எழுதப்படக் கூடியவோர் உண்ணாவிரதப்போராட்டத்தை நடாத்திவிட்டுத் திரும்பியிருக்கிறார்கள். அரசாங்கத்தின் புலனாய்வுப் பிரிவினரிடம் அடிவேறு வாங்கியிருக்கிறார்கள். சமீப காலங்களில் இத்தகைய ஐக்கியப்பட்ட மனப்பான்மை சிங்கள தமிழ்த் தலைவர்களுக்கிடையே ஏற்பட்டு ஒன்றாகச் சேர்ந்து அடிவாங்கும் நிலைக்கு முன்னேறியிருப்பது ஏதோ நமக்குக் கிடைக்க வேண்டியதைப் பங்குபோட அவர்களும் முன்வந்துவிட்டார்களென்ற சந்தோசத்தை ஏற்படுத்தினாலும் சிறிது சந்தேகத்தையும் ஏற்படுத்துகின்றது. சோழியன் குடுமி சும்மா ஆடாதென்பார்கள். அந்த வகையில் பெரும்பான்மையின எதிரணித்தலைவர்கள் இன்று தங்களது அரச எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான களமாக எமது பிரதேசத்தை - அதாவது ***ஒரு பேப்பர்*** ன் வார்த்தைகளில் சொல்வதானால் - நொந்து நூலாகிப் போயிருக்கும் தமிழர் தாயகத்தைத் தேர்ந்தெடுத்திருப்பது எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்ற நோக்கத்திலா அல்லது உருப்படியாகத் தமிழினத்திற்கு எதையாவது நல்லதைச் செய்துவிடவேண்டுமென்ற ஆதங்கத்திலா என்பது புரியவில்லை. ஏற்கனவே அடக்குமுறைக் கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டு உள்?ர ஒருவகை வஞ்ச உணர்வோடு நீறுபூத்த நெருப்பாக அடங்கிப் போயிருக்கும் தமிழினத்தை நாங்களும் உங்களோடு கூட இருக்கிறோம் போராட வாருங்கள் என்றுதூண்டிவிடுவதுபெரும் பான்மைக்கு மிகவும் இலகுவான விடயம். ஆனாலும் அரச எதிர்ப்பு நடவடிக்கைகளால் கிடைக்கக்கூடியபலாபலன்களைமுன்கூட்டியேஊகித்து அப்பாவிப் பொதுமக்களையும் மாணவர்களையும் இளைய சமுதாயத்தையும் தமிழர் தலைமை உரிய வகையில் வழிநடத்துமாயின் எதிர்காலத்தில் நிகழக்கூடிய அனர்த்தங்களைத் தவிர்த்துவிடலாம். தெற்கே சிங்கள மக்களை ஒன்றுதிரட்டி ஓர் வெகுஜனப் போராட்டத்தை நடாத்தி அதில் வெற்றிபெறக்கூடிய திராணி தற்போதைக்கு எதிர்க்கட்சிகளிடையே இல்லையாதலால் விடுதலைப்போரால் அவிந்து அடங்கிப்போயிருக்கும் தமிழினத்தைத் தட்டியெழுப்புவதில் அக்கட்சிகள் முனைப்போடு செயற்படுகின்றன.

இத்தனைக்கும் எதிர்க்கட்சிகளிடையே இனப் பிரச்சனை தொடர்பான எந்தவொரு தீவுத் திட்டமோ கொள்கையோ இருப்பதாகத் தெரியவில்லை. தற்போதைக்கு எதிரிக்கு எதிரி நண்பன் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே அவை தமிழர் தரப்புடன் சேர்ந்தியங்கத் தொடங்கியிருக்கின்றன போலத் தெரிகின்றது. தமிழர் தரப்பும் அதே பாணியில் நமக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்குச் சகுனப்பிழையாக வேண்டுமென்ற பாணியில் எதிரணியில் நின்று போதிய தூரநோக்கின்றிச் செயற்படுமாயின் அது அவலை நினைத்து உரலை இடித்த கதைபோலவே முடியலாம்.

ஜெனிவா மனிதவுரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கைக் கெதிரான இரண்டாவது தீர்மானம் வரப்போகின்றது என்று அனைவரும் எதிர்பார்க்கும் இந்த நிலையிலும் அரசோ சற்றும் அதுபற்றிக் கவலைப்படாமல் தனது நாட்டுப் பிரதம நீதியரசரையே வேலையைவிட்டுத் தூக்கியிருக்கிறது. பழைய நீதியரசரும் பெட்டி படுக்கைகளைக் கட்டிக்கொண்டு தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தைவிட்டே வெளிக்கிட்டுவிட்டார். நீதியரசரைப் பதவி விலக்கிய கையோடு எதிர்க்கட்சியினர் மீது தனது கைவரிசையை அரசு காட்டியது. இவற்றாலெல்லாம் சற்றுச் சலசலப்பு ஏற்பட்டதுதான் மிச்சம். பிறகு எல்லாம் முடிந்துவிட்டது. பனங்காட்டு நரிசலசலப்புக்கஞ்சாது என்பதுபோல ராஜபக்ச அரசும் நாட்டில் உருவாகிய முணுமுணுப்புக்களையும் எதிர்ப்புணர்வையும் சிறிதும் சட்டை செய்யாமல் தன்பாட்டில் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

இவற்றைப் பார்க்கும்போது வரப்போகும் ஜெனீவாத் தீர்மானமும் இலங்கையரசை எதுவும்செய்துவிடப்போவதில்லையென்பதுபுலனாகின்றது. சுதந்திரமான நீதிநிர்வாகத்திற்கும் மனிதவுரிமைகளுக்கும் எதிராகச் செயற்படும் ஒரு நாட்டை ஐநா அல்லது சர்வதேச நிறுவனங்கள் கட்டுப்படுத்துவது என்பது அவ்வளவு எளிதான காரியம் போலத் தோன்றவில்லை. பொருளாதாரத்தடை போன்ற மிகவும் காட்டமான நடவடிக்கைகளை மேற்கொண்டும் கூடப் பலநாடுகள் தங்கள் விடாப்பிடியான மனிதவுரிமை மீறல்களை விட்டபாடில்லை. இத் தகையநிலையில் தமிழ்ச் சமூகம் ஏதோ நல்லது நடக்கப் போகின்றது....

(தொடர்ச்சி 26ம் பக்கம்)

அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

ஐக்கிய இராச்சியத்தின் பிரல்யமான 80
பல்கலைக்கழகங்கள் கலந்து கொள்கின்றன

Earls Court, London
Sat, 9th March
12:00-17:00

Earls Court
West Brompton

Register online for FREE entry Search

Universities Attending
University of Bath
Brimingham City University
Brunel University
University of Cambridge
Coventry University
King's College London
University of Hertfordshire
Imperial College London
University of Oxford
Royal Holloway, UoL
University of Sunderland
University of Sussex
University of York
+ more

MBAs from £3950

www.ukunifair.co.uk 020-7287-7040

Call us for free counselling and advice before the fair

R.S. Finance

Commercial Mortgages & Business Loans

Contact: Sri
258- High Street North
Manor Park, London E12 6SB
Tel: 020 8475 0755
Fax: 020 8470 4755 / Mob: 07803 600 543

Re-Mortgages
(Raising Funds to Start Own Business and Other Needs)
Secured Loans

Commercial Loans
Petrol Stations
Hotels,Restaurants & Takeaways
Convenience shops
Pharmacies

Loans will be arranged for lease hold and free hold business

Arrangements are made to meet the senior business manager from leading banks in our premises to fullfil your business loan requirements.

Whatever your needs, Regarding your Commercial Loans

பொது உடன்பாடு ஏற்படுவதனை வரவேற்கிறோம், ஆனால் விட்டுக்கொடுப்புகளுக்கு இடமில்லை

– கஜன் பொன்னம்பலம்

*இலங்கைத் தீவின் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பது தொடர்பில் தென்னாபிரிக்க அரசாங்கம் சில முன்னெடுப்புகளைச் செய்து வருவதும், இம்முயற்சிகளுக்கு சுவிற்சலாந்து அரசாங்கம் நிதியுதவி அளித்துவருவதும் இப்போது பலரும் அறிந்த இரகசியமாகி விட்டது. இது தொடர்பான செய்திகளை அண்மையில் சுவிற்சலாந்து அரசுடன் தொடர்புடை swissinfo.ch இணையதளம் வெளியிட்டிருந்தது. இத்தீர்வு முயற்சிகளின் ஒரு பகுதியாக தமிழ் அமைப்புகளை கொள்கையளவில் உடன்படவைத்து பொதுப்பிரகடனம் ஒன்றை வெளியிடுவதற்கான பேச்சுவார்த்தைகள் ஜேர்மனியைத் தளமாகக் கொண்டியங்கும் Berghof Foundation இன் அனுசரணையுடன் நடைபெற்றுவருகிறது. இதுபற்றிய மேலதிக தகவல்களை அறிந்து கொள்ளும் முகமாக கடந்த மாதம் பேர்லினில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களை **ஒரு பேப்பர்** தொடர்பு கொண்டது. தொலைபேசி வாயிலாக நடைபெற்ற இவ்வுரையாடலின் சுருக்கத்தினை இங்கு தருகிறோம்.*

ஒரு பேப்பர் : தென்னாபிரிக்க அரசின் அரசியல் தீர்வு முயற்சிகள் விடயம் தொடர்பாக மக்கள் மத்தியில் சில ஐயப்பாடுகள் உள்ளன. இது பற்றிய விபரங்களைக் கூறுவீர்களா?

கஜன்: தென்னாபிரிக்க அரசின் தீர்வு முயற்சிகளின் பின்னணி பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் எதிர்கொண்ட பிரச்சனைகளும் தமிழ் மக்கள் இன்று எதிர்கொள்ளும் பிரச்சனைகளும் அடிப்படையில் நேரெதிரானவை. அங்கு சிறுபான்மை இன மக்கள் பெரும்பான்மை மக்களை ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கி ஆட்சியை நடாத்தி வந்தார்கள். பெரும்பான்மையான மக்களை உள்ளடக்கிய ஜனநாயக முறையை உருவாக்கியதன் மூலம் அங்கு ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை நிலைநாட்ட முடிந்தது. இலங்கைத்தீவில் ஜனநாயகம் தொடர்பான குறைபாடுகளிருந்தாலும், பெரும்பான்மை ஜனநாயகம் மூலம்தான் அரசாங்கம் தெரிவு செய்யப்படுகிறது. இவ்வாறு தெரிவு செய்யப்படும் அரசாங்கமானது தமிழ்மக்களது இறைமையை அங்கீகரித்து, அதற்கு சட்டபூர்வமான அங்கீகாரத்தை வழங்க மறுப்பதே இங்குள்ள பிரச்சனையாக உள்ளது. ஆகவே தென்னாபிரிக்க அனுபவங்களிலிருந்து பாடம் கற்றுக் கொண்டு, அதே அணுகுமுறையுடன் இலங்கைத்தீவின் அரசியல் பிரச்சனைக்கு தீர்வு காணமுடியும் என நான் நம்பவில்லை.

எங்களைப் பொறுத்தவரை பேர்லின் சந்திப்பினை, தாயகத்தில் உள்ள அமைப்புகளுக்கும் புலம்பெயர் நாடுகளில் உள்ள அமைப்புகளுக்கும் இடையில் ஒரு பொதுவான நிலைப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியாகவே பார்க்கிறோம். இந்தவிடயத்தில் நாங்கள் மற்றய அமைப்புகளுடன் இணைந்து செயற்படத் தயாராக இருக்கிறோம்.

ஒரு பேப்பர் : ஈழத்தமிழ் அரசியல் அமைப்புகள் இணைந்து கொள்கையளவில் இணக்கப்பாட்டுடனான ஒரு பொதுத்தீர்மானத்தினை வெளியிடவிருப்பதாக உலகத்தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் ஒரு பேப்பருக்கு அண்மையில் தெரிவித்திருந்தார். அப்பிரகடனத்தில் நீங்களும் இணைந்துகொள்வீர்களா? அவ்வாறு இணைந்து கொள்வீர்களானால், குறைந்த பட்சக் கோரிக்கைகளாக எவற்றை முன்வைப்பீர்கள்?

கஜன்: தேசத்தின் அங்கீகாரம், தனித்துவமான இறைமை, தாயகம், சுயநிர்ணய உரிமை போன்ற இக்கோடுபாடுகளை அங்கீகரிக்கிற ஓர் இணக்கப்பாட்டினையே நாங்கள் வலியுறுத்துகிறோம். இதில் எந்த விட்டுக்கொடுப்புகளுக்கும் நாங்கள் தயாராக இல்லை. அனைத்துத்தரப்புகளும் இவ்விடயங்களில் ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வந்தாலும், உடன்பாடு காணப்பட்ட விடயங்களுக்கு முரணாக அமைகிற செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபடக்கூடாது என்ற விடயத்திலும் நாங்கள் தெளிவான ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். இங்கு ஒரு ஆபத்து இருக்கிறது, அது என்வென்றால் பெயரளவில் இவற்றுக்கு இணங்கி உடன்பாட்டுக்கு வருபவர்கள், நடைமுறையில் சிறிலங்கா அரசின் இறைமைக்குள் அதிகாரப் பகிர்வு, மற்றும் பதின்மூன்றாம் திருத்தம் மூலம் தீர்வுகாணுதல் போன்ற விடயங்களில் இறங்குவதற்கான வாய்ப்புகளும் இருக்கிறது. அரசியல் தீர்வு முயற்சிகள் சிறிலங்கா அரசியலமைப்புக்கு வெளியில்தான் இருக்க வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம். மக்களுக்கு ஒரு முகத்தையும் செயலில் வேறொன்றை செய்வதற்கும் இடம் கொடுக்க முடியாது. சிறிலங்கா அரசுடனான பேச்சுவார்த்தைகள் இந்த விடயங்களை அங்கீகரிப்பதாகவே அமைய வேண்டுமே தவிர, இவற்றை ஏற்றுக் கொள்கிறார்களா இல்லையா என்பது தொடர்பாக பேச்சு வார்த்தை நடாத்த வேண்டிய அவசியமில்லை.

அங்கு கலந்து கொண்ட மற்றைய அமைப்புகளைப் பொறுத்தவரை, ஒரு தரப்பினர், இறைமையுள்ள தமிழீழம் ஒன்றை அடைவதைத் தவிர வேறெந்த தீர்வுக்கும் தங்களால் செல்ல முடியாது, அதற்கான ஆணையே மக்கள் தங்களுக்கு வழங்கியுள்ளார்கள் என்றும் இன்னொரு தரப்பினர், தாயகம் - தேசியம் -தன்னாட்சி உரிமை என்பது இறுதி இலக்காக இருந்தாலும் அதனை அடைவதற்கு பல்வேறு தந்திரோபாயங்களைப் பயன்படுத்தலாம் என்றும் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தின. ஆகவே மூன்று நிலைப்பாடுகள் அங்கு முன்வைக்கப்பட்டன.

ஒரு பேப்பர் : தென்னாபிரிக்காவின் முன்னெடுப்புகள் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள சர்வதேச முரண்பாடுகளுக்கான குழுவின் ஆய்வாளர் அலன் கீனன், இம்முயற்சி வெற்றியளிப்பதற்கான சாத்தியக்கூறு மிக அரிதாகவே உள்ளதாக தெரிவித்துள்ளார். இந்நிலையில் இது போன்று காலத்தை இழுத்தடிக்கும் முயற்சிகளில் ஏன் ஈடுபடுகிறீர்கள்?

கஜன்: தென்னாபிரிக்காவின் முயற்சியானது சிறிலங்கா அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சுவார்த்தையினை ஏற்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டது. அம்முயற்சிக்கு ஏதாவது ஒரு வகையில் உதவுவதற்காக தமிழ் அமைப்புகளுக்கிடையில் பொது இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதற்கு முயன்றிருக்கலாம்.ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பொறுத்தவரை, தென்னாபிரிக்காவின் முயற்சி வெற்றிபெறுகிறதோ, இல்லையோ பேர்லின் மாநாடு போன்ற முயற்சிகளின் மூலம் தமிழ் அமைப்புகளுக்கிடையில் பொது இணக்கப் பாட்டினை ஏற்படுத்தலாம் என்றால் அதனை நாம் வரவேற்கிறோம்.

ஒரு பேப்பர் : வரும் மார்ச் மாதத்தில் ஐ.நா. மனிதவுரிமைச் சபையில், சிறிலங்கா தொடர்பில் அமெரிக்கா கொண்டுவரவிருக்கும் தீர்மானம் கடந்த முறைகொண்டுவரப்பட்டது போன்று நீர்த்துப்போன தீர்மானமாகவும்,அதில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு மேலும் கால அவகாசத்தினை வழங்கவிருப்பதாகவும் தெரிய வருகிறது. இந்நிலையில் இத்தீர்மானம் ஏதாவது சாதகமான விடயங்களை கொண்டிருக்கும் என எதிர்பார்க்கலாமா?

கஜன்: கடந்த முறை ஐ.நா. மனிதவுரிமைச் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் மூலம் தமிழ் மக்களுக்கு எதுவித நலனும் ஏற்படவில்லை. இன்னும் சொல்லப்போனால், தமிழர்களைப் பொறுத்தவரை, தீர்மானம் கொண்டு வரப்படுவதற்கு முன்னர் இருந்த நிலையை விட பின்னர் உள்ள நிலமை மேலும் மோசமடைந்துள்ளது. கடந்த முறை கொண்டு வரப்பட்ட தீர்மானம் தமிழ்மக்களுக்கு பெருத்த ஏமாற்றத்தையே கொடுத்தது. உள்ளகரீதியாக LLRCஐ அமுல்படுத்துவதன் மூலம் நல்லிணக்கத்தையும் அரசியல் தீர்வையும் ஏற்படுத்தலாம் என்று கூறப்பட்டது. பொறுப்புக்கூறும் விடயத்தில் உள்ளக விசாரணையை நடாத்துமாறும் கோரப்பட்டது. எங்களைப் பொறுத்தவரை இரண்டுமே ஏற்றுக்கொள்ள முடியாத கோரிக்கைகள். சர்வதேச அழுத்தங்களிலிருந்து தங்களைப்பாதுகாக்கவே சிறிலங்கா அரசாங்கம் LLRC ஐ உருவாக்கியது. குற்றவாளிகளையே தங்களது குற்றத்தை விசாரிக்குமாறு கோருவது இயற்கை நீதிக்கு முரணானது.

சிறிலங்கா அரசாங்கம் இவற்றை நடைமுறைப்படுத்தவில்லை, ஆகவே அதனை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்துவதாக இன்னும் ஒரு தீர்மானம் கொண்டுவரப்படுமானால், சிறிலங்கா அரசாங்கம் தமிழின அழிப்பை தொடர்வதற்கான கால அவகாசத்தை வழங்குவதாகவே அது அமையும். வரும் அமர்வுகளில் எதனை எதிர்பார்க்கிறோம் என்பது தொடர்பாக எமது வேண்டுகோளை ஒரு அறிக்கை வாயிலாக வெளியிட்டுள்ளோம்.

ஒரு பேப்பர் : அண்மையில் உங்களது கட்சியினால் வெளியிடப்பட்ட அறிக்கையில், தமிழீழப் பகுதிகளில், சிறிலங்காவின் அரசியல் அமைப்புக்கு வெளியில் ஒரு இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட வேண்டும் என சர்வதேசத்திடம் வேண்டியிருக்கிறீர்கள். இதன் நடைமுறைச் சாத்தியம் பற்றி விளக்குவீர்களா?

கஜன்: நடைமுறைச்சாத்தியமா என்று நீங்கள் கேட்பது, சிறிலங்கா அரசாங்கம் இத்தகைய கட்டமைப்பை ஏற்படுத்தித்தருமா என்ற அர்த்தத்தில் என்றால் அதற்கு சாத்தியம் இல்லை என்பதனை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இதுபோன்ற சர்வதேசப் பொறிமுறை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதற்கு பல உதாரணங்கள் இருக்கின்றன. கிழக்கு திமோர், கொசோவோ, ஆச்சே போன்ற இடங்களில் ஏற்படுத்தப்பட்டன. மிக அண்மைய உதாரணமாக தென் சூடானை எடுத்துக் கொள்ளலாம். சர்வதேசம் தலையிட்டு,இறுதித்தீர்வு கிடைக்கிறவரைக்கும் ஒரு இடைநிலை நிர்வாகம் இங்கெல்லாம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உண்மையில் இத்தைகய பொறிமுறைகள்தான் இறுதித் தீர்வை ஏற்படுவதற்கு வழிசமைத்தன.தீர்வினை ஏற்படுத்துவதற்கு,மோதல் நிலையையும் இராணுவமயப்படுத்தலையும் ஒரு உறை நிலைக்கு கொண்டுவருவது அவசியம். கடந்த ஜெனிவா தீர்மானம் கூட இந்த உறைநிலையை உள்ளக கட்டமைப்புகள் மூலம் உருவாக்க முனைந்தது.அதுவெற்றியளிக்கவில்லை.ஆகவே அரசியலமைப்புக்கு புறம்பாகவே இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படவேண்டும்.

ஒரு பேப்பர் : தற்போதைய சிறிலங்கா அரசாங்கம் ஜனநாயக வழிமுறைகளை கைவிட்டு, இராணுவமயப்பட்ட ஆட்சியை நடாத்துவதற்கு எதிராக போராடுவதற்காக எதிர்கட்சிகளின் கூட்டணியில் இணைந்து கொள்வீர்களா?

கஜன்: தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்கும் கட்சிகளுடனும், அமைப்புகளுடனமே எம்மால் பொது இணக்கப்பாட்டுக்கு வரமுடியும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் அமைக்கப்படும் அரசியல் கூட்டணிகளின் வேலைத் திட்டத்தில் நாங்கள் இணையப்போவதில்லை.

ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது, அவர்தம் ஆற்றலும் தனித்துவமானதே..

உங்கள் பிள்ளைகளும் கல்வியில் ஓங்கிட, நாளைய உலகின் சவால்களை வென்றிட..

Enrol them in Learna

• Individualised • Interactive • Inspiring

Maths & English
Teaching for
4-16 years olds

FREE Assessment

We also prepare pupils for

• 11 plus entrance exams
• Key Stage 2 SATS examinations
• Key Stage 3 and GCSE Maths
• A' Levels - Maths, Chemistry & Physics

LEARNA
because every child is unique

Call 0845 094 0061 or visit www.Learna.co.uk 5-6 The Broadway, Sutton, Surrey, SM1 4BU.

அந்த மூட்டைப்பூச்சி

இந்த மூட்டைப் பூச்சி பற்றிய விடயம் ஒரு சிறியதே என்றாலும், இன்றுவரை அதன் நினைவு என் நெஞ்சை விட்டு அகல மறுத்து ஆழப் பதிந்ததனால் கட்டாயம் இது பற்றியும் எழுத வேண்டும் என்றுமுடிவெடுத்தேன். ஆனால் பல ருக்கு மூட்டைப் பூச்சி பற்றித் தெரிந்தே இருக்காது.

எங்கள் வீடு மிகச் சுத்தமானது என்பதால் வீடுத் தள பாடங்களும் சுத்தமாகவே இருக்கும். நான் ஆறாம் வகுப்புப் படிக்கப் போனதன் பின்னர், எனக்காகப் படிப் பதற்குத் தனி மேசை கதிரை கட்டிலுடன் தனி அறை இருந் தது. அது எனக்குப்பதவி உயர்வு கிடைத்தது போன்றது.

எனக்கு பல நண்பிகள் இருந்தனர். அவர்கள் வந்தால் நாம் வீட்டு முற்றத்தில் இருந்து கதைப்போம். முற்றத் தில் வேறு யாராவது வந்தால், ஏதாவது பகிடியாகக் கதைப் பதெனில் என் அறைக்குள் போய் இருந்து கதைப்போம். எனது அம்மம்மா எப்போதும் வீட்டுக்கு முன்னால் தான் அமர்ந்திருப்பார். பெடியளின் கதை ஏதும் என்றால் அம்மம்மாவுக்கு கேட்டாலும் என்ற பயத்தில் என் அறை தான் தஞ்சம்.

எனது வீடுதான் சுத்தமே ஒழிய எனது இரு நண்பி களின் வீடுகளில் மூட்டைப் பூச்சியின் தொல்லை இருந் தது. அதனால் அவர்கள் வீட்டுக்குப் போனால் நான் கதிரைகளில் இருப்பதைத் தவிர்த்து விடுவேன். வெளி யில் சீமெந்துத் திண்ணைகளில் இருந்துவிடுவேன். சில வேளைகளில் அவர்களின் தாய்மார் உள்ளுக்குள்ள வந்து கதையுங்கோவன் என்றால் வெளியே தான் நல்ல காற்று வரும் என்று விடுவேன். மூட்டையின் தொல்லையால் தான் வெளியே இருக்கிறேன் என்று கூற மனம் வருவதில்லை.

காலை ஐந்தரைக்கு எழுத்து ஒரு மணி நேரம் படிக்க வேண்டும் மாலையும் ஒருமணி நேரம் கட்டாயம் படித்தே ஆகவேண்டும். என்னறையில் என்மேசையில் தம்பி தங்கைகளை அறைக்குள் அனுமதிக்காது இருந்து படிப்பது. ஏன் அவர்களை விடுவதில்லை எனில் சில வேளை படிக்கும் மனோ நிலை வராது. அப்போதெல் லாம் பாடப் புத்தகத்துள் கதைப் புத்தகத்தை மறைத்து வைத்துத் தான் வாசிப்பது. அம்மாவும் பிள்ளை மும் மரமாகப் படிப்பதாக நம்பிக் கொண்டு போய்விடுவா. ஆனால் தம்பி தங்கை என்றால் பக்கத்தில் வந்து நின்று நோண்டுவார்கள். என்னக்கா படிக்கிறீர்கள் என்று எட்டிப் பார்ப்பார்கள். கதைப் புத்தகத்தைக் கண்டால் உடனே அம்மாவிடம் கோள்மூட்டி விட்டுத் தான் மறு வேலை. அத னால், நான் படிக்கு நேரம் அவர்கள் என் அறைக்குள் வரத் தடை.

சரி இனி விசயத்துக்கு வாறன். ஒரு நாள் மாலையில் படிப்பதற்கு இல்லை இல்லை கதைப் புத்தகம் வாசிப் பதற்கு ஆவலா புத்தகத்துக்குள்ள புத்தகம் வைத்துக் கொண்டு என் கதிரையில் அமர்ந்தால் இரு நிமிடமாக வில்லை தொடையின் கீழ்பகுதியில் ஊசியால் குற்றுவது போல் இருக்க நானும் எதோ என்று விட்டுமீண்டும் புத்த கத்துள் ஆழ்ந்துவிடுகிறேன். மீண்டும் அதே ஊசிக் குற்றல். என்ன இது என்று ஏதும் சிராம்பு என் உடையுடன் ஒட்டிக் கொண்டதோ என்றுவிட்டு எழுந்து என் பாவா டையை உதறிவிட்டு இருக்கிறேன். மீண்டும் அதே தாக்குதல். ஆனால் இப்ப தொடையில் சரியான கடுப்பு. தாங்க முடியாமல் சொறியும் போதுதான் பார்த்தால் அந்த இடம் தடித்துப் போய் இருந்தது. உடனே எனக்கு விளங்கி விட்டுது இது மூட்டைக் கடி என்று. உடனே ஒரு கல வரமும் வந்தது. எங்கள் வீட்டில் இது இல்லையே எப்படி வந்தது என்று. இரு நாட்களுக்கு முன் நண்பிகள்வந்து கதைத்துக்கொண்டிருந்தார்கள். யாரின் உடையுடனோ ஒட்டிக் கொண்டு வந்திருக்கிறது என எண்ணிக் கொண்டு, இருக்க எண்ணிய நான் இருக்காது கட்டிலில் போய் அமைந்தேன்.

கட்டிலில் இருந்து படிப்பதும் அப்பாவுக்குப் பிடிக்காது. முதுகு வளைந்துவிடும் கதிரையில் நேராக இருந்து படிக்க வேண்டும் என்பார். அதனால் எப்படியாவது மூட்டையை நசுக்க வேண்டும். ஆனால் அப்போது இருட்டிவிட்டபடி யால் ஈர்க்குக் குச்சிக்கு நாளை வரை காத்திருக்க வேண் டும் என எண்ணிக் கொண்டு அரைவாசிக் கதையை வாசித்து முடித்தேன். அடுத்த நாள் மிகுதிக் கதையை வாசித்து முடிக்கும் அவசரத்தில் கதிரையில் இருந்து விட்டேன். சரியான பசிபோல் மூட்டைக்கு. அவசரமாக ஓடிவந்து இரத்தம் குடிக்க ஆரம்பித்தது. அது என்

இரத்தத்தை உறிஞ்சுகிறதே என்னும் கோபத்தை விட என்னை கதையை வாசிக்க விடாது செய்வதுதான் கோபத்தை அதிகப்படுத்த விரைந்து சென்று ஈர்க்கு ஒன்றை எடுத்து வந்தேன்.

எனது கதிரை மரத்தால் ஆனது பிளாஸ்டிக் வயர்க ளால் பின்னப்பட்டிருக்கும். அந்த பின்னப்பட்ட இடை வெளிகளில் எங்கோதான் என் எதிரி ஒளிந்திருக்கிறது. எனவே எல்லா இடைவெளிகளுள்ளும் ஈர்க்கை விட்டு நன் றாகக் குத்தினேன். மும்மரமாகக் தாக்குதலை நடத்திக் கொண்டிருக்கும் நேரம் பாத்து என் கடைசித் தம்பி வந்து விட்டான். என்ன அக்கா கதிரைக்குச் செய்யிறீங்கள் என்று கேள்வி வேறு. அவனுக்குத் தெரிந்தால் அதோ கதிதான். உடனே குந்தி இருந்த நான் எழுந்து எப்பிடிப் பின்னி இருக் கினம் என்று பாக்கிறேன் என்று கூறிவிட்டுமீண்டும் கதிரை யில் அமர்கிறேன். ஈர்க்கால் குத்திய குத்தில் இப் போதைக்கு மூட்டை வர மாட்டுது என்ற நம்பிக்கை. அக்கா சாப்பாடு வேணும் என்கிறான் தொடர்ந்து தம்பி.

அம்மா பக்கத்து வீட்டுக்குப் போய் விட்ட படியால் தம்பிக்கு நான் தான் சாப்பாடு தீத்த வேண்டும். அவன் கடைசிப் பிள்ளை என்பதால் சரியான செல்லம். அதனால் யாராவது அவனுக்குத் தீத்தி விட வேண்டும். மனதுக்குள் எரிச்சல் வந்தாலும் அடக்கிக் கொண்டு அவனுக்கு உண வைப்பிசைந்து ஊட்டுகிறேன். அவன் உண்டு முடிந்ததும் விளையாட ஓடியபிறகு மீண்டும்என் நாற்காலியில் வந்து அமர்கிறேன். கொஞ்ச நேரம் எந்தக் கடியும் இல்லை. ஈர்க்கு நல்லாத்தான் வேலை செய்யுது என எண்ணியபடி அம்மா திரும்பி வருவதற்குள் கொஞ்சமாவது வாசித்து முடிக்க வேண்டும் என்ற அவசரத்துடன் வாசிக்கத் தொடங்குகிறேன்.

கதை நல்ல விறுவிறுப்பாகப் போகிறது. நாளை நண்பி யின் புத்தகத்தை அவளிடம் கொடுத்தே ஆகவேண்டும். அந்த அவசரம் வேறு. மும்மரமாக வாசித்துக் கொண்டி ருக்கும் போது மீண்டும் மூட்டையின் தாக்குதல். இன்று உன்னைக் கொல்லாது விடுவதில்லை எனச் சூளுரைத்த படி ஈர்க்கை எடுக்கிறேன். ஈர்க்கு ஒரு கட்டத்துக்கு மேல் உள்ளே போகவில்லை. அம்மாவின் பெரிய ஊசி ஒன்றை எடுத்துவந்து ஒவ்வொரு இடைவெளிக்குள்ளும் ஊசியை விட்டு கிண்டுகிறேன். ஏதோ பெரிய சாதனையைச் செய்ததுபோல் வெளியே கொண்டுசென்று சிறியதடியால் நசித்து எறிந்துவிட்டு நீண்ட நின்மதியுடன் கதிரையில் அமர்கிறேன்.

- நிவேதா

நினைவு வணக்க நிகழ்வுகள்

முத்துக்குமார் முருகதாசன் உட்பட தமிழீழ விடுதலைக்காக தீயினால் தமை உருக்கி விடுதலைக்காக தம்முயிர் கொடுத்த அனைத்து மாவீரச் செல் வங்களினதும் நினைவு வணக்க நிகழ்வு பிரித்தானியாவில் நடைபெற்றது.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை திரு ராஜமனோகரன் அவர்கள் ஏற்றிவைத்து நிகழ்வுகளை ஆரம்பித்துதார் தொடர்ந்து ஈகைச்சுடர் ஏற்றி மலர் மாலைகள் அணிவித்து பொது மக்களின் மலர் வணகத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு கலைபண்பாட்டுக் கழகத்தின் இசைக் குழுவினரின் மாவீரர் பாடல்களுடன் ஆரம்பமான கலை நிகழ்வு பேச்சுக் கவிதை நடனம் மற்றும் நாடகத்துடன் மண்டபம் நிறைந்த மக்களுடன் எழுச் சியாக நிறைவு பெற்றது.

ஒன்றுகூடல் அழைப்பிதழ்

வேலணை மண்ணைத் தளமாகவும் புலம்பெயர்ந்து பிரித்தானியாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் மக்களை ஒரு ஒன்றியத்தின் மூலம் சந்திப்பதற்காகவும் எமது இளம் சந்ததியினர் மத்தியில் நமது கலை கலாச்சார விழுமியங்களை வளர்ப்பதற்கு களம் அமைத்து கொடுப்பதற் காகவும் எமது ஊருக்கும் உறவுகளுக்கும் இயன்ற அபிவிருத்தியை செய் வதற்கும் அங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குமாக ஒரு சங்கத்தை அமைத்து செயற்படுவதற்கான ஒன்று கூடல் நிகழ்வு

நடைபெறும் இடம் - :WATLING CENTRE, 145 ORANGE HILL ROAD, EDGWARE, HA8 0TR

மேலதிக தகவல்களுக்கு:

இராஜேஸ்வரன் 07903735901 - நடா சிவராஜா 07539366793

சிறிதரன் 07746723398 - சிவபாலன் 07949018049

நடந்த நிகழ்வுகள் மற்றும் நடக்க இருக்கும் நிகழ்வுகளை பிரசுரிப்பதற்கு தொடர்பு கொள்ளுங்கள்

Come Directly to a...

TAMIL SPEAKING BARRISTER

For expert legal advice & representation in Criminal and Immigration law

Criminal Litigation

- Money Laundering
- Serious Fraud
- VAT / Tax investigations
- Confiscation & proceeds of crime
- Appeals against conviction and sentence.
- Regulatory / Health & Safety Investigations

Immigration

- Nationality
- Asylum
- EU Law
- Visas

(Tiers1-5, Resident Permits, Indefinite Leave to remain)

- Judicial review

அனைத்து சட்ட ஆலோசனைகளுக்கும்...

Services Includes:

Flexible consultancy times & police station representation can be arranged(24 hours).

சகல விதமான குடிவரவு ஆலோசனைகளையும் நிபுணத்துவத்துடன் செய்து தர அழையுங்கள்....

For Appointments

Contact: **07837 450397**

Email: **mganesan@furnivallaw.co.uk**

www.confiscationbarrister.com

Chambers:

Furnival Chambers, 32 Furnival Street, London, EC4A 1JQ.

Muthupandi Ganesan

முத்துப்பாண்டி கணேசன்

LL.B(Hons)(Wales),LL.M(Criminal Litigation)

Barrister-at-Law [Direct Access]

ரூற்று ஆண்டகையும் இமானுவல் அடிகளாரும்



அண்மையில் ஒரு தொலைக்காட்சியில் தோன்றிய நம் அருட்தந்தை இமானுவேல் அடிகளார், "1997 ஆம் ஆண்டில் டெஸ்மண்ட் ரூற்று ஆண்டகையின் தோழமையைப் பெற்றுக் கொண்டேன்" என்றதுடன் இன்னொன்றையும் கூறினார். "தேவைப்பட்டால் மஹிந்த ராஜபக்ஷவுடனும் நான் பேசுவேன், கை குலுக்குவேன்" என்று. Tutu போன்ற நல்லவர்களின் தோழமையைப் பெறுவதும் தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் விடுதலைக்காகப் போராடியவர்களின் அனுபவங்களைப் பெறுவதும் நல்ல விடயங்கள்தான், ஆனால் அந்த மனிதரிடமிருந்து நீங்கள் எதைத்தான் கற்றீர்கள்? உங்கள் இனத்தை, இறைமையுள்ள ஒரு தேசிய இனத்தை, எந்தத் தயவு தாட்சண்யமுமில்லாமல் லட்சக்கணக்கில் கொன்றொழித்து அந்த இனமே அந்நாட்டில் இருந்த அடையாளமே இல்லாதொழிப்பேன் எனக் கங்கணம் கட்டிநிற்கும் ஒரு இனப்படுகொலையாளியுடன் கை குலுக்குவேன் என்கிறீர்களே.. இதை எந்த அடிப்படையில் கூறுகிறீர்கள்? ஆன்மீக அடிப்படையிலா அல்லது ராஜதந்திர அடிப்படையிலா ? நீங்கள் எந்த அடிப்படையில் கைலாகு கொடுத்தாலும் 'தார்மீகம்' என்பது அந்தக் கணமே செத்துவிடும்.. நீங்கள் தப்பில்லை என்று கூறும் இந்த விடயத்தைத் 'தப்பு' என்கிறார் ஆண்டகை ரூற்று..

மில்லியன் கணக்கில் ஈராக்கிய மக்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த ஒரு மிகப்பெரிய பொய்யைக் கூறிய உலகின் மிகப் பெரும் போர்குற்றவாளியான ரோனி ப்ளேயர்) உடன் கை குலுக்குவதென்ன, ஒரே மேடையில் அமர்வதற்கே மறுத்தவர் ரூற்று... அதற்கு அவர் கூறிய காரணம் என்ன என்பதை மறந்து விட்டீர்களோ? மறந்திருந்தால் அவர் எந்த பாஷையில் அதைக் கூறினாரோ அதே பாஷையில் நினைவு படுத்தலாம். 1984 Nobel Peace Prize winner said that he had withdrawn from the event because he found the former prime minister's support for the invasion of Iraq to be "morally indefensible".

அவரால் அதை எந்த விதத்திலுமே நியாயப்படுத்தமுடியவில்லை.. அவருக்குத் தப்பாகப் படும் விடயம் தங்களுக்குச் சரியாகப் படுவது விந்தையிலும் விந்தை அருட்தந்தையே!. இது நம் விடுதலைப் போராட்டம்.. இங்கே விட்டுக்கொடுப்புகளுக்கு இடமில்லை..யாருமே விமர்சனத்திற்கு அப்பாற்பபட்டவர்களுமில்லை.. ராஜதந்திரம் என்று சொல்லாதீர்கள் தந்தையே! ஏனென்றால் ரூற்று மிகச் சிறந்த ராஜதந்திரி.. அதனால்தான் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவிற்கு அவரைத் தலைவராக அமைத்தார் நெல்சன் மண்டேலா. அந்த ராஜதந்திரிக்குத் தெரிகிறது ஒரு போர் குற்றவாளியுடன் கைகுலுக்குவது தவறு என்று.

ஆன்மீகம் பேசப்போகிறீர்களா?.. அவரும் ஒரு ஆன்மீகவாதிதான்.. அந்த ஆன்மீகம் அவரிடம் சொல்கிறது 'ஒரு போர்க்குற்றவாளியுடன் கை குலுக்குவது தப்பு' என்று.. ஆக, நீங்கள் எந்த அடிப்படையில், (ராஜதந்திரமா, ஆன்மீகமா) புலம் பெயர் தமிழரின் ஒரு இயக்கத்தின் தலைவர் என்று கூறிக்கொண்டு அந்தப் போர் குற்றவாளியுடன் கை குலுக்கப்போகிறீர்கள்?.. எந்த அடிப்படையுமே தப்பு என்கிறார் ரூற்று. அப்படியானால் மேற்குலகின் இணக்கப்பாட்டு அரசியலின் அறிவுரையா இது ? அல்லது 'கிறிஸ்தவ முறையில் சிந்தித்தால்' என்று நீங்கள் இதே பேட்டியில் கூறியதுபோல் ' ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் காட்டு' என்ற அடிப்படையிலா?.. அதே கிறிஸ்தவ முறைதான் மற்றொன்றையும் சொல்கிறது. 'தட்டுங்கள் திறக்கப்படும்'.. அதாவது திறக்கும்வரை தட்டிக்கொண்டே இருங்கள் என்று..அந்தக் கிறிஸ்தவ முறையைக் கைவிட்டு விட்டீர்களே தந்தையே!.. என்ன சொல்கிறேன் என்று புரியவில்லையா?.. சொல்கிறேன்.. தமிழீழம் என்று கேட்டோம். அதில் இறுதிவரை உறுதியாகவே இருந்தவர்கள் புலிகள். இப்போ அதை அநாதரவாக விட்டுவிட்டு எவனெவனோ சொல்வதையெல்லாம் தட்டுகிறீர்கள்.. இங்கே கிறிஸ்தவ முறை என்னவாயிற்று?'தட்டுங்கள் திறக்கப்படும்' என்னவாயிற்று?..

'சும்மா சும்மா "தமிழீழம் தமிழீழம்" என்று கத்துவதில் என்ன இருக்கு, அது நம் நெஞ்சுக்குள் இருந்தால் போதும்' என்று நாக் கூசாமல் கூறுகிறீர்களே தந்தையே!.. தமிழீழம் என்று கத்தியே அது எவர் காதிலும் வீழ்கின்றதில்லையாம்.. நீங்கள் நெஞ்சுக்குள் வைத்திருந்தால் எவனுக்குக் கேட்கப்போகுது..அவர்களொன்றும் `mind readers' ஐ அனுப்பி நம் நெஞ்சில் என்ன இருக்கு என்று தெரிந்து கொள்ளப் போவதில்லை. தமிழீழம் என்றே தட்டுவோம். திறக்கும்வரை..ANC என்பது மண்டேலாவின் பழைய போராட்டக் குழுவல்ல. அது ஒரு அரசு.. இந்த அரசு தன் சொந்த மக்களுக்கு என்ன அண்மையில் செய்தது என்பதை கூடவா மறந்து விட்டீர்கள்?

உங்களுக்கு அடிக்கடி மறதி வருகிறது.... தென்னாப்பிரிக்க விடுதலைக்கு ANCயுடன் சேர்ந்து போராடிய சுரங்கத் தொழிலாளிகளான அதே கறுப்பின மக்கள் சம்பள உயர்வு கேட்டு போராடியபொழுது கண் மூடித்தனமாக சுட்டுக் கொன்றதுதான் நீங்கள் கூறும் இந்த நடு நிலைமை நாடு, தென்னாபிரிக்கா... போராட்ட ANC வேறு அரசிலிருக்கும் ANC வேறு..

இவர்களின் ஒவ்வொரு செயலும் நகர்வுகளும் இவர்களது நலம் சார்ந்து மட்டும்தான் இருக்கும்... நமக்கு என்ன வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருந்தால் மட்டும்தான் நமக்கு வேண்டியதை நாம் அடைய முடியும். இங்கே 'free lunch' என்று எதுவும் கிடையாது.. உங்களுக்கு நிதி உதவி புரிகின்றன என்பதற்காக அநியாயத்திற்கு அந்த நாடுகளுக்கு விசுவாசமாக இருக்காதீர்கள்!. அவனவன் தனக்கு என்ன வேண்டுமோ அதைப் பெற்றுக்கொள்ள உங்களைப் பயன்படுத்துவான்.. அவனவன் நிகழ்ச்சிநிரலுக்குள் நின்று ஆடுவதை நிறுத்துங்கள்.. இதுதான் நமது நிகழ்ச்சி நிரல் என்று அடித்துக் கூறுங்கள்.. 'தமிழீழம்' என்ற லட்சியத்தைக் கைவிட்டு விட்டு லட்சியத்தில் உறுதியாக இருக்கிறோம் என்று எதைக் கூறுகிறீர்கள்?.. அதுவும் ஒரு பாதிரியாரிடம் இருந்து இது வருவதுதான் வேதனை. லட்சியத்தில் உறுதியாக இருக்கிறோம் என்றால் உங்கள் லட்சியம்தான் என்ன?.. நிதி உதவி செய்கிறார்களே என்பதற்காக அந்த நாடுகள் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டு விட்டு 'ராஜபக்ஷாவுடன் கை குலுக்கு' என்றால் குலுக்குவீர்களா?.. அதைத் தொலைக் காட்சியில் வந்து சொல்லும் அளவுக்கு உங்களுக்கு நிதி உதவி கிடைக்கின்றதா?..இதுதானா உங்கள் லட்சியம்?..

"பிரபாகரன் சொன்னதுபோல் லட்சியத்தில் உறுதி" என்றீர்களே அருட்தந்தையே!.. தலைவரின் லட்சியம் எது என்பது நமக்குத் தெரியும். நீங்கள் எந்த லட்சியத்தைக் கூறுகின்றீர்கள்?.. மஹிந்த அரசு மாற்றத்தையா உங்கள் லட்சியம் என்கிறீர்கள்?.. எந்த நாட்டுடனும் பேச வேண்டாம் என்று இங்கே யாரும் கூறவில்லை.. ஆனால் நமக்கு என்ன தேவையோ அதைப் பேசுங்கள் என்றுதான் நாம் சொல்கிறோம்.. புலிகள் தெளிவான பாதையில்தான் என்றுமே பயணித்தார்கள்.. உங்களையும் அதைத்தான் நாம் கேட்கிறோம்.. நமக்கு என்ன வேண்டும் என்பதில் நாம் முதலில் தெளிவாக இருக்க வேண்டும். உறுதியாக இருக்கவேண்டும்.

விடுதலைப்போராட்ட லட்சியம் என்பது நேரத்திற்கு நேரம் மாற்றும் பொருளல்ல.. ஒரு பொருளை பத்து பவுன்சுக்கு விட்கவேண்டுமேன்றால் 15 பவுன்ஸ் என்று ஆரம்பித்தால் தான் பேரம்பேசி அதை நமது விலைக்கு விற்கலாம்.. ஆரம்பத்திலேயே 5 பவுன்ஸ் என்று ஆரம்பித்தால் அதை இனாமாகத்தான் கொடுக்கவேண்டும்.. இது ஒரு சாதாரண வியாபார தந்திரம்.. இந்த 'தந்திரமே' தெரியாமல்? 'ராஜதந்திரம்' பேசுகிறீர்கள்.. பேச்சுவார்த்தை நடத்துகின்றீர்கள்?!.. கொடுமைடா சாமி!

- கௌரி

எங்களின் பாலனின் பாதத்தில்....

பார்க்கும் கண்களே
துடிக்கும் காட்சி
பாலனின் மேனியில்
பலதுளைகள் கொடுங்கோற்
சிங்களம் செய்த கொடுமை
கொலைக்களத்தின்
அதி உச்சக்கட்டம்

அவன் விழிகளில்
தெரிகின்றது அவன் ஒரு
வீரன் மகன் என்று
அவன் விழிகளைக்
கண்டு மிரண்டு அவன்
மேனியில் துளைத்ததா குண்டு

சிங்களம் செய்த
கொலை வேள்வியில்
எங்கள் குலவிளக்கை
எரித்ததா ஈனம் இல்லாச்
சிங்களம் ஆடிய
கொலைவெறியில்
தங்கள் இச்சையைத்
தீர்த்ததா இச்சிறு வேங்கையின்
பொற்திருவுருவில்

பாரெங்கும் பரந்திருக்கும்
நாமெல்லாம் கோர்த்திடுவோம்
கரங்களைக் கொடுங்
கோலனை ஒளித்திடக்
கூடிடுவோம் ஒன்றாய்
கொலைக்களத்தின் உச்சத்தைப்
பரப்பிடுவோம் உலகமெங்கும்
எடுத்திடுவோம் சபதம்
எங்கள் பாலனின் பாதத்தில்

சாத்தியார் (யாழில்)

Most Trusted and Reliable Name in the Trade since 1985
Pioneers in frieght forwarding to Srilanka and Worldwide with fast, efficient and reliable service with best prices.
• இலங்கை மற்றும் உலகத்தின் எப்பாகத்திற்கும் கடல் மற்றும் விமான மார்க்கமாக குறைந்த விலையில் பொதிகள் அனுப்பும் சேவை.
• பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு தரை மார்க்க சேவை
• வர்த்தக சேவைகளுக்கு விசேட சலுகை
Srilankan Cargo
To LAKSIRI SEVA UPB WAREHOUSE (AIR CARGO SECTION)
Tel: 2917729-31
GlenCarriers
Laksiri Seva
2 x Tea Carton for £ 19.50 Only..
Special Offers
Worldwide Air Freight Offers*
Special Rates for Commercial Cargo*
அழையுங்கள்
020 8743 7353
இலங்கையில் பொதிகளைப் பெற்றுக் கொள்ளுமிடங்கள்
66, New Nuge Road, Peliyagoda, Srilanka. +94 1129 177 29
Laksiri Seva Pvt Ltd. 26, Hmyl Lane, Main Street, Addappallam, Ninthavur. T: 0672 0510 50-51
Web : www.glencarriers.com email : info@glencarriers.com || 14 Allied Way, Off Warple Way, Acton, London W3 0RQ

உள்ளங்கையில் கிட்னி

29.10.2012இல் வெளிவந்த குங்குமம் சஞ்சிகையில் படித்த ஒரு கட்டுரை மனதை இடித்தது. இதை எழுதிய டாக்டர் எம்.என்.சங்கர் கிட்னி சம்பந்தமான சுவையான தகவல்களைத் தந்துள்ளார். அக்குபிரஷர் மருத்துவத்தில் பாண்டித்தியம் பெற்ற ஒரு டாக்டர் கூறிய செய்திகளை அலட்சியப்படுத்த என் மனம் இடம் தரவில்லை. ஏனெனில் அவர் கூறிய மருத்துவ முறையை பரீட்சித்துப் பார்க்க கைவசம் என்னிடம் ஒரு நோயாளி பக்கத்திலேயே இருந்தார். அவர் வேறுயாருமல்ல எனது மனைவி தான்.

ஒருவருடைய கிட்னி பாதிப்படைவதற்கு முக்கிய காரணிகளாக இரண்டைக் கூறுகிறார் டாக்டர் சங்கர். முதலாவதாக உடலில் உண்டாகும் சிறிய வலிகளைத் தற்காலிகமாக தீர்ப்பதற்கு வலி நிவாரண மருந்துகளை மருத்துவர்கள் தங்கு தடையின்றி அள்ளிக் கொடுப்பது ஆசிய நாடுகளில் மட்டுமல்ல மேற்குலக நாடுகளிலும் சர்வசாதாரணம். ஒரு வித்தியாசமென்ன வெனில் தரம் குறைந்த வலிநிவாரணிகள் ஆசிய நாடுகளில் தாராளமாகக் கிடைக்கும். இவற்றிலுள்ள வேதி தன்மையால் கிட்னியின் மெடுல்லா பகுதி முற்றிலுமாகப் பாதிக்கப்படுவதை ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன.

இரண்டாவது காரணியாக ரத்தத்தில் அழுக்குகள் உறைய, உப்பும் காரமும் நிறையவே கிடைக்கும் பாஸ்ட் பூட், கிட்னியை வெகுவாகப் பாதிப்பதை எத்தனைபேர் நம்புவார்கள். ஆனால் அதுதான் உண்மை. கடை வீதிகளில் எல்லாம் காணப்படும் மக்டொனால்ஸ், கே.எப்.சி.போன்ற பிரபலமான உணவுச்சாலைகள் கோடிக்கணக்காக இலாபத்தை அடைவதோடு கோடிக்கணக்கான உயிர்களையும், கிட்னியின் பாதிப்பால் காவுக் கொள்கிறது.

மேற்கூறிய காரணங்களால் பாதிப்படையும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் எழுதப்பட்ட கட்டுரையின் உண்மைத் தன்மையை பரிசோதிக்குமுகமாக கிட்னியில் பாதிப்படைந்துள்ள எனது மனைவியையே அவர் பரிந்துரைத்த மருத்துவ சிகிச்சையைக் கடைப்பிடிக்கச் சொன்னேன். உள்ளம் கையில் இருக்கும் ஒரு புள்ளியில் உருளை போன்ற ஒரு பொருளை அல்லது முழங்கையில் முட்டியை காலையிலும், மாலையிலும் சிறிது நேரம் கடைந்துவரும் பழக்கத்தைக் கடைப்பிடித்தால், கிட்னியின் பாதிப்பிலிருந்து மெல்ல மெல்ல நிவாரணம் கிடைக்குமென்பது சாத்தியம். கடந்த 3 மாதங்களாக கடைப்பிடித்து வரும் இந்த அக்பிரஷர் சிகிச்சையால் எனது மனைவியின் பாதிப்படைந்த கிட்னியால் வெளியேறும் சிறுநீரின் அளவு இரண்டு மடங்கு அதிகரித்துள்ளதை அவதானித்துள்ளோம். எனவே, கிட்னியால் பாதிப்படைந்தவர்களும், பாதிப்படையாமல் கிட்னியைப் பாதுகாக்கவும், அக்குபிரஷர் சிகிச்சையை அணுகுவதில் எதுவித கெடுதலும் இல்லையென்பதே எமது அனுபவ ரீதியான வேண்டுகோள்.

கணினிகளின் மவுசுகள் வீசப்படலாம்

கணினிப் பாவனையில் எத்தனையோ மாற்றங்கள். இந்த வருட இறுதிக்குள்ளாகவே பாவனைக்கு வரப்போகும் 3D சமிக்ஞைகளுடன் சங்கமமாய் போகும் கணனியின் திரைகள் கைகளின் அசைவிலேயே இயங்கப்போவது நிதர்சனம்.

Silicon Valley Startup Leap Motion என அழைக்கப்படும் நிறுவனம் தனது தயாரிப்பான 3D சமிக்ஞைகளை உருவாக்கும் லீப் (Leap) எனப்படும் புதிய கணனி உபகரணத்தை உருவாக்கியுள்ளனர். மைக்ரோ மென்தாக்கத்தின் கினெக்ற் வெளிப்படுத்தும் உணரும் (sensor) தன்மையைக் கொண்டதாக ஸ்மார்ட் தொலை பேசிபோன்று சிறிய வடிவமைப்புடன் இந்த உபகரணம் உருவாகியுள்ளது. இதன் உபயோகத்தை கணினியிலுள்ள மக்ஸ் யூ.எஸ்.பி. ஊடாக இணைப்பை ஏற்படுத்திவிட முடியும். லீப் என அழைக்கப்படும் இந்த உபகரணம் கணனியுடன் இணைந்த பின்னர். விரல்களின் அசைவாலும், கைகளின் சைகைகளாலும் கணனியின் திரையில் வேண்டிய காட்சிகளை 3D விம்பத்தில் காணமுடியுமென நிரூபித்துள்ளனர்.

தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

லீப் உபகரணம் பாவனையில் உபயோகிக்கப்பட்டபோது சமகாலத்தில் புழக்கத்தில் இருக்கும் நவீன தொழில்நுட்பங்களோடு ஒப்பிடுகையில் இதன் நுணுக்கம் 200 மடங்கு அதிகமாக இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் அவதானித்துள்ளனர். பழசாகிப் போன ஒரு தொழில்நுட்பமென தூக்கியெறியப் போவது வெகு தூரத்தில் இல்லை.

மலிந்த விலையில் விற்பனைக்கு வரப் போகும் லீப் 70 அமெரிக்க டொலர் மட்டுமே. சந்தைக்கு வரும்போது இதன் மவுசு நிச்சயம் கணனியின் மவுசை தூக்கி யெறிந்து விடுமென தயாரிப்பாளர்கள் நம்புகிறார்கள்.

தமிழை வளர்க்கும் ஈழத்தமிழன்

யாழ்ப்பாணத்தில் கலாச்சார சீரழிவாலும், இந்துக் கோவில்களின் இடிபாடுகளாலும், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தாலும், தமிழ் மக்களின் பாரம்பரிய பிறப்பிடம் பறிபோகும் ஆபத்து சூழ்ந்த வண்ணம் இருப்பினும், சமீபத்தில் ஒரு சஞ்சிகையில் வாசித்த வலைப்பேச்சு காயமுற்ற புண்ணுக்கு மருந்து தடவுதல் போலிருந்தது.

ருவிற்றர் வலைப்பேச்சில், முருகேசு என்பவர் இவ்வாறு கூறுகிறார். தமிழகத்தில் ஆங்கிலத்தை வளர்ப்பவன் தமிழன். இங்கிலாந்தில் தமிழை வளர்ப்பவன் ஈழத்தமிழன் இவருடைய கூற்றை எவரும் மறுக்க முடியாது. இங்கிலாந்துக்கு 1980களுக்கு முன் வந்த தமிழர்கள் தமது பிள்ளைகளுக்கு தமிழைக் கற்பிக்க வசதிகளும் கிடைக்கவில்லை, ஆர்வமும் இருக்கவில்லை. அதனால் அந்தக் காலகட்டத்தில் பிறந்து வளர்ந்த தமிழ்க் குழந்தைகள் தமது தாய்மொழியை மறந்து விட்டார்கள்.

1983 இலங்கையில் நடந்த இனக்கலவரத்தின் பின் புலம்பெயர்ந்த தமிழர்கள் தமது மண்ணை மறக்கவில்லை. மொழியை மறக்கவில்லை. மதத்தை மறக்கவில்லை. அதன்பின் உதயமான விழிப்புணர்வு, தமிழைக் கற்பிக்க சிறுசிறு குழுவாக இயங்கி இன்று தமிழர்கள் கூடுதலாக வசிக்கும் பகுதிகளில் வார இறுதி நாட்களில் தமிழ் கற்பிக்க பகுதிநேரப் பாடசாலைகள் உருவாகி, தங்கு தடையின்றி நடைபெறுவதை ஆங்காங்கே நிகழும் நிகழ்ச்சிகள் நினைவூட்டுகின்றன.

இக்கல்விக் கழகங்களில் தமிழ் மொழி மட்டுமல்ல, தமிழ்க் கலாசார வடிவங்களான பரத நாட்டியம், மத வழிபாடுகள் போன்ற வைபவங்களும் இடம்பெறுவதை அடிக்கடி காணவும், கேட்கவும் முடிகிறது. இத்தனைக்கும் புலம்பெயர்ந்த தமிழர்களின் அர்ப்பணிப்பான மொழிப்பற்றும், இனப்பற்றும் எனக் கூறினால் மிகையாகாது. எனவேதான், முருகேசு என்பவர் தமிழக மக்களுக்கு விடுத்த செய்தியைக் கண்ணுற்றதும் என் மனம் புளகாங்கிதம் அடைந்தது. இந்தப் புகழ்ச்சிக்கு உரித்துடையவர்கள் புலம்பெயர்ந்த தமிழ் பெற்றோர்கள் என்பதில் மறுப்பில்லை.

சனிக்கிழமை நாட்களில், சமீபத்தில் இருக்கும் சிவன் கோயிலுக்குச் செல்லும் வழக்க முண்டு. குளிரோ, வெயிலோ, பனியோ, மழையோ காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் தமிழ்ப் பாடசாலைக்கு தமது பிள்ளைகளைக் கூட்டி வரும் பெற்றோர்களைக் காண மனம் மகிழ்ச்சியடைகிறது. பயிற்சி ஆரம்பமாவதற்கு முன்னர் கோவிலில் தேவாரப் பண் இசைத்து, அதன் பின்னர் விபூதிப் பிரசாதம் பெற்று ஓடியோடிப் போகும் சிறிய பிள்ளைகளைக் காண, தெய்வ தரிசனத்துக்கும் மேலான தரிசனத்தைக் கண்ட திருப்தியும் மன நிறைவும் ஏற்படுவதை தடுக்க முடியவில்லை.

மனச்சுமை....

முப்பது ஆண்டுகளுக்கு மேல்
முடிசூடா மன்னனாகி
தமிழ் மண்ணில்
முப்படைகளையும் முன்னின்று
உருவாக்கிய
முத்தமிழ் காவலன் எங்கே?

எப்படை தோற்கினும்
இப்படை தோற்குமா
என்றெண்ணிய இதயங்கள்
இடிந்த தெவ்விதமோ?
வெற்றியில் சிகரத்தை எட்டிய
வேங்கைகளின் வீரம் எங்கே?
கொற்றவன் கொள்கை
மாறா மறவன்
குடிகொண்ட கோவில்கள் எங்கே?

அடிமை விலங்கொடிக்க ஆயதமேந்தி
கொடிய சிங்களத்தின் கோளாட்சியை
ஒடுக்கப் போராடிய உத்தம மாவீரரின்
உண்மையின் தரிசனம் எங்கே?

இந்து சமுத்திரத்தில்
இருள் மூடும் வேளையிலும்
சொந்த எதிரிகள்
சூழ்ந்து நின்ற
போதினிலும் –கடலில்
பந்து விளையாடிய எங்கள்
பாசறை செல்வங்கள் எங்கே?

வெற்றிகள் பல குவித்த
வேங்கைகளின் தளபதிகள்
கட்டளைப் பிறப்புக்குள்ளே
கருகிப் போன இராணுவமே
சுற்றி வளைப்பதற்கு எத்தனை
துணை நாடுகள் உனக்கு.

வல்லவன் என்று தன்னை
வரிந்து வகுத்துக் காட்டிய
பொல்லாத சிங்களமே
போர்க்குற்றம் புரிந்ததென்று
வல்லரசு நாடெல்லாம்
வன்மையாயாய் கண்டித்தும்
புன்னகை புரிகிறதே சிங்களம்
புத்தனைப் போலியாக்கி....

சுதந்திரம் வேண்டிடும் பூவுலகில் – உயிர்
துச்சமாய் போய்விடும் என்றால்
மிச்சமாய் இருக்கும் தமிழினத்தின்
விடியல்கள் வெந்திடும் நெருப்பிலா?

முட்கம்பிக்குள்ளோ
மூடிமறைத்த சிறைக்குள்ளோ தமிழன்
முடங்கிக் கிடந்தாலும்
பட்டப்பகல் சூரியன்போல்
பளிச்சிடும் அவன் வீரம் பாரினிலே

விடுதலை வேண்டிடும் மக்களின்
வீரமும் வெற்றியும் என்றுமே
விடியலாய் தான் பூக்கும்.
கொடுமைகள் செய்கின்ற
கொடியவர் வாழ்வியல்
நடுநிலை மன்றத்தின்
நியாயத் தீர்ப்பினால்
கொடுவினைச் சிறையினுள்
கொண்டேகும் நாள் வரும்

தர்மத்தினை தற்காலிகமாய் சூது
கௌவிய போதிலும்
தர்மமே வெல்லும்
தர்மமே வெல்லும் – அப்போ
இத்தரணியில் தமிழனும் வாழ்வான்.

– வேலணையூர் சிவா–

உறங்கும் மிருகங்கள்...

தமிழ் விழி

(ஒரு பேப்பருக்காக)

முற்றத்தில் நின்ற இளம் மாங்கன்றில் கட்டப்பட்டிருந்த ஆடு இன்றைக்கோ நாளைக்கோ என தன் குட்டியைப் பிரசவிக்கும் பாரத்துடன் முன்னால் போடப்பட்டிருந்த இலைகளை தின்று கொண்டிருந்தது. வீட்டின் வலது புறத்தில் தன்னுடைய மகனைக் கொண்டு கூரையுடன் கூடிய ஒரு சிறிய மறைப்பு செய்திருந்தாள் தேவி ஆட்டையும் குட்டியையும் பாதுகாக்க. கருமை படர்ந்து வரும் வானத்தை அண்ணார்ந்து பார்த்து விட்டு திரும்பி தனது ஓலைக் குடிசையைப் பார்த்தாள். கிடுகுகளினால் அடைக்கப்பட்டு கூரையிடப்பட்ட வீடு. உள்ளே மொத்தமாக ஒரு அறைதான் அதில் ஒரு பகுதி ஒரு தட்டியால் பிரிக்கப்பட்டு சமையலறையாகப் பாவிக்கப்படுகிறது. இரண்டு பெட்டிகளுக்குள் அவர்களது முழுச் சொத்துக்களும் அடங்கியிருந்தன. ஒரு மழையடித்தால் உள்ளே ஒழுகும் நீரைப் பிடிக்க நிறையப் பாத்திரங்கள் ஆங்காங்கே வைத்து விட்டு குந்திக் கொண்டிருக்க வேண்டும். எனவே மழையை வரவேற்கும் நிலையில் அந்தக் குடும்பமும் அதை சுற்றியுள்ள குடும்பங்கள் பலவும் இல்லை. உயிரைக் கொண்டு ஓடி ஓடியே கால் நூற்றாண்டு கழிந்து விட்டது.

பரந்த காணிகளுக்குள் ஆளுக்கொரு அறை அமைந்த விசாலமான வீடுகளில் வாழ்ந்த அந்த நாட்களை தினமும் நினைத்து நினைத்தே அவர்களுடைய உயிர்கள் ஊமையாய் நடமாடுகின்றன. சில வருடங்களுக்கு முன்பு வெளிநாடுகளில் வாழும் இவர்களது உறவுகளின் உதவியால் இந்த இடத்தில் இப்படியாவது இருக்க இடம் கிடைத்து இருக்கிறது. ஆனால் மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியவில்லை. மகன் தீரன் ஒரு கடையில் வேலை செய்கிறான். அந்த வருமானம் அவர்களுடைய சாப்பாட்டுக்கும் மருந்துக்குமே போதும் போதாததுமாயிருந்தது. ஒரு சிறிய கல் வீடு கட்டி இருக்கும்வரை அதற்குள் நிம்மதியாக படுத்துறங்க வேண்டுமென்பது அங்குள்ளவர்களின் ஆசை.

ஏனென்றால் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள சொந்த ஊருக்கு போவது என்பது வெறும் பகல் கனவு என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும். கொஞ்ச காலத்துக்கு முன்பு அவர்கள் இருக்கும் இடத்தில் வீடுகள் கட்டித் தருவதாக வெளிநாட்டு உறவுகள் உறுதி அளித்ததைத் தொடர்ந்து இவர்களது எதிர்பார்ப்பு தினமும் அதிகரித்திருந்தது.

❖ ❖ ❖ ❖

கௌரியின் குடும்பம் மிகச் செழிப்பாக வாழ்ந்த ஒரு குடும்பம். அவளுடைய தந்தையைக் கண்டால் எல்லோரும் மரியாதையுடன் தலை அசைப்பார்கள். ஆனால் இவற்றை எல்லாம் பார்த்தா காதல் வரும். சமூகத்தைப் பிடித்தாட்டும் மதம், சாதி கடந்த காதல். அது அவர்களை ஊரை விட்டும் நாட்டை விட்டும் துரத்தியது. இவர்கள் நாடு கடந்ததோடு ஊரும் பல ஊர்கள் கடந்தோட இவர்களைப் பற்றிய பேச்சும் ஊமையாகி உறங்கிக் கொண்டது. இந்த இடைவெளியில் தந்தை இறந்து விட்டார்.

இன்றைக்கு கௌரி நல்ல வசதி வாய்ப்புக்களோடு கூடிய வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருக்கிறாள். அத்துடன் தனது சகோதர சகோதரிகளையும் அழைப்பித்து அவர்களுக்கும் வாழ்க்கைக்கான பாதையை அமைத்துக் கொடுத்து மேலும் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்து கொண்டிருக்கிறாள்.

கௌரி நாட்டை விட்டு வெளியேறிய பின் தந்தையின் இறப்போடு தனது தாயையும் ஒரு சகோதரியையும் இந்தியாவில் தங்க வைத்திருந்தாள். தாயும் ஒருநாள் நோயில் போய்விட இறுதியாக இருந்த சகோதரியையும் தன்னுடன் அழைத்துக் கொண்டாள். எல்லோரையும் போல அவளுக்கு தாயின் மேல் அதீத பற்று இருந்தது. தன்னுடைய தாயின் ஞாபகார்த்தமாக ஏதாவது செய்ய வேண்டும் என்கின்ற ஒரு எண்ணம் எப்போதும் மனதில் குடிகொண்டிருந்தது. கால் நூற்றாண்டாக ஊரே அலைந்து திரிகையில் எதுவுமே செய்ய முடியாத ஒரு நிலை இருந்தது. ஆனால் இப்போது அதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

இங்கேதானே ஊருக்கோர் அமைப்பு, சங்கம், ஒன்றியம் என்று பல பெயர்களில் இயங்குகின்றன. கௌரியின் ஊரவர்களும் தமது மிஞ்சியிருக்கும் ஊரிலுள்ளவர்களுக்கு உதவுவதற்கென்று ஓர் அமைப்பை உருவாக்கியிருந்தார்கள். அதன்மூலம் எல்லோரும் சேர்ந்து உதவிகளும் செய்தார்கள். ஓரிடத்தில் அங்குள்ளவர்களை நிரந்தரமாகக் குடியமர்த்தவும் செய்தார்கள். அடுத்த கட்டமாக முதலில் எல்லோரும் ஓரளவுக்கு வசதியாகக் குடியிருக்கக் கூடிய வீட்டு வசதியையும், இரண்டாவதாக ஒரு கைத்தொழில் செய்வதற்கு ஒரு கட்டிடத்தையும் அமைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

இந்தச் செய்தி காதில் விழுந்ததும் கௌரி இதை முன்னெடுக்கும் கலையரசனைத் தொடர்பு கொண்டாள். "அண்ணை எங்கட ஊராக்களுக்கு கைத்தொழில் செய்யிறதுக்கெண்டு ஒரு கட்டிடம் கட்டிறது எண்டு நீங்கள் கதைச்சதாக அறிஞ்சனான்" எங்கடை அம்மாவின்ர ஞாபகார்த்தமாக ஏதாவது செய்ய வேணும் எண்டு எனக்கு கனகாலமாக ஆசை, அதால அந்தக் கட்டிடத்தை நான் முழுச் செலவும் பொறுப்பெடுத்துக் கட்டித் தாறன்". கலையரசனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஒரு பெரிய திட்டத்தை ஒரு ஆளே தனியே எடுத்துச் செய்ய முன்வந்தது மற்றவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாகவும் இருக்கும் என்று நினைத்துக் கொண்டான். " சந்தோசம் பிள்ளை, எனக்கு எந்த வித ஆட்சேபணையும் இல்லை ஆனால் நான் இதை இஞ்சை இருக்கிற மற்ற ஆக்களிட்டையும் சொல்லிக் கதைச்சிட்டு உன்னோடை தொடர்பு கொள்ளுறன்" என்றார்.

இருக்கிறவனுக்கு ஒரு வீடு இல்லாதவனுக்கு காணுகின்ற எல்லா இடமும் வீடு என்பது போல் உலகமெங்கும் பரந்து இருக்கின்ற அத்தனை ஊர் மக்களையும் தொடர்பு கொண்டு இது பற்றிப் பேசி முடிவெடுக்க வேண்டியிருந்தது. முதலாம் கட்டப் பேச்சுவார்த்தை தொலைபேசியூடாக நடை பெற்றது. ஆனால் பெரியளவில் வெற்றி அளிக்கவில்லை. சிலர் உது சரிவராது என்றார்கள். ஏன் பேர் போட வேண்டும் என்றார்கள். அம்மாவின் பெயரால் ஏதாவது செய்ய வேணுமெண்டால் கௌரி காசை மட்டும் தரலாம்தானே என்றார்கள். இப்படித் தனித்தனி தொலைபேசி உரையாடல்கள் சிக்கலைத் தரவே, கலையரசன் ஒரு நாள் குறித்து, எல்லோரையும் ஓரிணைப்பில் வைத்துப் பேசி முடிவெடுப்பது நல்லது என்று நினைத்துத் தனது கருத்தை வெளியிட்டான்.

சிலர் இந்தத் திட்டத்தை முறியடிப்பது என்கின்ற நோக்கில் வந்திருப்பது தெரிந்தது. நொண்டிச் சாட்டுக்களை முதலில் அடுக்கினர். கட்டிடத்தில் கௌரி தனது தாயின் பெயரை ஞாபகார்த்தமாகப் பதிவு செய்வது அவர்களுக்கு இடைஞ்சலாக இருந்தது. இந்த விடையத்தில் தங்களால் முந்த முடியாமல் போய் விட்ட ஆதங்கமும் இருந்தது. கலையரசன் " அந்தப் பிள்ளை தன்னுடைய தாயின்ர ஞாபகார்த்தமாக ஏதாவது செய்ய விரும்புது அந்தப் பெயரைப் போடுறதில எங்களுக்கு ஒரு நட்டமும் இல்லை, ஊருக்கு பயன்படக்கூடிய ஒரு விடயம் இதில வருகுது எண்டதை நாங்கள் யோசிக்க வேணும். எங்கட ஊர்ப் பிள்ளைகள் கனக்க வேலை செய்யாமல் வீட்டில இருக்குதுகள், அந்தப் பிள்ளைகள் எல்லாரும் சேர்ந்து ஒரு தையல் வேலை செய்யவோ அல்லது ஏதாவது சாப்பாடுகள் பொதி செய்து விக்கவோ எண்டு இப்பிடிக் கனக்க வேலை செய்து தங்கட வருமானத்தைத் தாங்கள் பாத்துக் கொள்ளுவினம் அப்ப இந்த மாதிரி வேலைகளுக்கு பொதுவான ஒரு இடம் இருந்தால் நல்லது தானே. ஓர் ஆள் தனிய வந்து அதைச் செய்து தாரன் எண்டு சொல்லேக்குள்ள நாங்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்தானே" என்று தன்னுடைய கருத்தைச் சொன்னான்.

கலையரசன் தன்னுடைய கருத்தை சொல்லி முடித்ததும் ஒரு நாகபாம்பு வேகமாக தன் நஞ்சைக் கக்கிற்று. "பேர் வைக்கிறது பிரச்சனையில்லை. ஆனால் அந்த..... கட்டித்தாற கட்டிடத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேணுமோ" நாளைக்கு அவன், தான் தான் எங்கட ஆக்களை வாழ வைச்சனான் எண்டு கதைப்பான்.

இணைப்பிலிருந்த பலருக்கு கோபம் உச்சிக்கேறியது. "நீ எந்த உலகத்தில இருக்கிறாய்? இப்பிடிக் கதைக்கிற நீ காசைக் குடுத்து அந்தத் திட்டத்தை தனிய முடி பாப்பம்? நீங்களும் செய்ய மாட்டியள் ஆரேன் செய்ய முன் வாறவையையும் செய்ய விட மாட்டீங்கள். நீங்கள் இன்னும்தான் திருந்திற பாடில்லை' ..... ஒரு பொது நோக்கு அங்கே விவாதமாகித் தொடர்ந்து கொண்டிருந்தது.

❖ ❖ ❖ ❖

கந்தையா வீட்டை கடந்து கொண்டிருந்ததை பார்த்து தேவி வேகமாக முன்னுக்கு வந்து "அண்ணை! வெளிநாட்டில இருந்து என்னெண்டாலும் தகவல் வந்ததே?" என்றாள் எதிர்பார்ப்போடு. "இல்லை பிள்ளை இன்னும் ஒருத்தரும் டெலிபோன் எடுக்கேல்லை, நானும் பாத்துக் கொண்டுதான் இருக்கிறன்' சொல்லிக் கொண்டே போனார். ஆடும் குட்டியும் கிடுகுப் படலையைத் தள்ளிக் கொண்டு ஓடி வந்தன. தேவி திரும்பிப் பார்க்கையில் கந்தையாண்ணை தோளில் கிடந்த துண்டை எடுத்து தலையை மூடிக் கொண்டு போவது தெரிந்தது. தேவி திரும்பி உள்ளே ஓடிப் போய் பாத்திரங்களை எடுத்து வைக்கத் தொடங்கினாள். வானம் திறந்து கொட்டிக் கொண்டேயிருந்தது.

சிரிப்புத் தான் வருகிறது.....

பெரியதொரு குங்குமச் சிமிழும்
சிறியதொரு சாம்பல் பொட்டலமும்
போதுமானது.. எம் இனத்தை அழிக்க!
புரியாத மந்திரமும், அறியாத
சடங்குகளும்
போதுமானது எம் சனத்தை கவிழ்க்க!!
பால், பழம், தேன், வெண்ணை,
சக்கரையென சகலத்தையும்
புனிதக் குளியலுக்கு
விரையமாக்கும் இடத்தை
திருத்தலம் என்கிறார்கள்...
திருந்தாத சென்மங்கள்!!

பால் வடியும் முகங்கள்,
பாசத்திற்காக ஏங்கும்போது...
"பாவம்" என்று ஒதுங்கி நின்று,
பத்து காசை மட்டும்
பாத்திரத்தில் போட்டுவிட்டு
பாவம் கழிந்ததென
பாரினில் பிதற்றிக்கொள்ளும்
பாழாய்ப்போன நெஞ்சங்கள்!!

வேண்டுதல் எனும் பெயரில்..
வேண்டாத அணுகல்கள்!
கூரான ஆயுதத்தால்
குருதியின் குவியல்களங்கே..
தானம் செய்ய வேண்டும்போது
வானம் அளவிற் வாய்ப்பிளக்கும்
பிறவிகள்!

கற்றதனைத்தும் மறந்து,
உற்ற நெஞ்சங்களை இழந்து,
வெற்றாகிப் போன மனிதனையும்
குற்றம் செய்யும் விழிகளையும்
குத்தாத அந்த மாபெரும் சக்தி..
தமக்கான மாலையில்
ஒரு மலர் குறைந்திட்டாலும்
கண்ணைக் குத்திப் பாடுமென்றால்...
சிரிப்பைத் தவிர வேறென்ன வரும்?

"சாமிக் குத்தம்" என்பது போல...
"மனிதக் குத்தம்".. "இனக் குத்தம்"..
"மொழிக் குத்தம்" என்ற
சமூகவியல் குற்றங்கள்
இருந்திருக்கக் கூடாதா?
ஏதோ ஒன்றுக்கு பயந்து
வாழ்ந்துப் பழகிப் போன எம்மினம்...
இதற்குப் பயந்தாவது...
தம்முரிமைகளை மீட்கும்
என்ற நப்பாசையில் நான்
குமுறுகையில்... சிரிப்புத்தான் வருகிறது!

புனிதத்தை எய்துவிட்ட
புனிதமெல்லாம்...
அனைத்து ஊடாகவும் கடந்துச்
செல்லும் கடவுளென காட்டப்பட்டதால்...
மனிதத்தை உணர்த்தும் மனித
இலக்கணங்கள் இல்லாமல் போனது
எம்மினத்தின் சாபக்கேடு
என்றால் சிரிப்பைத் தவிர
வேறென்ன வரும்?
முண்டமாகிப் போன எம்மினம்..
மூடப்பழக்கத்தை விட்டொழித்தால்..
உலக அழிவிற்குமுன்...
இன அழிவைத் தவிர்க்கலாம்...
இது சிரிப்பதற்கல்ல...
சிந்திப்பதற்கு!!!

- தமிழீழன்(யாழில்)

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4319
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP

creative artwork from concept to design

ஷரீயா சரியா ?

முஹம்மத் எஸ்.ஆர்.நிஸ்தார்

(கடந்த வாரத் தொடர்ச்சி

அது சரியாக பின்பற்றப்படுகிறதா என்பது கூர்மையான கண்காணிப்புக்கு உள்ளாக வேண்டும் என்கின்றனர். ஆகவே சட்டம் எங்கு எந்த சூழ் நிலையில் மீறப்பட்டாலும் அதற் குரிய தண்டனை வழங்கப்பட்டாகவே வேண் டும் என்பது அவர்களது நிலைப்பாடு.

ஆனால் மூன்றாம் பிரிவினரோ சௌகரிய மான ஒரு ஓரத்தில் நின்றுகொண்டு, ஒரு கன னத்தில் அறைந்தால் மற்றைய கன்னத்தையும் காட்டவேண்டும் என்று இறைதூதர் ஏசு நாதரின் (நபி ஈஸா) நிலை எடுக்கின்றார்கள். இவர் கள் உடனடி விடயங்களை எல்லாம் அடிப்படை விடயமாகக் கண்டு முன்னையதில் ஏற்பட சாத் தியமான தவறுகள், சறுக்கல்கள் எல்லாம் அடிப் படை விடயத்தின் பிழை என்றாக கற்பிதம் பண்ணி அதையே மற்றோருக்கும் போதிக் கின்றனர். இத்தகைய விடயங்கள் இவர்களின் அன்றாட வாழ்வோடு பின்னிப் பிணைந்தவை. தாங்கள் என்ன பேசுகிறார்கள் என்று தெரியா மல், விடங்களை பிரித்து, சுருக்கி எந்த விட யத்தை என்ன தேவைக்காகப் பேசவேண்டும் என்று தெரியாமல், தங்களுக்கு முன்னால் உள்ள ஒரு துறை சார்ந்த விடயத்தின் ஆழ அகலம் தெரியாமல் ஷரி-ஆ என்றால் கால், கை, தலை வெட்டுவது, நட்டி வைத்து கல்லால் அடித்து கொல்வது என்றெல்லாம் தங்களுக் குள்ளேயே ஒரு முடிவுக்கு வந்து இத்தகைய விடயங்களை விமர்சிப்பது அல்லது ஒரு படி மேலே சென்று நிந்திப்பது தங்களின் கருத்துச் சுதந்திரம், மனிதாபிமானத்தின் வெளிப்பாடு என்று பிடிவாதமாக இருக்கின்றனர்.

கூடவே தவறவிடப்பட்ட சந்தர்ப்பம் தான் சவூதி அரேபியாவின் குடும்ப ஆட்சியை கேள்விக்குற்படுத்தாததும், இஸ்லாம் காட்டித் தந்த ஜனநாயக ஆட்சியை அங்கே நிலைபெறச் செய்யவேண்டிய காலத்தின் கட்டாயத்தை சுட்டிக்காட்டாத விடயமுமாகும்.

ஷரி-ஆ சட்டத்தை நடைமுறைப்படுத்திய அறபு நீதிமன்றம் அந்த அறபுக் குழந்தை செல்வி நபீக்கின் பராமரிப்பில் இருந்த நேரம்தான் இறந் ததாக / கொல்லப்பட்டதாகக் கூறுகிறது. அதற் கான போதியளவுதடையங்கள் இருப்பதாகவும் அதை சரியான முறையில் உறுதிப்படுத்தவே குற்றம் சாட்டப்பட்ட செல்வி நபீக் சுமார் ஏழு வருடங்கள் தடுப்புக் காவலில் இருந்ததாகவும், இறுதியான மருத்துவ அறிக்கை பெறப்பட்ட பின்னரே அவரின் செயல் கொலை என தீர் மாணிக்கப்பட்டதாகவும் ஆகவே அந்த இறப்பை கொலை என தீர்ப்பளிப்பதைத் தவிர வேறு தீர்ப்பொன்றை அடைந்திருக்க எந்த சாத்தியமும் இல்லை என்கின்றனர். இதுதான் பிரச்சினையின் ஆரம்பமே.

ஷரி-ஆ சட்டம் மிகத் தெளிவாக ஒன்றைச் சொல்கிறது. அதாவது, 'நீங்கள் நீதி செலுத் தும் போது நடு நிலையில் நின்று விடயங் களை அணுகுங்கள், அது உங்களுக்கு பாதக மாக அமையினும் சரியே' என்பதாக. ஆகவே இங்கு சட்டத்தை அமுல் படுத்துவோரின் பெரும் பொறுப்பு இரத்தின சுருக்கமாக சொல்லப்பட்டுள்ளது என்பதை நாம் காணலாம். இது எந்த நாட்டு, எந்த இனத்து நீதிபதியாயினும் அந்த பொறுப்பைதட்டிக்கழிக் கும் அதிகாரம் அற்றவராகவும் அப்படி தன் மீது பொறுப்பளிக்கப்பட்ட அதிகாரத்தை துஸ் பிரயோகம் செய்யும் போது அதற்கான தண்ட னைக்கு முகம் கொடுக்க வேண்டியவராகவும் இருக்கின்றார்.

மேலும் இந்த (கடுங்)குற்றச் செயல்கள் தொடர்பாக இறுதி முடிவெடுக்கும் அதி காரம் பாதிக்கப்பட்டவருக்கே ஷரி-ஆ அளிக் கின்றது. அதில் அரசோ, நீதி மன்றமோ தலை யிடமுடியாது. இது உலகத்தில் எந்த சட்டத்திற் கும் இல்லாத விஷேட தன்மை. தனிமனித உரி மையின் உச்சக் கட்டம். அதிலும் கூட பாதிக் கப்பட்டவருக்கு மூன்று தெரிவுகளை முன் மொழிகின்றது. குற்றவாளியை முற்றும் முழு தாக மன்னித்தல், இரத்த பணமோ/ நட்ட ஈடோ (blood money/compensation)பெற்று மன்னித்தல், குற்றத்தின் தன்மையை ஒத்த (கூடுதலோ/குறைவோ இல்லாத)(proportionate) தண்டனையை நிறைவேற்ற சட்ட அமுலாக்க துறையை கோருதல். இதில் எதை பாதிக்கப் பட்டவர் விரும்புகிராரோ அதை நிறைவேற்று வது சட்ட அமுலாக்கதுறையின்பொறுப்பு. அதில் அவர்கள் தங்கள் சுயவிருப்பை எச்சந்தர்ப்ப திலும் செயல் படுத்த முடியாது. ஆனால் முழு மன்னிப்புக்கோ அல்லதுநட்டஈடொன்றை பெற்று மன்னிப்பளிக்கவோ பாதிக்கப்பட்ட வரை தூண்டுவதுஅல்லதுஊக்குவிப்பதுஷரி-ஆ சட்டத்துக்கு உற்பட்டதே.

இந்த அடிப்படை விடயத்தை புரிந்து கொள் ளும் பக்குவம் இன்றியே இந்த திடீர் மனித உரிமைவாதிகளின் விமர்சனங்கள் நீள்கின் றன. பாதிக்கப்பட்டவரின் உரிமையின் பால் பட்ட மூன்று தெரிவுகளை தண்டனைச் சட்டத் தின் கோமாளித்தனம் என்கின்றனர். இந்த ஷரி-ஆ சட்டம் என்பதுரிசானாவுக்காகவே உரு வாக்கப்பட்ட ஒன்றாக பார்க்க மற்றவர் களை தூண்டுகின்றார்கள். இந்த உயிருக்கு உயிர் என்ற தண்டனைச் சட்ட தீர்ப்பு எவ் வளவு பொருத்தமானது அல்லது செய்யப் பட்ட குற்றத்துக்குறிய சரியான/ சரிசம மானது (proportionate) இது என்பதை திட்டமி ட்டு கொல்லப்படும், காட்டுராண்டித்தனமான முறையில் கொல்லப்படும், கொரூரமாக எடுக் கப்படும் ஒரு அப்பாவி உயிரின் பக்கத்தில் இருந்து பார்க்கும் போது புரிந்துகொள்ள முடியும்.

எது எப்படி இருப்பினும் செல்வி நபீக்கின் மரண தண்டனை காட்டுமிராண்டித்தனமானது என்று சொல்பவர்களும், இல்லை அது சரியா னதே என்று சொல்வோரும் தங்களிடம் எந்த வித ஆதாரங்களைக் வைத்திருப்பவர்களா கவோ, வழக்கு சம்பந்தமான அனைத்துக் ஆவ ணங்களையும் கண்டவர்களாகவோ, அவை களை சரியாக ஆய்ந்து பார்த்தவர்களாகவோ இல்லை. இந்த இரு பகுதியினரும் தங்கள் மனதில் எழுந்தமான முறையில் ஏற்கனவே பதி வாக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் அடிப் படை விடயத்தை உதாசீனம் செய்து விட்டு தம் பக்க வாதங்களை நியாயப்படுத்த முனைகின் றனர். இவர்கள் தர்க்க ரீதியான அணுகுமுறை (rational approach) யொன்றை பின்பற்றுவதா கவும் தெரியவில்லை.

இந்த அடிப்படையில் முதல் பகுதியினர் தவற விடும் முக்கிய கேள்வி செல்வி நபீக் வேண்டு மென்றே (intentionally) அந்த நான்கு மாதக் குழந்தையைக் கொன்றிருந்திருந்தால் நிறை வேற்றப்பட்ட மரண தண்டனை பிழையானதா? என்பதும், அதே போல் மற்ற பகுதியினர் தங்கள் கருத்துக்கு எடுத்துக் கொள்ளாத கேள்வி அந்த நான்கு மாதக் குழந்தையின் இறப்பு செல்வி நபீக்கின் குற்ற உணர்வு இல்லாத (unintentional) தற்செயல் சம்பவம், எனவே அது கைமோசக் கொலை (2nd degree murder) அல்லது அந்த குழந்தை ஏற்கனவே அந்த தாயிக்கு தெரிந்த வகையில் இறந்துவிட்டது, ஆனாலும் இந்த அப்பாவி செல்வி நபீகின் மீது பழி சுமத்த அந்த வீட்டு எஜமாணி முயன் றுள்ளார். ஆகவே செல்வி நபீக் நிரபராதி என்ப துடன் உடனடியான விடுதலைக்கும் பொய் குற்றச்சாட்டை முகம் கொடுத்ததுற்கான நட்ட ஈட்டுக்கும், சட்டத்துக்கு புறம்பான முறையில் தடுத்து வைக்கப்படார் (unlawful detention) என்பதற்கான போதுமான நட்ட ஈட்டுக்கும் உரித்தாக இருந்திருந்தார். ஆகவே அவருக் களிக்கப்பட்ட மரண தண்டனை சட்டவழுக்கல் (error of law)ளின் அடிப்படையில் பெறப்பட்ட தீர்ப்பு, இது சரியானதா? என்பதே.

இந்த அடிப்படை அம்சம் தவறவிடப்பட்ட சந்தர்ப்பத்திலேயே ஷரி-ஆவை காட்டுமிராண் டித்தனமாக காட்டப்பட்ட ஒரு விடயமும் , எல் லாமே சரியாகவே நடந்தது என்ற மற்றய விட யமாகும். இத்துடன் இவர்கள் தவறவிட்ட அம்சங்கள், டில்லி கூட்டுப் பாலியல் வன் புணர்வு கொலையும் அது போன்ற சட்டத்தால் உரிய பாதுகாப்புக் கொடுக்கப்படாத இன்னும் பல கொடூர அல்லது காட்டுமிராண்டித்தனமாக நடக்கும், நடக்கவிருக்கும் கொலைகளுக்கான சரியான தண்டனையாக இந்த மரண தண் டனையை ஏற்றுக் கொள்ளும் சந்தர்பத்தை இழந்து விட்டதுமாகும்.

ஒரு உயிரை காரணமின்றி பறித்துவிட்டு, அந்த உயிரின் வாழ்வதற்கா அடிப்படை உரி மையை பறித்தெடுத்துவிட்டு, அந்த உயிரின் உறவுகளை தாளாத கவலையில் நிலைக்க விட்டுவிட்டு, கொலை குற்றவாளி தான் சுதந்திரமாக வாழ வேண்டும் என்று எப்படி எதிர்பார்ப்பது? கொலைக் குற்றவாளிக்கு அப்படியான வசதியை ஏற்படுத்திக்கொடுப்பது எப்படி நாகரீகமாகும்? இவர் மீண்டும் இத்த கைய குற்றம் ஒன்றை செய்யமாட்டார் என் பதற்கு உத்தரவாதம்தான் என்ன?

அதே போல் ஒரு சட்டத்தை பின்பற்றும் போது அதற்கான பின்பற்றல் முறைகளை (procedure) தட்டிக்கழிப்பதானது குற்றம் என்று சுட்டிக்காட்ட கிடைத்த சந்தர்ப்பத்தை மற்றப் பகுதி தவற விட்ட சந்தர்ப்பமாகும். இந்த மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட சவூதி அறேபியாவில் அதன் நீதி துறைக்கு போதுமான பயிற்சி அளிக்க, போதியளவு வைத்திய பரிசோதனைகள், தடய வியல் (forensic) நிபுணத்துவப் பயிற்சி, ஏனைய சட்டமருத்துவ பயிற்சி, குற்றம் சுமத்தப்பட் டவருக்கான போதியளவு சட்ட ஆலோசனை வழங்களுக்கான ஏற்பாடு, சித்திரவதையின் மூலம் அல்லது தூண்டுதல் மூலம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் (confession) பெறுவதை தவிர்த்தல், குற்றம் நிரூபிக்கப்படும் வரை குற்றம் சுமத்தப்பட்டவரும் கூட நிரபராதி என்ற முறையில் அவரை நடத்தல், பொதுவாக சட்டம் சம்பந்தமான போதியளவு விழிப்புணர்வை ஏற் படுத்தல் என்பவை மிக முக்கியமாகும். அறேபி யாவை கொங்கிறீட் காடாக (concrete jungle) மாற்ற, (என்றுமே) தேவையே படாத யுத்த ஆயுத கொள்வனவுக்காக வாரி இறைக்கும் பல பில்லியன்(billion) பணத்தை அல்லது நட மாடும் தொழுகை வாகனங்களுக்காக (mobile Mosque) செலவிட திட்டமிடப்பட்டுள்ள பல மில்லியன் (million)களில் ஒரு சிறுபகுதியே போதுமானதாக இருக்கும் நவீன தொழில் நுட் பம் அறிவும், அதை பிரயோகிக்க ஆற்றலும் கொண்டதாக நீதி துறையையும், சட்ட அமு லாக்க துறையையும் செயற்பாட்டு ரீதியாக தலை கீழாக மாற்றியமைக்க.

ஒரு உயிரை காரணமின்றி பறித்துவிட்டு, அந்த உயிரின் வாழ் வதற்கான அடிப்படை உரிமையை பறித்தெடுத்துவிட்டு, அந்த உயிரின் உறவுகளை தாளாத கவலையில் நிலைக்க விட்டுவிட்டு, கொலை குற்றவாளி தான் சுதந்திரமாக வாழவேண்டும் என்று எப்படி எதிர்பார்ப்பது?

இதோடு கூடவே தவறவிடப்பட்ட சந்தர்ப்பம் தான் சவூதி அரேபியாவின் குடும்ப ஆட்சியை கேள்விக்குற்படுத்தாததும், இஸ்லாம் காட்டித் தந்த ஜனநாயக ஆட்சியை அங்கே நிலை பெறச் செய்யவேண்டிய காலத்தின் கட் டாயத்தை சுட்டிக்காட்டாத விடயமுமாகும்.

இருந்தும் சவூதியின் தான்தோன்றித்தன மான போக்கு காரணமில்லாமல் இஸ்லாத் துடன் சம்பந்தப்படுத்தப்படுவது என்றும் அனும திக்கப் படமுடியாத விடயமாகும் என்பதையும் நாம் உள்வாங்கிக் கொள்வது அவசியமாகும்.

(பி.கு: மேலே உள்ளது உண்மையான வழக்கு இலக்கமல்ல. தலைப்புக்காக இங்கிலாந்து முறை பின்பற்றப்பட்டுள்ளது. ஷரி-ஆ சம்பந் தமாக இங்கு குறிப்பிட்டப்பட்ட அத்தனை விடயங்களும் இத் துறையில் போதிய போதனா, செயல்முறை அறிவு பெற்றதற்கான சாட்சியம் அல்ல. இது ஷரி-ஆவின் அடிப்படை அம்சங்களின் அடிப்படை மாத்திரமே.

மேலதிக தெளிவுகளுக்கு இத்துறை சார்ந் தோரை நாடுவது முக்கியமாகும்)

பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312
உங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க வேண்டுமா?
TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா

GTF இன் கிலுகிலுப்பையும் ஜெனிவாச் சலசலப்பும்

வேல் தர்மா

(ஒரு பேப்பருக்காக)

இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் தொடர்பான மாநாடு 2013 பெப்ரவரி 27-ம் திகதி நடைபெறவுள்ளது. இதில் சனல் - 4 தொலைக் காட்சியின் புதிய சூடற்ற பிரதேசம் (No Fire Zone) என்ற ஆவணப்படத்தின் முன்னோட்டம் திரையிடப்பட வுள்ளது. சனல் - 4 தொலைக்காட்சியின் புதிய சூடற்ற பிரதேசம் என்றஆவணப்படம் பின்னர் ஜெனிவா மனித உரிமைக்கழகக் கூட்டத் தொடரின்போது முழுமையாகத் திரையிடப்படும்.

GTF எனப்படும் உலகத் தமிழர் பேரவை ஒழுங்கு செய்த மேற்படி மாநாட்டில் 2013 மார்ச் மாதம் நடக்க விருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கழகத்தில் வாக்களிக்கும் உரிமையுள்ள நாடுகளின் வெளிநாட்டமைச்சின் பிரதிநிதிகள் கலந்து கொள்ள வுள்ளனர். பிரித்தானியாவில் இருந்து செயற்படும் பன்னாட்டு மன்னிப்புசபையும் அமெரிக்காவிற் செயற்படும் மனித உரிமைக் கண்காணிப்பகமும் இந்த மாநாட்டில் ஜெனிவா மனித உரிமைக்கழகக் கூட்டத் தொடரில் தாம் சமர்ப்பிக்க விருக்கும் அறிக்கைகளை வெளியிடவுள்ளன

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் இலங் கைப் போர்க்குற்றம் தொடர்பாக விசாரிக்க அமைத்த நிபுணர் குழுவின் மூன்று உறுப்பினர்களில் ஒருவரான யஸ்மின் சூக்காவும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள விருக்கிறார். இலங்கைத் தமிழர்களை ஏமாற்றஅனுப் பப்பட்டமாயமானாகியநோர்வேசமாதானத்தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இதில் பங்குபற்றலாம் என எதிர்பார்க்ப் படுகிறது. இவர் தமிழர்களுக்கு எதிராக ஏதாவது குற்றங் களை மீண்டும் முன்வைப்பாரா என்ற கேள்வியும் எழுந் துள்ளது. மீண்டும் புலிகள் பிழை விட்டனர் என்று முழங்குவாரா?

புது டில்லியின் கட்டளை இல்லாமல் சம்பந்தர் வருவாரா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சர்ச்சைகுரியவர்களான இரா சம்பந்தனும். எஸ் சுமந்திரனும் இந்த மாநாட்டில் பங்குபற்றுவார்கள் எனஎதிர்பார்க்கப் படுகிறது. இவர்கள் மீண்டும் புலிகள் பயங்கரவாதிகள் என்றுசொல்வார்களா? சிங்கக் கொடியை அம்மனின் கொடி என்பார்களா? அல் லது இந்தியா சொல்லிக் கொடுத்ததைச் சொல் வார்களா? இந்திய வெளியுறவுச் செயலர் சிவ் சங்கரமேன னின் எழுதுவினைஞரின்(கிளார்க்) உதவியாளரின் உதவி யாளர் உத்தரவு கொடுத்தால் மட்டுமே இரா சம்பந்தன் ஜெனிவாவில் நடக்கும் மனித உரிமை மாநாட்டிலோ அல்லது கலந்துகொள்வாரா? எஸ்.சிறிதரன் போன்ற உணர்வு மிக்கவர்களை இந்த மாநாட்டுக்குஅழைத்தால் GTF இன் எஜமானர்களும் துட்டுக் கொடுப்பவர்களுமான அமெரிக்காவும் நோர்வேயும் கோபித்துக் கொல்வார்களா?

ஒரு இலட்சம் தாலி அறுத்தவர் பிரித்தானியாவின் பிரதிப் பிரதம மந்திரி நிக் கிளேக், எதிர்க் கட்சித் தலைவர் எட் மில்லிபாண்ட், எதிர்க்கட்சியின் நிழல் வெளிநாட்டமைச்சர் டக்ளஸ் அலெக்சாண்டர் ஆகியோரும் இந்த மாநாட்டில் பங்கு பெறவிருக்கின்றனர். எங்கோ எவனோ தன் ஒரு தாலியை அறுத்தமைக்காக ஒரு இலட்சம் ஈழப் பெண் களின் தாலியை பறித்தவரை கருணையானவர் என்று உலகத் தமிழர் பேரவையின் அமைப்பாளர்கள் இந்த மாநாட்டில் முழங்குவார்களா?

தறுதலைக் கூட்டத்துடன் செட்டு சேர்ந்துட்டாங்களய்யா!

முன்பு இணைத் தலைமை நாடுகள் என்னும் பெயரில் வந்து எமது கழுத்தறுத்து ஒரு தறுதலைக் கூட்டம். இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்போம் வாருங்கள் என்றுசொல்லி இலங்கை அரசுக்கு பணம், படைக்கலன்கள், உளவுத் தகவல்கள் கொடுத்ததுடன், தமிழர்களின் போராட்டத்தை பயங்கரவாதம் என்ற முத்திரை குத்தி அவர்களின் போராட்டத்திற்கான வழங்கு பாதைகளைத் துண்டித்து சிங்களவர்களின் இன அழிப்பிற்கு வழிவகுத்தவர்கள் இந்த இணைத் தலைமை நாடுகள் எனப்படும் தறுதலைக் கூட்டம். தமிழீழ விடுதலைப் புலிகளை படைக்கலப் போராட்டத்தை மட்டுமல்ல சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையையே கைவிடும்படி வற்புறுத்திய கும்பல் இது. இப்போது வேறு வடிவம் எடுத்து எம்மை ஏமாற்ற முனைகிறது. இந்தக் கும்பலின் கைகளில் உலகத் தமிழர் பேரவை சிக்கிவிட்டதா? அமெரிக்காவோ நோர்வேயோ ஐரோப்பிய ஒன்றியமோ தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளவில்லை. இவர்கள் தற்போது அதிகாரப் பர வலாக்கம் என்ற வார்த்தையையே பாவிப்பதில்லை இது அதிகாரப் பரவலாக்கம் என்பது சிங்களவர்களைப் பொறுத்தவரை ரெம்பக் கெட்டவார்த்தை. இந்தக் கெட்ட வார்த்தையைப் பாவித்தால் சிங்கள மக்கள் கோபப்படு வார்கள் என்று இந்தக் கும்பலுக்குத் தெரியும். இதனால் நல் லிணக்கம் என்ற புதுவார்த்தையை கண்டுபிடித்துள்ளனர்.

ஜெனிவா சலசலப்பு

2009-ம் ஆண்டுபோர் முடிந்தவுடன் இதே மனித உரிமைக் கழகத்தில் போரின் போது மனித உரிமை மீறல்கள் நடந்ததால் இலங்கையைக் கண்டிக்கும் தீர் மானத்தை ஐரோப்பிய ஒன்றியம் கொண்டுவந்த போது அமெரிக்கா நடுநிலை வகுத்தது. இந்தியாவும் தென் ஆபிரிக்காவும் சீனாவுடன் இணைந்து அதை இலங் கைக்குப்பாராட்டுத் தெரிவிக்கும் தீர்மானமாக மாற்றியது. அப்போது போருக்குப் பின்னரான அபிவிருத்தி என்ற போர்வையில் இலங்கையைப் பொருளாதார ரீதியில் சுரண்டஅமெரிக்கா தனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் எனக் காத்திருந்தது. ஆனால் போருக்குப் பின்னர் இலங் கையில் சீனாவே அதிக முதலீடுகளைச் செய்தது. அரச பணிகள் பல ஒப்பந்தக் கோரிக்கைகள் (tender) இல்லா மல் சீனாவிற்கு வழங்கப்பட்டது. இதனால் அதிருப்தி யடைந்த அமெரிக்கா இலங்கைப் போர்க் குற்றம் தொடர் பாக தனது நிலைப்பாட்டைமாற்றிக் கொண்டது. இந்தியா வைப் பொறுத்தவரை அது இலங்கையின் ஒரு ராசதந்திரச் சில்லறைக் கைக்கூலி போல் செயற்படுகிறது.

தென் ஆபிரிக்க நடுநிலைமை

2009-ம் ஆண்டு இலங்கையை பயங்கரவாதத்திற்கு ஒழித்தமைக்காக பாராடுத் தெரிவித்தது தென் ஆபிரிக்கா. இப்போதுவரும் செய்திகளின்படி முன்பு நோர்வே செய்து வந்த சிங்கள ஆட்சியாளர்களுக்கும் தமிழர்களுக் கும் இடையிலான சமாதானத் தூதுவர் வேலையை தென் ஆபிரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவரு கிறது. ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களும் உலகத் தமிழ் பேரவையைச் சேர்ந்த வர்களும் தென் ஆபிரிக்கா சென்று பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருப்பதாகவும் செய்திகள் வெளிவருகின்றன. 2012 செப்டம்பரில் இலங்கையில் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் விசாரணைகள் உள்நாட்டு நீதியில் முதலில் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதே தென் ஆபிரிக்காவின் நிலைப்பாடுஎனஅதன் வெளிநாட்டு அமைச்சர் தெரிவித்திருந்தார். இலங்கையின் நல்லி ணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை பல பன்னாட்டு அமைப்புக்கள் அதிருப்திகரமானவை என்று தெரிவித்த பின்னரும் தென் ஆபிரிக்கா இப்படிக் கூறியிருந்தது. இலங் கையில் முதலீடு செய்ய தென் ஆபிரிக்காவிற்கு வழி செய்யப்பட்டுள்ளது.

கோர்த்து விடும் செய்திகள்

■ கள்ளா லட்டுத் தின்ன ஆசையா

கடைசியாக இந்திய வெளிநாட்டமைச்சர் கொழும்பு சென்றபோது அவருக்கு மஹிந்தன் முறையாக முகத்தில் கரி பூசி அனுப்பிவிட்டார். அதனால் ஜெனி வாவிற்கு முன்னோடியான பேச்சு வார்த்தைக்கு இலங்கை செல்வதை இந்திய அதிகாரிகளோ அமைச்சர்களோ விரும்பவில்லை. மஹிந்தரைக் புதுடில்லிக்கு அழைத்து சிவப்புக் கம்பளம் விரிக்கவும் விருப்பமில்லை. இதனால் மஹிந்தர் திருப்பதிக்கு லட்டுத் தின்னச் செல்லும் நாடகம் அரங்கேற்றப்பட்டது.

சாஞ்சியில் வெளியுறவுத் துறையினரும் திருப்பதியில் உளவுத்துறையினரும் மஹிந்தரைச் சந்தித்து பேசினர். அமெரிக்கா கொண்டுவரவருக்கும் தீர்மானத் தின் கடுமையைக் குறைப்பதற்கு 'டீல்' செய்யப்பட்டதோ? இதனால் தான் அம்பாந்தோட்டையில் இந்தியா சீனித் தொழிற்சாலை அமைப்பதாக செய்தி யும் வந்ததோ?

■ தாழ்ப்பாள் போட்டாள் ஒன்றும் தெரியாத பாப்பா

பாலச்சந்திரன் பிரபாகரன் கொல்லப்பட்டதாகக் காட்டும் படங்கள் உண்மை யானவையா எனத் தம்மால் உறுதி செய்ய முடியாமால் இருக்கிறது என்றார் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர். இலங்கைப் போரில் இந்தியாவின் படையும் உளவுத் துறையும் நேரடியாகப் பங்கேற்றது என உறுதியாக நம்பும் ஒரு நண்பர் சனல் -4 இற்கு முன்னமே இந்தியாவிற்கு பாலச்சந்திரன் கொல் லப்படமை தெரியும் என்றும் பாலச்சந்திரனைக் கொல்லும் முடிவு சதீஷ் நம்பியாருடனும் கலந்தாலோசித்த பின்னரே எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் அடித்துச் சொல்கிறார்.

■ என்ன இந்த Procedural resolution ?

இம்முறை ஒரு **procedural resolution** கொண்டுவரப் போவதாக ஐக்கிய அமெரிக்கா தெரிவித்துள்ளது. ஐ.நா.வைப் பொறுத்தவரை இருவகைத் தீர்மானங் கள் உள்ளன. அவை தன்னிலையான தீர்மானம் (**Substantive resolution**) என்றும் செயன் முறைத் தீர்மானம் procedural resolution எனப்படும். **Substantive resolutions** apply to essential legal principles and rules of right, analogous to substantive law, in contrast to **procedural resolutions**, which deal with the methods and means by which substantive items are made and administered. தன்னிலையான தீர்மானங்கள் என்பன எழுதப் பட்ட சட்டங்கள் போல் முக்கிய சட்ட தத்துவங்களுக்கும் உரிமை விதிகளுக்கும் பிரயோகிக்கப்படும் மாறாக செயன் முறைத் தீர்மானங்கள் தன்னிலையான தீர்மானங்களை நிர்வகிப்பதற்கான முறைகளையும் வகைகளையும் கொண் டது. அமெரிக்கா கொண்டுவரும் **procedural resolution** என்பது ஏற்கனவே கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை எப்படி நிர்வகிப்பது என்பது தொடர்பாகவே இருக்கும். புதிதாக ஏதும் செயன் முறைத் தீர்மானத்தில் இருக்க முடியாது.

-ஊருளவாரி



இலங்கையில் எந்தப் பாகத்திற்கும்
வீட்டுக்கு வீடு சேவை....

பொருட்கள் பெற்றுக் கொள்ளும் இடங்கள்

* GREENFORD * WIMBLEDON * VAUXHALL * BIRMINGHAM
* STOKE-ON-TRENT * A-LANKA TRAVELS LTD, TOOTING

• இலங்கையில் சகல இடங்களுக்கும் வீட்டிற்கு நேரடியாக விநியோகம்.
• விசேட சலுகைகள்
• இலங்கை மற்றும் இந்தியாவிற்கு விசேட விலையில் விமான மார்க்கமாகவும் பொதிகள் அனுப்பப்படும்
• இரண்டு நாட்களில் கொழும்பிற்கான துரித தபால் சேவையும் உண்டு

• Vehicle Shipping
• Furniture Shipping
• Express Letter Service
• Packing Service
• Relocation Service
• Man and Van Service
• Packing Materials
• European Parcel Service

DUNN SHIPPING LTD.
07949361434
07949361313
Door to Door Delivery
67, Gap Road, Wimbledon, SW19 8JA.
020 8842 2020
info@dunnshipping.co.uk
www.dunnshipping.co.uk

முன்னுரைக்கான குறிப்புகள்

விரைவில் என்னுடைய நூல் ஒன்று *'காலச்சுவடு'* பதிப் பகத்தின் மூலமாக வெளிவர இருக்கிறது. *'ஆயுத வரி'* என்று அதற்குப் பெயரிட்டுள்ளேன். ஐந்து குறுநாவல் கள் அதற்குள் அடங்குகின்றன. அந்நூலினது பாடு பொருள் அரசியல். 'மனிதன் என்பவனே அரசியல் பிராணி' என்பது பொதுவான கருத்து. மனிதரின் செய்கைகள் அனைத்திலும் அரசியல் நூல் இளையோடுகிறது. காதலி லும் கலவியிலும் கூட. எனவே அரசியல் மையம் கொண்ட வையும் குறுநாவல்கள் என்று மேலோட்டமாக அதனைச் சொல்லி விட முடியாது.

அப்படியாயின் அதனை எப்படிக் கூறலாம்? தூல மாக நம் கண் முன்னே தெரியும் அரசியலை அது பாடு பொருளாக கொண்டுள்ளது. குறிப்பாக நமது தேசிய அரசியலை அது பாடுபொருளாக்கியுள்ளது. எனது படைத் தாழுமையை தேசிய அரசியலில் செலவிட்டுள்ளேன் என்றும் இதனைக் கூறலாம்.

'நமக்குத் தொழில் கவிதை

நாட்டுக்குழைத்தல்

இமைப்பொழுதும் சோறாதிருத்தல்'

என்றார் பாரதியார்.

நானும் அவ்வழி வந்தேன். குறிப்பாக 2009 மே-யிற்குப் பிறகு என்னால் இயலுமான வழிகளில் எனக்குத் தெரிந்த வழிகளில் தமிழ்த் தேசிய அரசியலுக்கு எவ்வாறு உழைக்க லாம் என்ற யோசனையே இப்படைப்புக்கள். நான் ஒரு அரசியல் பிரசங்கியோ, அரசியல் ஊழியனோ அல்லன். அடிப்படையில் ஒரு படைப்பாளி.

முதலில் எனக்கு நானே, *'நான் ஒரு படைப்பாளி'* என்று உரக்க காதினுள் கூவுகின்றேன். மனதில் தைக்கும்படி யாக நெஞ்சில் அறைகின்றேன். என்னைப் படைப்பாளி என்று கூறுவது தலைக்கனத்தினால் அல்ல. தன் நம்பிக் கை தான். அதனை தன்னடக்கத்துடன் சொல்கிறேன். எத்தனையோ அற்புதமான படைப்பாளிகளுக்கு முன், நான் வெறும் தூசு. என் எழுத்தின் வல்லமை எனக்குத் தெரியும். ஆயினும் சிலர் என் எழுத்து நன்றாக இருக் கின்றது என்கிறார்கள், அந்த நம்பிக்கையில் என் வண்டில் ஓடுகின்றது.

ஏலவே என் மூன்று நூல்கள் வெளியாகியுள்ளன. *'காலம் ஆகி வந்த கதை'* (நினைவு கொலல் குறிப்பு), *'பாலைகள் நூலு'* (சிறுகதைத் தொகுப்பு), *'வீடு நெடும் தூரம்'* (அரசி யற் புதினம்) ஆகியனவே அவை. *'காலம் ஆகிவந்த கதை'* நூலை கவிஞர் கருணாகரன் வெளியிட்டிருந்தார். *'பாலை கள் நூறு'* இ.பத்மநாப ஐயரலும், *'வீடு நெடும் தூரம்'* கரிசல் சிவ.செந்தில்நாதனாலும் வெளியிட்டு வைக்கப்பட் டன.

ஒத்த அரசியலில் கருணாகரனும் நானும், ஓடிய காலத் தில் காலம் ஆகி வந்த கதை வெளிவந்தது. பயணம் திசை மாறிய இவ்வேளையில் கருணாகரனால் காலம் ஆகிவந்த கதை வெளியிடப்பட்டிருக்க முடியாது. நானும் கொடுத் திருக்க மாட்டேன். மேலும் இணக்கமும், அபிவிருத்தியும், இரண்டறக் கலந்த கருணாகரனின் அரசியலில் ஒத்துப் போக என்னால் முடியாது.

அதிலிருந்து 'ஆயுத வரி' நூலுக்கான முன்னிடையினை தொடங்குகின்றேன். அதாவது தமிழ்த் தேசிய தொடர்பான எனது கருத்துக்களை முன்னுரையில் பதிகிறேன். இணக்க அரசியலும் அபிவிருத்தி அரசியலும் எல்லாச் சமூகங்களி லும் எப்பொழுதும் இருந்து வருவன ஆகும். இணக்க அரசியலிலும், அபிவிருத்தி அரசியலிலும் ஈடுபடுவோரை துரோகிகள் என்று அச்சமூக மக்கள் இனங்காண்பதும் உண்டு தான். அது சரியா தவறா என்ற விவாதத்திற்கு அப்பால் அதில் பொதிந்துள்ள உண்மைகளை நாம் கண் டறிதல் வேண்டும். இதனாலேயேதான் கவிஞர் காசி ஆனந் தன் 'சோறா? சுதந்திரமா?' என்று கேட்டார் அந்தக் கேள்வி, ஆழமானது என்று இப்பொழுது உணர்கின்றேன்.

'நாம் இப்பொழுது தமிழ்த் தேசியத்தை இறுகப் பற்றிக் கொண்டுள்ளோம் என்ற ஏளனம் கொண்ட குற்றச்சாட்டு ஒன்று இப்பொழுது சிலரிடம் முளைத் திருக்கின்றது. முன்னர் நாம் தமிழ்த்தேசியம் பற்றி அக் கறைப் பட்டபோது இவர்கள் பாட்டாளி மக்கள் சர்வ தேசம் பற்றிய நம்பிக்கையில் இருந்தார்கள் இப்பொழுது இப்படி உருவாகியிருக்கிறார்களே என்று கோபப்படு பவரும் உண்டு. அக்கோபத்தில் நியாயம் உண்டு என்றாலும் வந்தாரை வரவேற்க வேண்டும் என்பது தமிழ்த் தேசியத்தினரது கடமை தானே.

அரசியல் ரீதியாக தமிழ்த் தேசியத்தை புரிதலிலும் அனு பவத்தில் தமிழ்த் தேசியத்தை உணர்வதிலும் நிறைய வேறுபாடு உண்டு. முன்னையது வெறும் கோட்பாட்டு ரீதி யானது. கொள்கைகள் மாற மாற கோட்பாடுகளும் மாறிச் செல்லும். முன்னர் அறிந்த ஒன்று பின்னர் பிழையாக லாம். முன்னர் சென்ற பாதையிலிருந்து எதிர்ப்பக்கம் நடந் தும் செல்லலாம். முன்னுக்கு பின் முரணாகப் பேசவும் வைக்கும். விவன்டாவாதம் புரிபவர்களும் கோட்பாட்டு ரீதி யான வழி வந்தோரே.

இரவி அருணாசலம்

எழுதுவது என்னவெனில்

அனுபவம் என்பது ஆணி அறைவதற்கு ஒப்பானது, அது அறிதல் அல்ல, உணர்தல். நெஞ்சில் தோய்ந்து நினைவில் நிலை நிறுத்துதல். அனுபவம் வாழ்வுக்கு ஆசான். அறிவு அதற்கோர் உற்ற துணை. அப்படித் தான் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்.

1992 மே 22 அன்று சிங்களத் தலைநகர் கொழும்பில் வசிப்பதற்காக தமிழ்த் தேசிய தீவிரவாதிகளின் பிறழ்வான நடத்தையினால் வலிந்து அனுப்பி வைக்கப்பட்டேன். மே 22 ஆம் நாளுக்கு வேறோர் குறியீடும் உண்டு. இலங் கை 'சிங்கள, பௌத்த நாடு' என்று 1972ஆம் ஆண்டு மே 22ஆம் நாள் அன்று தான் ஸ்ரீமாவோ அரசு அரசியல் சட்ட மூலம் பிரகடனப்படுத்தியது. அந்த நாள் ஒன்று தான் இலங்கைத் தமிழர்களுக்கு இருக்கக் கூடிய ஒரேஒரு தீர்வு தமிழீழம் தான் என்பதனையும் பிரகடனப்படுத்தியது.

என்ன ஒற்றுமை பாருங்கள், அதே மே 22ஆம் நாளின் பிறகு தான் தமிழ்த் தேசியத்தை அனுபவம் ரீதியாக உணர்ந்தேன். அவ்வாறு உணர வைத்தவர்கள் சிங்கள, பௌத்த மகாசனங்கள்.

இலங்கையானது தேசிய இனங்களான சிங்களவர்களா லும், இலங்கைத் தமிழர்களாலும், தேசிய சிறுபாண்மை இனங்களான முஸ்லிம்களாலும், மலையகத் தமிழர்களா லும் கட்டப்பட்டது. சிங்கள பௌத்த பெரும் தேசிய இன வாதமே இலங்கையை ஆட்சி செய்கின்றது.

அந்த இனவாதிகளாலேயே இலங்கையை ஆட்சி செய்ய முடியும். பெரும்பான்மையான சிங்களவர்கள் தமது வாக்குப் பலத்தினால், அவ்வினவாதிகளை ஆட்சிக் கட்டிலில் ஏற்றுவர். இதில் அறிவுஜீவிகளுக்கோ சாதாரண பொது சனங்களுக்கோ எவ்வித வேறுபாடும் கிடையாது. இதனை அனுபவ பூர்வமாக உணர்ந்தேன். அவற்றை சொல் சொல் என்று என்னிடம் நிறையக் கதைகள் இறைஞ் சின. சொல்வதற்கு காலம் ஒன்றுண்டு. அப்பொழுது சொல் வேன். இப்பொழுது சொல்கிறேன். அதுவே என் தொகுப்பு நூலுக்கான முன்னுரை.

எல்லை... *(12ம் பக்கத் தொடர்ச்சி)*

..தனது விமானங்களை அனுப்புவதுண்டு. இதற்கென தனது விமானங் களின் தொழில் நுட்பத்தைப் புதுப்பித்துக் கொண்டு இருக்கிறது இரசியா. சீனப் படையினர் இந்திய எல்லைகளுக்குள் நுழைந்து தமது முகாம்களையே அமைப்பதுண்டு. பல நூறு சதுரமைல்களை சீனப் படைகள் அருணாச்சலப் பிரதேசத்தில் ஆக்கிரமித்துவிட்டன.

◆ எல்லை தாண்டிய இணைய வெளிப்போர்

பல நாடுகள் கணனி நிபுணர்களைத் தம் படைப்பிரிவில் இணைத்து ஒரு இணையவெளிப் படைப் பிரிவுகளைஉருவாக்கியுள்ளன. இவை மற்றநாட்டுக் கணனி வலையமைப்புக்குள் நுழைந்து தகவல்கள் திருடுவது, அங்கு கணனி களை செயற்படாமல் செய்வது, அந்தநாடுகளின் மக்களிற்கான வழங்கற் கட் டமைப்புகளை செயற்படாமல் செய்வது போன்றவற்றில் ஈடுபட்டுள்ளன. இது ஒரு புதிய வகையான எல்லை தாண்டிய பயங்கரவாதம். அமெரிக்கா தனது மரபு வழிப்படையினருக்கு வழங்குவது போல் தனது ஆளில்லாப் போர் விமானப் படையினருக்கும் இணைய வெளிப் படையினருக்கும் பதக்கம் வழங்கும் முறையை முதலில் அறிமுகப்படுத்தியுள்ளது. அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா அமெரிக்காவின் படைத்துறை, நிதி நிறுவனங்கள், பயணிகள் போக் குவரத்து விமானங்களிற்கும் விமான நிலையங்களுக்கும் இடையிலான தகவற் தொடர்புகள், மற்றும் பொது மக்களுக்கான வழங்கல்கள் போன்றவற்றை அன்னியர்களின் இணையவெளிப் படையினர்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகும் அச்சுறுத்தல்கள் இருப்பதாக தெரிவித்துள்ளார். ஆனால் அமெரிக் காவின் ஆளில்லா விமானங்கள் ஐம்பதுக்கு மேற்பட்டநாடுகளில் உளவு பார்ப்பதில் ஈடுபட்டுள்ளன. 61398 எனப்படும் சினாப்படையின் இரகசியப் பிரிவு ஒன்று உலகெங்குமுள்ள 141 நிறுவனங்களின் பெருமளவுதகவல் களைத் திருடியுள்ளதாக அமெரிக்காகுற்றம் சாட்டியுள்ளது. இதற்கின அமைக்கப்பட்ட சிறப்பு வேவுப் பிரிவு இதைக் கண்டுபிடித்துள்ளது. இதை மறுத்த சீனா தனது நாட்டில் இருந்து தான் பெருமளவு தகவற்திருட்டு நடப்ப தாகத் தெரிவிக்கிறது.

தீர்வுத்திட்ட... *(18ம் பக்கத் தொடர்ச்சி)*

.. போர்க்குற்ற விசாரணை வரப்போகின்றது ராஜபக்ச அரசு கவிழப் போகின் றது சமவுரிமை கிடைக்கப் போகின்றது தமிழீழம் மலரப்போகின்றது என்றெல் லாம் கனவுகண்டு, இலவுகாத்த கிளிகள்போல வருடாவருடம் இலவுபழுத்ததும் வெடித்துப் பறக்கும் பஞ்சுத்தூசுகளாய் அனைத்தும் காற்றில் கலைந்துவிட ஏமாற்றப்படுகின்ற அவல நிலையே தொடர்கின்றது. எப்படியிருப்பினும் அர சாங்கத்திற்கு வரடாவருடம் இந்த நெருக்குவாரம் வரத்தான் போகிறது. இழைக்கப்பட்டுவிட்ட அநீதிக்கு எதிராகத் தமிழ் மக்கள் குரல் கொடுப்பது தொடரும்வரை இது நீண்டுகொண்டே போகும். உலக அரங்கில் இலங் கைக்கு எதிரான அபிப்பிராயம் மாறி அந்தநாடு ஓர் நற்பெயரைப் பெற்றுக் கொள்ள நீண்டகாலமெடுக்கலாம். அங்கு சிறுபான்மை மக்கள் அடக்கு முறைக்கும் மனிதவுரிமை மீறல்களுக்கும் உள்ளாகிறார்களென்கின்ற தோற் றப்பாடு சர்வதேச ரீதியில் நிலைபெற்று விட்டவொன்றாகவே பலவருடங்களுக்கு இருக்கப் போகின்றது. நிலையானவோர் அரசியற் தீர்வொன்று ஏற்படும்வரை, அல்லது சகல இனமக்களும் சமவுரிமையோடு வாழக்கூடிய சூழ்நிலையொன்று உருவாகும்வரை இந்தக் கெட்ட பெயரோடு காலங்கடத்தி உலகின்முன் தலை குனிவோடு பதில்கூறவேண்டிய நாடாகவே இலங்கை தற்போது உள்ளது.

இந்த வாய்ப்பான சூழ்நிலையைத் தமிழினம் தனக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொள்வதன்மூலம் அரசியல் ரீதியில் நிறைய நற்பலன்களைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆளும் தரப்போ எதிர்த்தரப்போ தமிழினத்தின் பலம், பலவீ னங்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி இறுதியில் எம்மைக் கைவிட்டு விடாமலிருக்கக் கூடியதான வேலைத்திட்டங்களை தமிழ்த்தலைமைகள் உருவாக்கி இனத்தை வழிநடத்துவதே இன்று செய்யவேண்டிய பணியாகும். அதைவிடுத்துக் கூப்பிட்டவர்கள் எல்லோருக்கும் பின்னால் போய்க் கொண்டி ருக்க முடியாது. யாழ்ப்பாணத்தில் நில அபகரிப்பிற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தில் எதிர்க்கட்சிகளைப் பங்கேற்கச் செய்தமையானது எம்மைப் பாவிக்க முயலும் எதிரணியினரை நாம் உரியமுறையில் பயன்படுத்திக் கொண்ட ராஜதந்திரமாக இருந்தால் அது போற்றத்தக்கதே. மாறாக எதிரணி யினர் அரசைக் கவிழ்க்கின்ற நோக்கில் தமிழ்மக்களைப் பலிக்கடாக்களாக்க முற்பட்டிருந்தால் அதனை எச்சரிக்கையோடு நோக்கவேண்டியிருக்கிறது. தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு எந்தவித தீர்வுத்திட்டங்களுமில்லாமல் எதிர்த் தரப்பும் ஆளும்தரப்பும் தங்கள் காலத்தைக் கடத்திக்கொண்டேயிருக்கும் நிலையில் உரிய தீர்வுடன் வாருங்கள் ஒத்துழைக்கிறோமென்று தமிழ்தலை மைகள் வலியுறுத்தவேண்டியது கடமையாகிறது. சிங்களமக்களுக்காக மகிந்த சிந்தனையிருக்கிறது. எங்களுக்காக என்ன இருக்கிறது.?

பிறந்திருக்கும் புத்தாண்டில்

புதியதொரு ஆரம்பத்துக்குத் தயாரா ?

புத்தாண்டில் புதியதொரு வியாபாரத்தைத் தொடங்கவிருக்கிறீர்களா ?

உங்கள் வியாபாரம் சிறியதோ பெரியதோ கவலை வேண்டாம்!!!

- Business start-up advise - Business Plans
- Cashflow forecast and projections - Arranging loans and funding
- Preparing VAT, Payroll and Tax returns - Recruitment
- Company formations - Financial and Management information

தொடங்கவிருக்கும் புதிய முயற்சியில்
உங்களுக்குத் தேவையான சகலவிதமான
நிதி கணக்கியல் ஆலோசனைகளையும்
அனுபவம் மிக்க நிபுணர்களைக் கொண்டு
பூர்த்தி செய்ய காத்திருக்கிறார்கள்.

தாமதம் வேண்டாம்

vectra
Complete Business Solutions

Vectra Consulting

விபரங்களுக்கு அழையுங்கள் 0203 576 0000

G02, Lombard House, 2 Purley Way, Croydon CR0 3JP

Email: **info@vectraconsulting.co.uk** Web: **www.vectraconsulting.co.uk**

வாழ்க்கைத் துணை

இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக **ஒரு பேப்பர்** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: **info@orumanam.com**

மணமகள் தேவை

1. 37 வயது, 5'2" British citizen Engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4498

2. 31 வயது, 5'8" student visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4497

3. 37 வயது, 5'10" British citizen Engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4495

4. 35 வயது, 5'10" Asylum seeker in Uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4492

5. 40 வயது, 5'6" British citizen manager in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4490

6. 31 வயது, 5'9" PR in Uk Engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3948

7. 28 வயது, 6'2" Canadian citizen finished diploma and working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4482

8. 43 வயது, 5'5" British citizen divorced self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4470

9. 36 வயது, 5'7" Canadian citizen graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4461

10. 47 வயது, 5'8" PR in UK, Divorced working as an Accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3422

11. 30 வயது, 5'9" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4456

12. 22 வயது, 5'3" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4450

13. 31 வயது, 5'6" Student visa in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4446

14. 36 வயது, 5'10" British citizen working as a building contractor தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4043

15. 33 வயது, 5'9" British citizen working in a Super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3574

16. 36 வயது, 5'10" British citizen lawyer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4445

17. 28 வயது, 5'10" work permit visa graduate working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4444

18. 37 வயது, 5'5" British citizen divorced working as a system engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4441

19. 38 வயது, 5'3" British citizen working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4435

20. 37 வயது, 5'5" British citizen working as a carpenter தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4431

21. 32 வயது, 5'8" Permanent residence in Uk working as a cashier தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4430

22. 32 வயது, 5'8" Permanenet residence in Swiss ,Graduate working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4424

23. 40 வயது, 5'7" British citizen self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4423

24. 32 வயது, 5'8" British citizen graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4419

25. 37 வயது, 5'9" work permit visa working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4412

26. 29 வயது, 5'9" British citizen self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4410

27. 34 வயது, 5'4" Asylum seeker in Uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4408

28. 29 வயது, 5'8" Asylum seeker in Uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4404

29. 44 வயது, 5'6" work permit visa working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4382

30. 38 வயது, 5'5" British citizen self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4312

31. 47 வயது, 5'8" Accountant permanent residence in uk divorced looking for a suitable bride Ref: 3422

32. 29 வயது, 5'9" student visa working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4395

33. 30 வயது, 5'5" graduate work permit visa in UK தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4394

34. 29 வயது, 5'9" PSW visa working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4392

35. 29 வயது, 5'6" PSW visa Engineer in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4377

36. 28 வயது, 6'2" Canadian citizen graduate manager in a hotel தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4376

37. 34 வயது, 5'10" British citizen working in IT field தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3714

38. 36 வயது, 6'1" Accountant born and broughtup in Uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4374

39. 26 வயது, 6'0" student visa doing diploma தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4371

40. 22 வயது, 5'1" student visa Graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4369

41. 37 வயது, 5'9" British citizen self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4367

42. 30 வயது, 5'10" graduate work permit visa working as a manager in hotel தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4355

43. 40 வயது, 5'8" British citizen Engineer divorced working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4075

44. 29 வயது, 5'7" Tier 2 work permit visa Graduate working as chef in restaurant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3975

45. 28 வயது, 5'3" Permanent visa in Germany,Working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4295

46. 41 வயது, 5'9" PR in UK,doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4334

47. 39 வயது, 5'9" British citizen, working in offlicence as a manager தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4336

48. 31 வயது, 6'1" PSW visa, working in a food court தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4325

49. 32 வயது, 5'3" Refugee in Switzer land, working in a hotel தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4324

50. 29 வயது, 5'7" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4323

51. 30 வயது, 5'6" student visa in UK, working in food court தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4320

52. 34 வயது, 5'10" PR, working in a company as a director தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4318

மணமகன் தேவை

1. 28 வயது, 5'7" born and broughtup graduate working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4496

2. 22 வயது, 5'3" British citizen accountant தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4491

3. 34 வயது, 5'4" PR in Uk divorced working in a factory தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4489

4. 21 வயது, 5'8" PR in Uk student graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4488

5. 26 வயது, 5'0" PR in Uk graduate working in a medical sector தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4487

6. 27 வயது, 5'2" British citizen Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4485

7. 25 வயது, 5'6" PR in Uk working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4484

8. 29 வயது, 5'7" born and brought up in Uk graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4483

9. 34 வயது, 5'5" British citizen working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4473

10. 24 வயது, 5'7" born and broughtup graduate working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4481

11. 27 வயது, 5'2" British citizen graduate working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4477

12. 23 வயது, 5'2" British citizen graduate student தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4471

13. 37 வயது, 5'5" Accountant working in srilanka தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4465

14. 40 வயது, 5'4" Doctor work permit visa in Uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4455

15. 27 வயது, 5'4" srilanka தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4414

16. 32 வயது, 5'0" working in pharmacy US citizen living in US தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4398

17. 29 வயது, 5'2" British citizen graduate working in NHS தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4388

18. 35 வயது, 5'4" British citizen divorced living with the child working in a super market தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4383

19. 33 வயது, 5'8" British citizen divorced working as a Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3508

20. 28 வயது, 5'8" British citizen working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359

21. 30 வயது, 5'5" Born and Brought up in Uk Accountant தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 3316

22. 33 வயது, 5'2" British citizen divorced working as a IT manager தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4373

23. 23 வயது, 4'10" Permanent residence in uk student தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4362

24. 30 வயது, 5'7" British citizen working in NHS as a Personal assistant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4357

25. 31 வயது, 5'5" Graduate working in a supermarket in a work permit visa தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4102

26. 34 வயது, 5'5" British citizen, Separated தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4331

27. 28 வயது, 5'3" British citizen, working in an IT field தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4338

28. 26 வயது, 5'3" British Citizen, Doctor in USA தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4348

29. 32 வயது, 5'3" British citizen, working as a Tutor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4322

30. 29 வயது, 5'5" Doctor, working in Ireland தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4321

31. 33 வயது, 5'2" working in a factory in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4310

32. 26 வயது, 5'3" living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4304

33. 32 வயது, 5'3" British Citizen, Working in an IT consultant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4303

34. 33 வயது, 5'0" Graduate Divorced living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4302

35. 32 வயது, 5'2" Graduate, living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4291

36. 29 வயது, 5'2" Graduate working as a Teacher in Srilanka தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4281

37. 31 வயது, 5'4" Graduate, Canadian citizen living in canada தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4265

38. 30 வயது, 5'5" working in a supermarket in a workpermit visa in Uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4102

39. 29 வயது, 5'5" graduate PSW visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4287

40. 29 வயது, 5'5" Asylum seeker divorced தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4278

41. 31 வயது, 5'4" Doctor in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4277

42. 30 வயது, 6'0" British citizen working as a accountant தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4267

43. 30 வயது, 5'5" born and brought up in uk Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3316

44. 25 வயது, 5'7" Graduate student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4270

45. 31 வயது, 5'7" Graduate student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4266

46. 26 வயது, 5'3" graduate Permanent visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1243

47. 35 வயது, 5'6" Accountant in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 826

48. 33 வயது, 5'3" Doctor British citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4248

49. 28 வயது, 5'2" British citizen working as an accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4247

50. 37 வயது, 5'7" Working as an Accountant Permanent residence in UK தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4242

51. 33 வயது, 5'4" divorced Permanent residence in sweden தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4234

52. 29 வயது, 5'4" Graduate living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4228

53. 31 வயது, 5'3" living in Switzerland as an asylum seeer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4189

54. 22 வயது, 5'4" Permanent residence in uk graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4183

55. 27 வயது, 5'4" student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4182

56. 23 வயது, 5'3" France citizen graduate working in uk in bank தகுந்த மண மகனைதேடுகின்றனர் Ref: 4161

57. 36 வயது, 5'4" British citizen working as a accountant தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4150

58. 21 வயது, 5'0" British citizen graduate தகுந்தமணமகனைதேடுகின்றனர் Ref: 4142

59. 24 வயது, 5'2" Student visa graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4125

60. 37 வயது, 5'3" Germany Citizen working as a Graphic designer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4132

61. 29 வயது, 5'7" residing in Srilanka graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4119

62. 27 வயது, 5'1" residing in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4118

63. 23 வயது, 5'0" student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4112

64. 22 வயது, 5'3" student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4100

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

மூசிப் பெய்யும் மாசிப் பனி

ஊரின் நினைவுகள் நெஞ்சில் இருக்க நிலை இங்கும் நினைப்பு அங்குமாக புலம்பெயர் வாழ்வியலில் தாக்கம். இங்கே வெண்பனிப் பூக்களாக பகல் இரவாக வீழ்ந்து பனிச்சேறுகளான வீதிகள். வெண்பனிப் படலம் மூடிய வீடுகள், கட்டடங்கள், மரங்கள் என்பன குருதியை உறையச் செய்யும் குளிர். மாசியிலே இவ்வேளை என்ன இருக்கும் என்று எண்ணிப் பார்க்கும் போது மூசிப் பெய்யும் மாசிப் பனி என்ற தொடரோடு மாசி மாதம் பெய்யும் பனிப்புகார்கள் நினைவில் எழுந்தன. தாயகத்தில் எளிமையான கிராமங்களில் எல்லாம் பனிப்புகார் படிந்த அதிகாலை விடியலைத் தருவது மாசி மாதம் தான். பனித் துகள்களின் நுனிகளில் பளபளக்க காட்சி தரும் புல்வெளிகள். பனிப் புகாரின் ஊடாக கிழக்கே உதிக்கும் சூரியன் கலங்கரை விளக்கின் ஒளி பாய்ச்சல் போல பிரகாசிக்கும் கதிர்கள் கக்கும் ஒளி வெள்ளம் வெளியே வாய் திறந்து பேசும் போதெல்லாம் புகை போல சொண்டுகள் ஊடாக அலை கக்கும் பனிப் புகாரின் ஆதிக்கம்.

மிளகாய், மரவள்ளிக் கட்டை, கத்தரிச்செடி, தக்காளிச் செடி என்றெல்லாம் கன்றுகளாக வயல்கள் தோறும் ஒளியில் பளபளக்கும் குருத்துகளோடு, ஊர்புறச் செம்பாட்டு மண்ணில் நிரையாக அணிவகுத்து நிற்கும் நடுகை நட்ட செடி வகைகள். அவற்றின் அருகே நடப்படும் போது குருத்து முளைகள் கருகி விடக் கூடாது என்பதற்காக குத்தி விட்ட சிறு மரக் கொப்புகள், தாயில் முதுமைக் கோடுகள் தவள ஆரம்பிக்க பிள்ளையில் பருவ வீறு பீறிடுவது போல குழை தள்ளிய வாழைக் கிளைகளைச் சுற்றி வளரும் வாழைக் குட்டிகள். பகல் புழுதியின் படர்வை. மரங்கள், கொடிகள், இலைகள் முதல் ஒவ்வொரு பகுதிகளாக கழுவி வரும் பனித்தண்ணீர், மாரிக்கு வைத்த முட்டைகளை அடை காத்துப் பொரித்த திரளான குஞ்சுகளோடு பவனி வரும் தாய்க்கோழிகள். அவற்றிற்கு தீணி தேடுவதற்கு தாய்க் கோழி பேசும் தனிப் பாசை. அவை புரிந்து கொள்ளும் குஞ்சுகளின் கீச்சொலி. வீச்சுப் பாய்ச்சல், கிளி, புறா, புலினி, காகம், குயில் என்ற குருவி இனங்கள். அணில் முதலான பிராணியினங்கள் என்று எல்லா உயிரினங்களும் மாரிக் குளிர்களுக்குள் இனப்பெருக்கத்தில் அதிகம் ஈடுபட்டதை காட்டும் குஞ்சுகள், குட்டிகளின் கூக்குரல்கள். ஆர வார ஒலிகள். குஞ்சுப் பட்டாளங்களின் மழலை ஒலி ஒவ்வொரு மரப் பொந்துகள் எல்லாமே ஒலிக்கும். இந்த ஒலி கூட ஒரு தெம்மாங்கு இசையாகத் தான் காதுகளில் இனிக்கும்.

அரிசிச் சாக்கின் மூலைகளை ஒன்றாக்கி முக்காடாக தலையில் போத்தபடி வாயில் சுருட்டுப் புகைய தோட்டத்துக்கு நடக்கும் கமக்காரர்கள். சுவீற்றர் போட்ட பெண்கள். இழுப்பில் அவதிப்படும் தொய்வு நோயாளிகள். குலைநட்டுபசளித்த இறுமாப்போடு வெங்காய நடுகை ஊடுடாக நட்ட மிளகாய் கன்றுகள் என்று தயாராக இருக்கும் தோட்டத்தறைகள். உச்ச விலையில் சந்தைக்கு வரும் சொற்ப மரக்கறிகள். கூடுகளில் குஞ்சுகளோடு குலாவும் குருவிகள் இவையெல்லாம் மாசிக்கவிதைகள் தான்.

மாசிப்பனிக்கு கடலில் நுரல் மீன் திரளும். மீன் பெட்டிக்காரரின் கோன் ஒலி வழமைக்கு மாறாக காலை 6 மணி, 7 மணிக்கு ஒலிக்க ஆரம்பித்து விடும். மூன்று நுரல் 25 சதம். பொரியலாக வீடெல்லாம் நுரல் கறி மயம். கள்ளுத்தவணை முன்பாக ரேஸ்ட் விற்கும் பெட்டிக்கடைக்காரரும் நுரைப் பொரியலை விற்பார்கள். தென்னங் குத்தி இருக்கையும், ஆரவார உரையாடலும், நுரல் பொரியல் ருசியும் இணைய கள்ளுப் பிளாவில், ஒன்றுக்கு இரண்டாக கள்ளுத் தவறணை தோறும் காலியாகும். மாசி பிறந்தாலே கோயில்களில் வேள்வி ஆரம்பமாகி விடும். எந்த எந்த வைரவர் கோயில்கள், காளி கோயில்கள் எந்த சனிக்கிழமை கிடாய் வெட்டு என்ற விபரம் மதகுப் பேச்சுக்களில் அடிபடும்.

கருகம்பனை கவுணாவத்தை வேள்விக்கு கனர் எத்தனை கிடாய் வளர்க்கிறார் அவற்றின் நிறம், உயரம் என்ற வர்ணணை எல்லாமே அந்த மதகுப் பேச்சுகளில் அடிபடும். ஆட்டுக் கிடாய் வளர்ப்பதும், நேர்த்திக்கு அதை வைரவர் கோவிலில் வெட்டுவதும், விற்பதும், பங்கு இறைச்சி குடல் ஐந்து, பத்து ரூபாய் என்று விற்பனையாவதும் மாசி பிறந்ததும் அந்த நாட்களில் ஆரம்பமாகி விடும். கூழங்கடாய் என்ற பறவை இறைச்சி கூடுதலாக வீதி வெளிச் சந்திகளில் வருவது அந்த மாதத்தில் தான். கிளிநொச்சி முதலான வன்னிநிலப்பரப்புகளில் இந்த மாதங்களில் கூழங்கடாய் இறைச்சி பிரதானமாக காட்சியளிக்கும். இதனைவிட பன்றி, மான், மரை என்று வேட்டையாடப்பட்ட விலங்கின இறைச்சிகளும் காலை வேளை காட்சிக்கு வரும்.

ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

கூழங்கடாய் என்ற பறவை ஆயிரக்கணக்காக எங்கிருந்தோ பறந்து வந்து இந்தப் பருவத்தில் முத்தையன்கட்டு, கோணாவில், குளங்களில் பட்ட மரங்களில் கூடு கட்டி குஞ்சு பொரிக்கும். கூழங்கடாய் கூடுகளை இரவில் போய் தடியாலே தட்டி விழுத்துகின்ற வேட்டைக்காரர்கள் அவற்றின் குஞ்சுகளை எடுத்துக் கொள்வார்கள். தாய்ப்பறவை எப்படியோ தப்பி விடும். குஞ்சின் இறைச்சி இரண்டு முதல் மூன்று இறாத்தல் வரை தேறும். அதனுடைய ருசியே அலாதி தான். அறுவடைக்கு தயாராக வயல்களில் சாய்ந்து கிடக்கும் நெல்மணிகளை வாரி உண்ணவரும் சிறகைப் பறவைகளும் இந்த மாதத்தில் அடிக்கடி கமக்காரர்களிடையே கெற்றப்போல் அடிக்கு இரையாகும். அவற்றின் இறைச்சியும் தனி ருசி தான். வன்னி மட்டக்களப்பு, திருகோணமலை கமக்காரர்கள் கையில் காசு புறழ்வதும் மாசியில் தான். அறுவடையாகி நெல் மூட்டைகள் விற்பனையாவது அவர்கள் கையில் காசைக் காட்டும்.

இவருக்கு அறுவடைக்கு அருவி வெட்டி சூடடித்து தர கூலிக்கமக்காரர்கள் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை புறங்களிலிருந்தெல்லாம் வருவார்கள். பெரும்பாலானவர்கள் முஸ்லிம் காக்காக்கள் தான். ஒவ்வொரு கங்காணியாரின் தலைமையில் இருபது பேர் வரையிலாக வந்து கமக்காரர்களின் வாடிகளில் தங்கி இரவு, பகலாக வேலை செய்வார்கள். வேலைக்களைப்புக்காக அவர்கள் கஞ்சா புகைப்பதும், அந்தப் புகையினது இன்பப் போதையிலே அவர்கள் தெம்மாங்குப் பாடல்கள் இசைப்பதும், இன்னும் பலவான வசந்தன் கூத்து ஆட்டங்கள் என்பன ஆட்டம் போட்டு பாட்டுப் பாடி இரவிரவாக வாடிகளில் களிப்பதும் ஒரு தனி ஆனந்தம் தரும் காட்சி.

விடியற்காலையில் இவர்கள் வயல்களில் அந்த மூசும் பனி வெள்ளத்தினூடாக வரம்பின் நிரையாக நடந்து பாடியபடியே அருவி வெட்டுவதும் கூட காலை வேளைகளிலே ஒரு களிப்பான காட்சிகள். வயல்களில் காட்சி தரும் உப்பட்டிகள், சூடடிப்புகள், இரவிரவாக சூடடிப்பதற்காக சூட்டைச் சுற்றிச்சுற்றி வரும் டக்ரெர் மிசினின் இரைச்சல்கள், நெல் மூட்டைகளை ஏற்றும் நெல் முதலாளிகளின் லொறிகள், வயல்களில் பூக்கின்ற நெற்கதிர்களை சின்னன் பெரிசு என்ற வித்தியாசமின்றி குடும்பமாக நின்று பொறுக்கும் கூலிக்கமக்காரர்கள். மூசிப் பெய்யும் மாசிப் பனியோடு இவர்களுடைய நிறைவான இந்தச் சேமிப்புக்கள் எல்லாமே மாசி ஒரு நிறைவான மாசம் என்பதைக் காட்டி நிற்கும். அது அந்தக் கால ஊர்த் தோற்றம். இந்தக் காலம் அந்த ஊரின் தோற்றம் எங்கள் எல்லாருக்கும் மாற்றத்தைத் தருவதாகத் தான் இருக்கின்றது. என்ன செய்வது இது தமிழரின் விதியோ?

பாலச்சந்திரன் படுகொலைக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கண்டனம்

தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனது இளைய மகன் பாலச்சந்திரன் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான ஆதாரங்களை பிரித்தானியாவின் சனல் 4 வெளிக்கொணர்ந்துள்ளது. இக்கொலையினை கண்டித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெளியீட்டுள்ள அறிக்கையின் விபரம் பின்வருமாறு.

பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டியங்கும் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள படங்கள் பாலச்சந்திரன் மோதல் நடைபெற்ற போது இடையில் சிக்கி இறக்கவில்லை என்பதனையும் மாறாக சிறீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பின்னரே சுட்டுக் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்பதனை அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றது. பன்னிரண்டு வயதுப் பாலகனான பாலச்சந்திரன் போராளியல்ல அவர் ஒரு பொது மகன் என்பது உலகம் அறிந்த விடயம்.

கைதியாக உள்ள ஒரு போராளியைக் கொல்வதே சர்வதேச சட்டத்தின் கீழ் ஒரு மோசமான குற்றமாக இருக்கும் நிலையில், தாம் கைது செய்து வைத்திருந்த பொது மகனை அதுவும் 12வயது சிறுவனை கொலை செய்துள்ளனர். இது மிக மோசமான யுத்தக்குற்றமாகும். யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக சனல் 4 உட்பட பல சர்வதேச மற்றும் உள்ளூர் ஊடகங்களும் இணையத்தளங்களும் பெருமளவு ஆதாரங்களை கடந்த காலத்தில் வெளியிட்டு இலங்கை அரசின் இனப்படுகொலையை சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்தியிருந்தன.

இந்நிலையில் சனல் 4 வெளியிட்டுள்ள பாலச்சந்திரனின் படுகொலை ஆதாரங்கள் தமிழ் மக்கள் மீது சிறீலங்கா அரசாங்கம் மேற்கொண்டுள்ள கொடூரங்களை மேலும் நிரூபிக்கும் வலுவான சான்றாகவும் அமைந்துள்ளது. இப்படுகொலையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இவை யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள். அது மட்டுமன்றி யுத்தம் முடிந்து 3 வருடங்கள் கடந்த பின்னரும் தமிழினத்தை இல்லாது அழிக்கும் நோக்கில் கட்டமைப்புசார் (structural) இன அழிப்பு பல்வேறு கோணங்களில் திட்டமிட்டு அசுர வேகத்தில் முன்னெடுக்கப்படுகின்றது.

எனவே பாலச்சந்திரனுடைய படுகொலை உட்பட நடைபெற்ற இனப்படுகொலைகள் தொடர்பாக சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்கும், தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கட்டமைப்பு சார் இன அழிப்பைத் தடுத்து நிறுத்துவதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்காமல் அந்த இலக்கை அடைய முடியாது. இந்த இரண்டு விடயங்களையும் செயற்படுத்துவதற்கும் ஏற்ற பாதுகாப்பான சூழலை உருவாக்கும் வகையில் வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் சிறீலங்கா அரசியல் அமைப்பிற்கு வெளியில் சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பில் இடைக்கால நிர்வாகம் ஒன்று உடனடியாக ஏற்படுத்தப்படல் வேண்டும்.

அவ்வாறான நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டால் மட்டுமே சர்வதேச சட்ட மீறல்கள் தொடர்பாக குறிப்பாக மனிதத்துவத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், இனப்படுகெலை தொடர்பாக ஓர் முழுமையான சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணை நடாத்துவதற்குத் தேவையான சாட்சியங்களைத் திரட்டுவதற்குமுரிய பாதுகாப்பான சூழலை உருவாக்கமுடியும். அத்துடன் அசுர வேகத்தில் முன்னெடுக்கப்படுகின்ற கட்டமைப்பு சார் இன அழிப்பையும் தடுக்க முடியும்.

பிரபாகரன்களை நினைத்துவோம்....

குருதியோடிச் சேறாகி
வறண்டுபோய்
வெடித்துக் கிடக்கிறது
எங்களின் நிலம்,

முளைகருகிச் சருகாகி
புல்பூண்டுகளும்,
மக்கி மண்ணேறி
மண்டையோடுகளும்
இன்னபிற அவயத் துண்டுகளும்
கறைபடிந்த துணிகளும்
ஆங்காங்கே
சிதைந்து கிடக்கின்றன,

ஆந்தைகளும்
ஆட்காட்டிகுருவிகளும் கூட
இடம்தேடி
எங்கோ போய்விட்டன,

கடந்தவைகளை மறந்து
அடங்கிக்கொண்டிருக்கிறது
தேசம்.

தழுவல்களும்
கண்ணீரும்
ஒப்பாரிகளும்—என்
சிறுதேசத்தில் மாற்றங்களை
நிகழ்த்த முயன்று
தோற்றுப்போகின்றன,

இழவு முடிந்த
எங்களின் வீட்டு
சுவர்களிலும் தூண்களிலும்
தங்களின் கழிவுகளை கொட்டிவிடும்
வன்மத்தோடுதான்
வாசல்களில் மேடை
போடுகிறார்கள்
கௌதம புத்தரின் வழிப்பிள்ளைகள்.
அவர்களுக்காக,
சாம்பல் மேடுகள்மீது
செங்கம்பளம் விரித்து சாமரையோடு
காத்திருக்கிறார்கள்
உணர்ச்சிகளை தட்டி
வாக்கு வாங்கியவர்கள்.

மழைக்காலத்தின் பூசிகளாய்
எழுந்தோய்கிறது
மனித உரிமை பேச்சுக்களும்
காணொளிகளும்,
வலிகளை சுமத்தி
தங்கள் வசதிகளை
நிர்ணயப்படுத்திக்கொள்கிறார்கள்
வல்லூறுகளின் சிறகுகளில்
ஒளிந்துகொண்டவர்கள்.

வலி பொறுத்திருக்கும்
இந்த காலத்தில் கூடி
ஒரு கருக்கொள்ளுவோம்!!
உருக்குலைந்த உறவுகளின்
உணர்வுகளை உணவாக்கி
கரு வளர்ப்போம் !!

நாளைய
பொழுதொன்றில்,
குருதியோடி
வறண்டு வெடித்த
அந்த நிலத்தில்
மீள் பிரசவிப்பொன்றை
நிகழ்த்துவோம்!
தேசத்தின் சுவர்களை
கட்டியமைப்போம் !!

ஆக்கம்

தெற்கெழு தாசன்(யாழில்)

சமகால தமிழ் சினிமா; அவநம்பிக்கைகள், நம்பிக்கைகள்

இந்திய சினிமா நூற்றாண்டை கடந்து வரும் வேளையில் நமது தமிழ் சினிமாவின் முகம் எப்படியிருக்கிறது? அரிதான சில விதிவிலக்குகளைத் தவிர்த்தால் தமிழ் சினிமாவின் உள்ளடக்கமும் திரைமொழியும் முதிர்ச்சிக்கான எவ்வித அடையாளமுமில்லாமல் இன்னமும் நாடக மரபிலேயே தேங்கிக் கிடக்கிறது. காட்சி ஊடகத்தின் அடிப்படைகளை புரிந்து கொள்ளாமல் இன்னமும் பக்கம் பக்கம் வசனம் பேசிக் கொண்டிருக்கிறது. அக ரீதியான உணர்வுகளை பௌதீகப் பொருட்களை உதாரணம் காட்டி விளக்குவது போன்ற அபத்தங்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. தன்னுடைய காதலியால் பாதிக்கப்பட்டதாக உணர்கிற இளைஞன் பாடுவதில் ஒரு வரி.. 'நெஞ்சம் ஒரு காத்தாடி'... இது காட்சிப்படுத்தப்படும் போது அந்த இளைஞனின் பின்னே காற்றாடி விடும் சிறுவர்கள் காட்டப்படுகிறார்கள். சமீபத்திய 'நீ தானே என் பொன் வசந்தம்' சினிமாவில் வரும் காட்சி இது! எப்படி இருக்கிறது பாருங்கள். இதுதான் இன்றைய தமிழ் சினிமாவின் ஒரு snapshot.

தமிழ் சினிமாவின் சமகால இயக்குநர்கள் தொழில் நுட்பத்தை பயன்படுத்திக் கொள்வதில் மாத்திரம் நவீனத்தை தேடுகிறார்கள். இந்த சவுண்ட் சிஸ்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறோம், 'இந்தக் கேமராவை பயன் படுத்தியிருக்கிறோம்' 'இந்த நடிகர் ஒப்பனைக்காக இத்தனை மணி நேரத்திற்கும் மேல் அமர்ந்திருந்தார்' போன்ற TIRIVIA-க்களே நேர்காணல்களில் புளகாங்கிதமாக சிலாகிக்கப்படுகின்றன. தங்கள் படத்தின் சிறப்பம்சமாக இவற்றையே முன்னிறுத்துகிறார்கள். ஆனால் வெறும் தொழில்நுட்பமும் உழைப்பும் மாத்திரமா சினிமா? காட்சிகளின் அழகியல் மாத்திரமா?. தங்க நிப் கொண்ட பேனா கொண்டு எழுதினால் அது உலக இலக்கியமாகி விடுமா? 'வித்தியாசமாக' உருவாக்கியிருக்கிறோம் என்கிற பாவனையில் முன்வைக்கப்படும் இந்தத் திரைப் படங்களின் உள்ளடக்கமும் மையமும் என்ன வென்று பார்த்தால் காலம் காலமாக தமிழ் சினிமாவிற்கென்று பிரத்யேகமாக உள்ள அதே மசாலா வார்ப்புகள், சம்பிரதாயங்கள், வணிகச் சூத்திரங்கள். இதையே விதவிதமான லேபிள் ஒட்டி மார்க்கெட்டிங் செய்கிறார்கள். சர்வதேச தர அளவிலான சினிமாவுடன் ஒப்பிடக்கூடிய அளவிற்கான தகுதியுடன் ஒரு சமகால சினிமா கூட இங்கு இல்லை. சமகால சமூகப் பிரச்சினையை வணிக நிர்ப்பந்தங்கள் இல்லாமல் யோக்கியமாக முன்வைக்கும் ஒரு வெகுஜன திரைப்படம் கூட இங்கு கிடையாது. இது ஒரு கசப்பான உண்மை.

இதற்காக சினிமா இயக்குநர்களை மாத்திரமே குறை சொல்ல விரும்பவில்லை. இயக்குநர்களுக்குள் ஒளிந்திருக்கும் வணிகர்களும், இந்த வணிகர்களை பின்னாலிருந்து இயக்கும் தயாரிப்பாளர்களும் எது எளிதாக விற்குமோ அதையே உற்பத்தி செய்ய விரும்புகிறார்கள். இந்த நுகர்வுக் கலாச்சார சூழலில் நமது ரசனை மாறினாலொழிய இது மாறப் போவதில்லை. சினிமா ஒரு முழு சமூகத்தையும் வலுவாக பாதிக்கும் காட்சி ஊடகம் என்பது நிரூபண மாகியிருக்கிறது. நம்மை ஆள்பவர்களையே சினிமாவிலிருந்து தேர்ந்தெடுக்குமளவிற்கான அறியாமையுடன் இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் நாம். ஒரு சினிமாவை எப்படி அணுக வேண்டும், எப்படிப் பார்க்க வேண்டும் என்பது பற்றிய புரிதலே நம்மிடமில்லை. அது ஏற்படுத்தும் பாதிப்பு தன்னிச்சையாக நம் ஆழ்மனங்களில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உணராமல் அதை அலட்சியமாகப் பார்க்கும் மனோபாவம்தான் பொதுவாக இருக்கிறது. 'சினிமா ரசனையை கல்வித் திட்டத்தில் சேர்க்க வேண்டும்' என்கிற பாலுமகேந்திராவின் குரல் இந்தச் சமயத்தில் முக்கியமானதாகத் தெரிகிறது.

இந்த துர்ப்பாக்கியமான சூழலில் கடந்த ஆண்டில் வெளியான, ஓரளவுக்காவது கவனிக்கத்தக்க தமிழ் சினிமாக்களைப் பற்றி ஒரு பறவைப் பார்வையில் பார்க்கலாம்.

மாற்றான், தாண்டவம், பில்லா -2, சகுனி போன்ற, வயிறு குலுங்க சிரிக்க வைக்கும் அபத்தமான சண்டைக்காட்சிகளாலும் பஞ்ச் டயலாக்குகளாலும் தங்களின் நாயக பிம்பத்தை தொடர்ந்து கட்டமைத்துக் கொண்டிருக்கும் ஹீரோக்களின் படங்கள் மண்ணைக் கவ்வியது நல்ல சகுனம். மாறாக குறைந்த பட்ஜெட், பரவலாக அறிமுகமாகாத நடிகர்கள், அடிப்படையான தொழில்நுட்பம் போன்றவற்றுடன் இருந்தாலும் சொல்கிற கதையை நேர்மையாக, சுவாரசியமாக சொன்னால் தங்களால் ஜெயிக்க முடியும் என்பதை நிரூபித்திருக்கிறார்கள் சில புதுமுக இயக்குநர்கள்.

காதலில் சொதப்புவது எப்படி? (பாலாஜி மேர்கன்), பீட்சா (கார்த்திக் சுப்பராஜ்), அட்டகத்தி (ரஞ்ஜித்), நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம் (பாலாஜி தரணீதரன்), மதுபானக் கடை (கமலக்கண்ணன்) போன்ற அறிமுக இயக்குநர்கள் தங்களின் பிரத்யேக திறமையால் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

மேலும் திறமையான முறையில் உருவாக்கப்பட்ட சிறுமுதலீட்டுப் படங்கள் வரவேற்பினைப் பெறுவதும் ஸ்டார் நடிகர்கள் நடித்த மசாலாக்கள் தோற்றுப் போவதையும் வைத்து தமிழ் சினிமாவில் புரட்சி ஏதேனும் ஏற்பட்டு விட்டது என்று கருதுவதற்கு இடமில்லை. இது ஒரு தற்கால நிலையாக இருக்கலாம். வருகிற வருடத்தில் பெரிய பட்ஜெட் படங்கள், பஞ்ச் டயலாக் நடிகர்களின் படங்கள் தொடர்ந்து வெற்றி பெற்றால் நிலைமை தலைகீழாக மாறலாம். 80களில் தமிழ் சினிமாவில் நிகழ்ந்த மாற்றத்தை குழி தோண்டிப் புதைத்த 'சகலகலா வல்லவனை' நினைவு கூரவும்.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய இன்னொரு விஷயம் டிஜிட்டல் புரட்சி. பிலிம் சுருளுக்கு ஆகும் செலவை கணிசமாக குறைக்கிறது டிஜிட்டல் யுகம். வழக்கு எண். 18/9 என்கிற திரைப்படம் கேனான் 5D என்கிற ஸ்டில் கேமிராவினால் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒரு திரைப்படம் உருவாவதற்கு பெரும் செலவை கோரி நிற்பதனால் சிறுமுதலீட்டுத் தயாரிப்பாளர்களுக்கு ஏற்படும் தயக்கத்தை டிஜிட்டல் வசதி குறைக்கிறது.

தமிழ் சினிமாவில் நெடுங்காலமாக 'கேன்சர்' என்றொரு வியாதி படாதபாடு பட்டுக் கொண்டிருந்தது. இப்படி திடீரென்று ஏதாவது ஒரு வியாதியின் பெயர் தமிழ் சினிமாவிற்கு பிடிக்க ஆரம்பித்து விடும். உடனே நாயகர்களுக்கு அந்த வியாதி வந்து விடும். ஸ்கீஸோபொனியா, ஷார்ட் டைம் மெமரி லாஸ், அம்னீசியா என்று. இந்த வரிசையில் சமீபத்திய வியாதி Bipolar disorder. இந்தக் குறைபாட்டை கதையின் உள்ளீடாகக் கொண்டு இரண்டு திரைப்படங்கள் வெளியாகின. தனுஷ் நடித்த 3, தேவையற்ற பதின்ம காதல் காட்சிகளைத் தொடர்ந்தாவது நாயகன் இந்தக் குறைபாட்டில் அவதிப்படுவதைக் காட்டியது. லஷ்மி ராமகிருஷ்ணன் இயக்கிய 'ஆரோகணம்' இன்னமும் மோசம். தொலைக்காட்சி சீரியல் போன்ற மெலோ டிராமா காட்சிகளைத் தொடர்ந்து, திடீரென்று நினைத்துக் கொண்டதைப் போல வியாதியைப் பற்றிய மருத்துவரின் ஆங்கில உபன்யாசத்துடன் படம் முடிகிறது. அகரீதியான சிக்கல்களை தேவையற்ற விஷயங்கள் இல்லாமல் உளவியல் பார்வையில் தீவிரமாக அணுகிய ஒரு திரைப்படமாவது தமிழில் உள்ளதா என்பதே சந்தேகமாக உள்ளது. இதே மாதிரியான குறைபாட்டை வேறு ஒரு நோக்கில் அணுகின ஒரு திரைப்படத்தைப் பற்றி கட்டுரையின் இறுதியில் பார்க்கலாம்.

பாலாஜி மோகனின் 'காதலில் சொதப்புவது எப்படி?' பதின்ம வயதுகளைத் தாண்டின காதலில் ஏற்படும் பிரச்சினைகளை எள்ளலோடும் ஒரு தீவிரமற்ற தன்மையிலும் முன்வைத்தது. குறும்பட உலகிலிருந்து திரைப்பட உலகிற்கு வந்து வெற்றி பெற்றதின் மூலம் ஒரு முன்மாதிரியையும் பல இளைஞர்களுக்கு நம்பிக்கையும் ஏற்படுத்தியது இத்திரைப்படம். குறும்படத்தையே இழுத்து நீளமாக்கியதின் மூலம் திரைக்கதையில் ஏற்பட்ட தெர்ய்வை ஒரு குறையாக இதில் காணலாம். மேலும் பிரதான பாத்திரம் திடீரென்று கேமிராவை நோக்கி பார்வையாளர்களிடம் உரையாடுவது, பெண்களின் மனவோட்டங்கள் குறித்து நாயகன் தொடர்ந்து உபன்யாசம் செய்தது போன்றவை சில தருணங்களில் சுவாரசியமானதாக இருந்தாலும் சலிப்பூட்டுவதாகவே இருந்தது. இதே மாதிரியான காதலில் ஏற்படும் ஆண்-பெண் உறவுச் சிக்கலை தீவிரமான பார்வையில் சொல்லிச் சென்றது கௌதமின் 'நீதானே என் பொன் வசந்தம்'. இந்த இயக்குநரின் முந்தைய திரைப்படங்களில் ஒன்றான 'விண்ணைத் தாண்டி வருவாயா'வின் நீட்சி அல்லது இன்னொரு பரிமாணம் என 'நீதானே என் பொன் வசந்த'த்தை சொல்லலாம். ஏறக்குறைய கடைசிக் காட்சி வரை இருவரின் ஈகோவும் சளைக்காமல் பயணம் செய்தது. சமந்தா இதில் அருமையாக நடித்திருந்தார்.

இந்தக் காதல் வரிசையில் முக்கியமான தொரு திரைப்படம் 'அட்டகத்தி'. காதல் என்கிற விஷயத்தை முக்கியமான கச்சாப்பொருளாக எத்தனை ஆண்டுகளானாலும் விடாப்பிடியாக வைத்துக் கொண்டு பயணிக்கிறது தமிழ் சினிமா. ஆனால் இதை வைத்தாவாது உருப்படியான ஒரு சினிமாவையாவது உற்பத்தி செய்திருக்கிறதா என்றால் இல்லை. காதல் குறித்து அதுவரை தமிழ் சினிமா ஏற்படுத்தி வைத்திருக்கும் அத்தனை பிம்பங்களையும் அடித்துத் துவைத்திருக்கிறது 'அட்டகத்தி'. 'காதல்-என்றது ஒருத்தனுக்கு ஒரு முறைதான் வரும்' என்று லாலாலா...பின்னணியுடன் வரும் அபத்தமான வசனங்களை எள்ளி நகையாடியிருக்கிறது 'அட்டகத்தி'.

நாம் காலையில் உபயோகிக்கும் பற்பசை முதல் இரவில் உபயோகிக்கும் ஆணுறை வரை அனைத்தையும் தீர்மானிப்பது நம்மை ஆளும் அரசியல் என்பதை சொல்கிறது மதுபானக் கடை. இதிலும் கிளைக்கதையாக ஒரு காதல் உண்டு. மது விற்பனை மூலம் பெருமளவிற்கான வருவாயை ஈட்டும் இதே அரசு, 'மது அருந்துவது உடல் நலத்திற்கு கேடு' என்று பிரச்சாரம் செய்வது முரண் நகைக்கு சிறந்த உதாரணம். இந்தப் பிரச்சாரத்தை இப்போது திரைப்படக் காட்சிகளிலும் போட்டுத் தொலைக்கிறார்கள். தமிழன் அருந்தி வந்த 'கள்' இன்று காணாமற் போய் அந்த இடத்தை விஸ்கியும் பீரும் இட்டு நிரப்பியிருக்கின்றன. பொதுக் கழிவறை போன்ற இடங்கள்தான் இன்று தமிழகத்தின் மதுக்கூடங்களாக நுரைத்து வழிகின்றன. மது அருந்துபவனை இதற்கு மேலும் அவமானப்படுத்தி விட முடியாது. என்றாலும் எல்லாவற்றையும் சகித்துக் கொள்வதுபோல இதையும் சகித்துக் கொண்டிருக்கிறான் தமிழன். கதை என்று எதுவுமில்லாமல் மதுபானக் கடையில் நிகழும் சம்பவங்களையே கோர்வையாக தொகுத்து 'மதுபானக் கடை'யாக உருவாக்கியிருக்கும் வகையில் முக்கியமானதொரு காட்சி ஊடக ஆவணமாக திகழ்கிறது 'மதுபானக்கடை'.

வழக்கு எண் 18/9 ஒரு குறிப்பிடத்தகுந்த முயற்சி என்றாலும் பெண்களின் மீதான வன்முறை, வர்க்க அரசியல், நகர்மயமாயதலின் துயரம், சமகால காதல் என்று பல விஷயங்களை ஒரே திரைப்படத்தின் மூலமாக உணர்த்த வந்ததில் ஓர் ஆவணப்படத்தின் வாசனையும் பிரச்சார தொனியும் வந்து விட்டன. 'காதல்' படம் தந்த வெற்றியினாலோ என்னவோ, `Based on a True Story' என்கிற கிளிஷேவில் பாலாஜி சக்திவேல் மாட்டிக் கொண்டிருப்பதாக தோன்றுகிறது. வசந்தபாலனின் 'அரவானும்' கவனிக்கத்தகுந்த முயற்சி. 18-ம் நூற்றாண்டின் தென்தமிழகத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் வாழ்வியலை பதிவாக்கியிருந்தது. ஆனால் சொதப்பலான திரைக்கதையால் அத்தனையும் வீணாகியது. மேலும் அந்தக்காலக்கட்ட சித்தரிப்புகளில் நம்பகத்தன்மையில்லை. காவல்கோட்டம்' என்கிற புதினத்தின் ஒரு பகுதியிலிருந்து திரைக்கதையை கட்டி எழுப்பியிருப்பதின் மூலம் தமிழ் இலக்கியத்திற்கும் சினிமாவிற்கும் தொடர்பு ஏற்படுத்தியிருக்கும் நல்ல முயற்சிகளில் இதுவொன்று.

ஹாலிவுட் நீண்ட காலமாக மென்று துப்பிக் கொண்டிருக்கும் 'ஹாரர்' வகைமையிலான திரைக்கதையைக் கொண்டிருந்தது 'பீட்சா'. படத்தில் தாக்கபிழையும் நம்பகத்தன்மையற்ற தன்மையும் இருந்தாலும் படத்தைப் பார்த்து முடித்த பிறகுதான் அவற்றை பற்றி யோசிக்க வைக்குமளவிற்கு சுவாரசியமான திரைக்கதையின் மூலம் கவனத்தை ஈர்த்திருந்தார் கார்த்திக் சுப்பராஜ்.

(அடுத்த வாரமும் வரும்)

- சுரேஷ் கண்ணன்

SRI KANTH & CO SOLICITORS



We practise in the following areas of law:

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing – Commercial
- Landlord & Tenant
- Property Sale & Letting
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

557 High Road, Wembley, Middlesex, HA0 2DW
www.srikanthsolicitors.co.uk
Tel: 020 8795 0648 Mob: 07831 195 979
Fax: 020 8795 0649

ஒரே படத்தில் இரு கதைகள்.. ஆட்டிசம் நோயால் பாதிக்கப்பட்ட சிறுவனை வளர்த்தெடுப்பது.. இன்னொரு பக்கம் என்கவுண்ட்டரை வளர்ப்பது..! ஒரு பக்கம் அமிலத்தையும் இன்னொரு பக்கம் தேனையும் நனைத்துக் கொடுத்திருக்கிறார்கள். தேன் இனிக்கிறது.. இருந்தாலும் படத்தை முழுவதுமாகக் கொண்டாடவிடாமல் அமிலம் தடுக்கிறது..!

கிஷோரின் மனைவி பிரவசத்திலேயே இறந்துபோய் விட மகன் மட்டும் உயிர் பிழைக்கிறான். ஆனால் ஆட்டிசம் நோயால் பாதிக்கப்பட்டு அரை மனிதனாக..! ஊரில் தனது அம்மாவிடமே அவனை வளர்க்க அனுமதித்து விட்டு கிஷோர் சென்னையில் பொறுப்பான போலீஸ் அதிகாரியாக இருக்கிறார்.. அவ்வப்போது மேலிடத்து உத்தரவுக்கேற்ப என்கவுண்ட்டர்களையும் செய்கிறார். பிரதீப் ராவத்தை என்கவுண்ட்டர் செய்ய எத்தனித்த நேரத்தில் அவர் தப்பிவிட அடியாள் ஒருவனை மட்டுமே போட்டுத் தள்ளி தனது டிபார்ட்மெண்ட் பாசத்தைக் காட்டுகிறார். இந்த நேரத்தில் அவரது அம்மா இறந்துவிட மகனை தானே சென்னையில் வைத்துக் கவனித்துக் கொள்வதற்காக அழைத்து வருகிறார்.

மகனது நோயையும் மீறி அவனை படிக்க வைக்கும் முயற்சியில் ஈடுபடுகிறார். அவனுக்குள் குதிரை பற்றியும், ஓடுதல் பற்றியும் ஒரு பார்வை இருப்பதையறிந்து அதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறார்.. கோச் ராஜ்கபூர் பயிற்சியளிக்க மறுக்கிறார். பெரும் பிரயத்தனப்பட்டு பையனை பயிற்சியில் ஈடுபடுத்துகிறார்.. தொடர்ந்து மாரத்தான் ஓட்டப் பந்தயத்தில் அவனை கலந்து கொள்ள வைக்க பெரும் முயற்சி எடுக்கும் அதே நாளில் பிரதீப் ராவத்தையும் சந்திக்க நேர்கிறது.. என்ன செய்கிறார்..? என்ன செய்தார் என்பதுதான் படம்..!

நடிப்பு என்னும் யுத்தத்தில் முதலிடம் அந்தச் சிறுவன் தான். ச்சும்மா பையனாகவே நடி என்றாலும் நடித்து விடலாம். ஆனால் எதுவுமே தெரியாத்துபோல் கடைசி வரையிலும் தனது முகத்தைக் காட்டி, சைகைகள் செய்து.. அப்பாவியாய் இருந்து.. கடைசியில் "அப்பா" என்று கூப்பிடும்வரையிலும் ஒரு நோயாளி சிறுவனை அப்படியே பிரதிபலித்திருக்கிறார் அந்தப் பையன்.. பாராட்டுக்கள்.. வாழ்த்துகள்..! வனயுத்தத்தில் வீரப்பனாக வந்து அடுத்த வாரமே இப்படியொரு பாத்திரம் கிஷோருக்கு..! இருவித ரோல்கள்.. என்கவுண்ட்டருக்கு ஏற்ற முகம்தான் என்றாலும் பள்ளிக் கூடத்தில் பையனோடு பையனாக அமர்ந்திருக்கும் அந்த முகமும் அப்பாவியான, சங்கடமான தந்தையும்தான் பிடித்திருக்கிறது..!

நன்கு திட்டமிடப்பட்ட திரைக்கதையில் பரோட்டா சூரியின் கதைதான் கொஞ்சம் எரிச்சலைத் தருகிறது.. அவருடைய பால்ய வயது காதலியை ஒரேயொரு பெயரை வைத்தே கண்டுபிடிப்பது போலவும், அதுவும் அதே பள்ளியில் வேலை செய்வது போலவும் அவர் அறியும் காட்சியெல்லாம் இந்தப் படத்துக்கே ஒரு திருஷ்டிப் புள்ளி.. இன்னும் கொஞ்சம் மெனக்கெட்டிருக்கலாம்..!

கிஷோர் தனது பையனுக்காக இத்தனை கஷ்டங்களையும் இத்தனையாண்டுகள் கழித்து ஏன் படுகிறார்.. என்பதுதான் படத்தின் மிகப் பெரிய கேள்வி..! சிறு வயதில் இருந்தே அந்தப் பையனை இதுபோலவே வளர்த்திருந்தால் நிச்சயம் அந்த வயதில் அவர் என்கவுண்டர்களை மட்டுமே செய்துகொண்டிருக்கலாம்..! லேட்டாக வந்திருந்தாலும், பையனை வளர்த்தெடுத்துவிட்டதாக பையனே சொல்வது சினிமாட்டிக் டிராமா என்றே சொல்ல வேண்டும்..! அதுவும் கிளைமாக்ஸ் சண்டை காட்சிகளெல்லாம் பழைய சினிமாக்களை அடையாளம் காட்டினாலும் ரத்னவேலுவும், இயக்குநர் குமாரவேலனும் சேர்ந்து வேறு நினைப்பிற்குள் நம்மை ஆழ்த்திவிடாமல் காப்பாற்றியிருக்கிறார்கள். யுவன் யுவதியில் செஷல்ஸ் தீவின் இயற்கை அழகை மட்டுமே காட்ட வேண்டும் என்று நினைத்து கதையில் கோட்டைவிட்டு நம்மை பொருமவைத்தார் குமாரவேலன். ஆனால், இதில் இரண்டையும் சரிசமமாக கலந்து கட்டிக் கொடுத்திருக்கிறார்..!

படத்தின் பிற்பாதியில் வரும் முதல் அரைமணி நேரம் தான் படத்தின் போக்கையே மாற்றுகிறது. இது போன்று குழந்தைகள் உள்ள பெற்றோர்கள் சத்தியமாக இந்தப் படத்தைப் பார்த்தால் அழுதே விடுவார்கள்.. அவர்களின் உணர்ச்சிகளை அப்படியே அப்பட்டமாக பிரதிபலித்திருக்கிறார் இயக்குநர்..!

ராஜ்கபூரின் அலட்சியம்.. கிஷோரின் லட்சியம்.. இந்த இருவரின் வைராக்கியம்.. பையன் முதலில் தயங்கினாலும், பின்பு ஏதோ தோன்ற ஓடத் துவங்கி.. இறுதியில் வெற்றி பெறும் வரையிலும் சினிமாவுக்காகவாச்சும் ஓடக் கூடாதா எனதெல்லாம் நினைக்க வைத்துவிட்டது இயக்கம்..! வெல்டன்..! இசை விஜய் ஆண்ட்டனி.. "அன்னையின் கருவில்" பாடல் மனம் கலங்க வைத்தாலும், 'போலீஸ்' பாடல் துள்ளவும் வைத்திருக்கிறது..!

ஆட்டிசம் நோய் பற்றிய புரிதலையும், நோய் தாக்கிய குழந்தைகள், அவர்களுடைய பெற்றோர்களுக்கு ஒரு ஊக்கத்தையும், விழிப்புணர்வையும் இப்படம் உருவாக்கியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை..! அதே சமயம் சமூகக் கேடான, அரசு இயந்திரத்தின் அப்பட்டமான ஜனநாயக மீறல் என்று நினைக்க வைக்கும் என்கவுண்ட்டரையும் தொட்டுக் காண்பித்திருப்பது இந்தப் படத்திற்கு எதற்கு என்றுதான் எனக்குப் புரியவில்லை..இரண்டையும் வேறு வேறாகவே எடுத்திருக்கலாம்.. முதல் என்கவுண்ட்டர் காட்சி எடுத்தவிதம் மிகப் பிரமாதம். அதை வைத்தே தனிக் கதை எடுத்தால்கூட அதுவும் நன்றாகத் தான் இருந்திருக்கும்..! இப்படியொரு இடியாப்பச் சிக்கல் வேலையில் இருக்கிறவருக்கு இந்த அளவுக்கு கஷ்டமான குடும்பச் சூழல் என்று சொல்லி பரிதாபம் ஏற்படுத்த முனைந்திருக்கிறார் இயக்குநர்.. ஆனால் அதில் பாதியளவுதான் வெற்றி கிடைத்திருக்கிறது..!

நிச்சயம் ஒரு முறைபார்க்க வேண்டிய படம்..!

- *உண்மைத்தமிழன்*

சினித்துளி

ரஜினி இல்லை விஜய்!

'மாற்றான்' படத்தை தொடர்ந்து கே.வி.ஆனந்த் அடுத்து ரஜினியை வைத்து ஒரு படத்தை டைரக்ட் செய்யப் போவதாக தகவல்கள் வெளிவந்துகொண்டிருந்த நிலையில் இப்போது அவர் விஜய்யை வைத்து ஒரு படம் இயக்கவிருப்பதாக தெரிவித்திருக்கிறார். தலைவா, ஜில்லா ஆகிய படத்தைத் தொடர்ந்து விஜய் நடிக்கும் இந்த புதிய படத்தை ஏ.ஜி.எஸ் நிறுவனம் மிகப் பிரம்மாண்டமாக தயாரிக்க திட்டமிட்டுள்ளது. அசின் நாயகியாக நடிக்கிறார்.

கோச்சடையான் படத்திற்குப் பிறகு நடிப்பதாக முன்னர் பேசப்பட்டாலும் தான் சிறிது காலம் ஓய்வெடுக்கப்போவதாக ரஜினி சொல்லி விட்டதால் இப்போது ரஜினிக்கு பதிலாக விஜய்யை வைத்து படத்தை எடுக்கத் திட்டமிட்டிருக்கிறார்கே.வி.ஆனந்த்.

ஓநாயும் ஆட்டுக்குட்டியும்!

'முகமூடி' படம் கொடுத்த பெரிய அளவிலான தோல்வி டைரக்டர் மிஷ்கினை சொந்தமாக புரொடக்ஷன் கம்பனி தொடங்க வைக்கும் அளவுக்கு கொண்டு சென்று விட்டது. அதன் விளைவாக சில நாட்களுக்கு முன்பு தனது தனது பேனரில் தயாராகும் முதல் படத்தை ஆரம்பித்திருக்கிறார். `lone wolf' என்ற அவருடைய தயாரிப்பு நிறுவனத்தின் சார்பில் தயாரிக்கப்படும் 'ஓநாயும் ஆட்டுக்குட்டியும்' படத்தின் தொடக்க விழா சென்னையில் இன்று அவரது அலுவலகத்தில் நடந்தது.

இந்தப் படத்தில் ஹீரோவாக டைரக்டர் பாலாஜி சக்திவேலின் "வழக்கு எண் 18/9" படத்தின் மூலம் ஹீரோவாக அறிமுகமான ஸ்ரீ நடிக்கிறார். ஓப் பனிங் எல்லாம் சரியாத்தான் இருக்கு... ஆனா ப்னிஷிங்...? வெயிட் பண்ணிப் பார்ப்போம்.

பழையபடி சரண்...!

இயக்குனர் சரண் காதல் மன்னன், அமர்க்களம், பார்த்தேன் ரசித்தேன், ஜெமினி, வசூல்ராஜா, அசல் என 10க்கும் மேற்பட்ட திரைப்படங்களை இயக்கியிருக்கிறார். இவர் கடைசியாக நடிகர் வினயை வைத்து ஓர் படம் இயக்கியிருந்தார். தற்போது மீண்டும் வினயை வைத்து 'செந்தட்டி காளை சிவத்த காளை' எனும் திரைப் படத்தை இயக்கி கொண்டிருக்கிறார். இந்தப்படத்தில் வினய் இரட்டை வேடங்களில் நடிக்கிறார்.விரைவில் வெளிவரவிருக்கும் படத்தில் ழைய சரண் தெரிவாரா ?

இணையும் அண்ணன்-தம்பி!

ஜெயம், எம்.குமரன் சன் of மகாலட்சுமி, உனக்கும் எனக்கும், சந்தோஷ் சுப்ரமணியம், தில்லாலங்கடி, வேலாயுதம் என வரிசையாக ஆறு வெற்றிப் படங்களைக் கொடுத்தார் இயக்குனர் ஜெயம் ராஜா. ஐந்து படங்களில் தனது தம்பியான ஜெயம்ரவியை வைத்து இயக்கியிருந்தார்.ஆறாவதாகவிஜய்யுடன்சேர்ந்து'வேலாயுதம்' படத்தை இயக்கினார். இந்தப் படம் மாபெரும் வெற்றியடைந்தது. தற்போது மீண்டும் தன் தம்பியை வைத்து படம் இயக்க முடிவு செய்துள்ளார் ராஜா.

தற்போது இந்த படத்தின் பிற நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் தேர்வு பணி நடந்து கொண்டிருக்கிறது.

Physics & Maths Tuition

KS3, GCSE, AS/A2-Level (All examining boards)

Tutor having over six years of experience in secondary level and university teaching.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

Contact

Siva (B.Sc.-Special., M.Sc., MBA.)

Mobile : 07503 210 287 (Middlesex)

Arumpukal Marriage Brokers

Tel : 020 8682 1057

Mob: 07889 930 130 | Fax : 020 8682 1057

E.Mail : arumpugall@gmail.com

Lycamobile

Call the world for less



Sri Lanka Favourite

Get **1500** minutes

To call your favourite Hutch Number

or

Get **1000** minutes

To call your favourite Sri Lankan Number (Landline or Mobile)

Just **£15**

Valid for 30 Days

To activate : Dial *139*7515*<SL number with country code># e.g. *139*7515*0094789555666#
Text 7515 <SL number with country code> to 3535 e.g. 7515 0094789555666 to 3535

For your FREE Lycamobile SIM visit www.lycamobile.co.uk or call 020 7132 0322

Buy and top up online or in over 115,000 stores

Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears

Lycamobile Sri Lanka Favourite Number bundle ('the offer') inclusive allowances are for calls for up to three subscribed Lycamobile numbers in the UK to one standard Sri Lankan landline or mobile number only. Other usage and usage in excess of your allowance will be charged at standard rates. The offer is valid for 30 days from the date of purchase. A customer may have up to three offers on their account at any one time. Any remaining allowance after the validity period will not be carried over into the next period should the customer renew their bundle. Customers will be charged for each sharers per 30 days. Lycamobile reserves the right to replace or amend the offer or these terms and conditions or to withdraw the offer at any time on reasonable notice. Note that promotional credit (credit which Lycamobile has given to customers for free) cannot be used towards purchasing a bundle or adding or changing sharers. The offer is for non-commercial, private, personal use only. Lycamobile reserves the right to withdraw or suspend the offer or to disconnect you if we suspect that the offer is being used for non-commercial purposes. Promotional period: the offer is valid from 20th January 2013 until 31st March 2013. These Terms & Conditions are valid as of 20th January 2012.

Lycamobile
Call the world for less

Southall Travel

Redefining Travel

Why travel with **Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன் சவுத்ஹோல் டிராவல் மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

Call Centre open 24 hours **0844 855 8017**

ABTA 80626

Think Travel, Think Southall Travel

www.southalltravel.co.uk

ATOL 5553 PROTECTED